

# தமிழரசு

மலர்:5 இதழ்:14
16-1-1975

# உழவர் சிறப்பிதழ்





# வறட்சியும் துயர்துடைப்பும்!

அருமைத் தமிழக உழவர் பெருமக்களே! 'பசிப்பிணி மருத்துவர்கள்' என்ற சிறப்புப் பெயர் பெற்றுள்ள உங்களுக்கு-வரலாறு காணாத வறட்சியின் வேதனை தாளாமல் வாடி இருக்கும்இந்த நேரத்திலே-ஆறுதல் கூறிடவும், வறட்சித்துயர் துடைப்புக்காகத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள பணிகளையும், வறட்சிக்கு எதிராகப் போராடி வரும் உங்களுக்குத் தமிழ்நாடு அரசு அளிக்கும் சலுகைகளையும் எடுத்துக் கூறிடவும், 1975-ஆம் ஆண்டின் ''புத்தாண்டு வாழ்த்து'', ''பொங்கல் வாழ்த்து'' ஆகியவைகளைத் தெரிவித்துக் கொள்ளவும் விரும்புகிறேன்.

உயர்விளைச்சல் தரும் நெல் இரகங்களையும், உயர் விளைச்சல் தரும் சிறு தானிய இரகங்களையும்-வறட்சியும் புயலும் அடுத்தடுத்துத் தோன்றித் தாக்கி வந்தபோதிலும்-வேளாண்மைத் துறையினர் பரிந்துரைத்த முறையில் பயிரிட்டு, நெடுங்காலமாக உணவுதானிய உற்பத்தியில் பற்றுக்குறை மாநிலமாக இருந்த தமிழகத்தைக் கடந்த 7 ஆண்டுக் காலத்தில் தன்னிறைவு பெறச் செய்ததுடன், சென்ற 2 ஆண்டுகளில் கேரளம், கருநாடகம், மராட்டியம், குஜராத், மேற்கு வங்காளம் ஆகிய மாநில மக்களின் பசிப்பிணி தீர்த்திட அரிசி, கம்பு, சோளம், கேழ்வரகு ஆகியவைகளைத் தாராளமாக வழங்கிடும் அளவுக்கு மிகை மாநிலமாகவும் ஆக்கியதற்காக, உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உணவு உற்பத்தியைப் பெருக்க இன்றையத் தமிழ்நாடு அரசு இதுகாறும் எடுத்துவந்துள்ள முனைப்பான நடவடிக்கைகளின் முழுப்பலனும் நமக்குக் கிடைக்காமல் போகும்வகையில், தமிழகமெங்கும் பருவமழை பொய்த்து, வறட்சி நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டு அங்கிங்கெனாதபடி எங்குமே பொங்கல் திருநாள் பூரிப்பு மலிந்திட நடந்தது எனக்கூறிக் களித்திட இயலாதவாறு, தமிழகத்தின் பலபகுதிகள் வறட்சியின் கொடுங் கரத்தால் சுற்றி வளைக்கப்பட்டு விட்டன.

பச்சைப் பட்டாடை புனைந்து நிலமகள் நடம் புரிந்த கழனிகள் பல காய்ந்து கிடப்பதைக் காண்கின்றோம்!

'மழை' எனும் வைரத்தொங்கல் அணிந்து அடிக்கடி காட்சிதரும் வான மங்கை, கைம்மைக் கோலம் பூண்டு-கண்ணீரையும் மிச்சமின்றி உகுத்துவிட்ட வறண்ட கண்களுடன் சோர்ந்திருக்கும் நிலை காண்கின்றோம்!

வளைந்தோடும் பாம்புக் கூட்டங்கள்போல் நெளிந்தோடும் வாய்க்கால்கள்-சிற்றாறு-பெருநதி அனைத்துமே நம் கண்களுக்குப் பாம்புகளாய்த் தோன்றுகின்றன!

'இந்த நூற்றாண்டில், இந்த ஆண்டுபோல் மழை பொய்த்த ஆண்டே கிடையாது' என வானிலை விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டுதான், கடந்த 100 ஆண்டுகளிலேயே மிகவும் குறைவான மழைபெய்த ஆண்டாகும்!

பல இடங்களிலே நன்செய் நிலங்கள் பாளம் பாளமாக வெடித்துக் கிடக்கின்றன! புன்செய் தானியப் பயிர்கள் கருகிக் கிடக்கின்றன! அவைகளைக் காணும்போது, உங்கள் கண்களில் மட்டுமல்ல என் கண்களிலும் கண்ணீர் சுரக்கின்றது!

எனவே, இந்த ஆண்டில் உணவு உற்பத்தியில் பெரும் துண்டு விழும் என்று அஞ்சத்தக்க நிலை ஏற்பட்டுவிட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தபோது-அதனால் ஏற்பட்ட துயரைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தவித்தபோது ஒருமுறை, 1969-ல் இயற்கையின் சீற்றம் தமிழகத்தைத் தாக்கியது.

கடுமையான அந்த வறட்சியையும் எதிர்த்திடத் தமிழக அரசு தனது வலிமை மிகுந்த கரங்களை உயர்த்தியது.

எங்கும் வறட்சி நிவாரணப் பணிகள்! கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகள்!

வெறும் உதவிப்பணிகளாக இல்லாமல், எதிர்காலத்திற்குப் பயன்தரத்தக்க பணிகளை நிறைவேற்றத் தமிழக அரசு பாடுபட்டது! அப்பொழுது தாக்கிய வறட்சியிலிருந்து மக்களைக் காத்திட இராணுவ நடவடிக்கை போல், வறட்சி நிவாரண நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டது!

அதன்பயனாய் வறட்சியைப் புறங்கண்டோம்-வாகை சூடினோம் - இயற்கையின் கோபத்தை எதிர்த்து!

அதே 1969-இப்போது அடிபட்ட பாம்பு போல், சீறிச்சினந்து, தமிழ்மக்களின் வாழ்வை நஞ்சாக்க, படம் உயர்த்தி நிற்கிறது! 'அந்தப் பாம்பின் தலையில் நமது அழுத்தமான பாதத்தால் மிதிப்போம்' எனச் சூளுரைத்து-காலுயர்த்தி எழுந்து நிற்கிறது தமிழ்நாடு அரசு!

அண்மையில் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில், தமிழக வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு வயல்களில் மேடிட்டுக் கிடந்த மணலையெல்லாம் அரசின் செலவிலேயே தூர்வாரி-உழவர் பெருங்குடி மக்களின் மகிழ்ச்சியைப் பரிசாகப் பெற்றது தமிழ்நாடு அரசு! இப்போதும் இந்த வறட்சியை வெற்றி



காணத் தமிழ்நாடு அரசு வரிந்து கட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டது!

'வறட்சி தலை நீட்டுகிறது' என்றதுமே, ஐம்பதுகோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து-பணிகளைத் தொடங்கிவிட்டோம்!

ஐம்பது கோடி ரூபாயில் வறட்சிப் பகையை முறியடிக்க நிவாரணப் போர்க் கருவிகள் தயாராகின்றன!

வறட்சி நிலைமையிலிருந்து மீளவும், வறட்சியின் கொடுமையால் வேதனைக்குள்ளான உங்களுக்கு உதவவும் தமிழ்நாடு அரசு பின்கண்ட சலுகைகளை அளித்துள்ளது.

1. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அறிவிக்கப்படும் பகுதிகளில் நன்செய், புன்செய் நிலங்களுக்கு நிலவரி, உள்ளூர் தீர்வை (Local cess), உபரி தீர்வை (sur-charge) ஆகிய மூன்றும் முழு அளவில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

2. உள்ளாட்சி மன்றங்களுக்குச் சேர வேண்டிய தீர்வை, உபரிதீர்வை ஆகியவற்றின் வசூல் தள்ளிவைக்கப்படுவதால், உள்ளாட்சி மன்றங்களின் நிதி நிலைமை பாதிக்கப் படாமல் இருக்கும் பொருட்டு ஈட்டுத்தொகை அரசினால் அளிக்கப்படும். இதுதவிர, உள்ளாட்சி மன்றங்களுக்கு வசூலில் கிடைத்திருக்க வேண்டிய தொகையில் ஒருபகுதியும் ஈடுசெய்யப்படும்.

3. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அறிவிக்கப்படும் பகுதிகளில் நிலவரி நிலுவை வசூலும், அடுத்த பசலிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

4. இவ்விரு வகை வரி தள்ளி வைப்பு நடவடிக்கைகளின் காரணமாக, உழவர் பெருமக்களுக்கு ஏறத்தாழ 10 கோடி ரூபாய் அளவுக்கு நிவாரணம் கிடைக்கும்.

5. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அறிவிக்கப்படும் பகுதிகளில், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள குறுகிய காலக் கடன்கள், நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றப்படும். கூட்டுறவுச் சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் வசூல் தள்ளி வைக்கப்படும்.

6. தனிப்பட்ட உழவர்கள் கிணறு தோண்டவும், கிணற்றை ஆழப்படுத்தவும் நிலவள வங்கிகள் மூலமாகத் தாராளமான கடன்கள் வழங்கப்படும்.

7. 'டீசல் என்ஜின்கள்', 'மோட்டார்கள்' 'பம்புசெட்டுகள்' வாங்குவதற்கு நிலவள வங்கிகள் மூலம் கடன்கள் வழங்கப்படும்.

8. துயர்துடைப்பு நடவடிக்கையாகவும், 'டீசல் என்ஜின்கள்-பம்பு செட்டுகள்' வாங்க உழவர் பெருமக்களுக்கு ஊக்கமளிக்கும் முறையிலும், 'டீசல் என்ஜின்-பம்புசெட்டுகள்' வாங்குவோர்களுக்கு, ஒரு என்ஜின்-பம்பு செட்டுக்கு ரூபாய் 1,000 வீதம் மானியம் வழங்கப்படும்.

9. பருவமழை பொய்த்த நிலையையும், மின்சார உற்பத்தியில் ஏற்பட்டுள்ள நெருக்கடியையும், மைய அரசுக்கு எடுத்துச்சொல்லி அதிகப்படியான 'டீசல்' எண்ணெய் பெற்று, வழங்கப்படுகிறது.

10. விரைவிலே 60,000 பம்புசெட்டுகளுக்கு மின்சார இணைப்பு வழங்கப்படும்.

11. உணவு நெருக்கடியை முன்னிட்டுச் சில தொழிற்சாலைகளுக்கான மின்சார வினியோகத்தைக் குறைத்து-உழவர் பெருமக்களுக்குத் தேவையான மின்சார வசதிகள் தடையின்றி வழங்கப்படும்.

12. உணவு உற்பத்தியை மேலும் அதிகப்படுத்துவதற்குத் தண்ணீர் வசதியுள்ள இடங்களில், பம்புசெட்டுகளைப் பயன்படுத்தி மூன்றுவது போகம் நெல் சாகுபடிசெய்பவர்களுக்கு நாள்தோறும் பகலில் குறைந்த பட்சம் 6 மணிநேரம் மின்சாரம் வழங்கப்படும்.

13. சிறப்பாக இந்த ஆண்டு செய்யப்படும் மூன்றுவது போகம் நெல் சாகுபடியில் உற்பத்தி ஆகிற நெல்லுக்கு 'லெவி' கிடையாது.

14. மூன்றுவது போகம் நெல் சாகுபடி செய்பவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வழங்கப்படும்.

15. நவரை, மற்றும் கோடைப் பருவத்தில் நெல் அல்லது இறைவைச் சிறுதானியம் பயிரிடுவதற்குத் தேவையான உயர் விளைச்சல் தரும் விதைகளும், இரசாயன உரங்களும், மருந்தும் வழங்கப்படும்.

16. உழவர் பெருமக்களே மனமுவந்து 'லெவி' நெல் கொடுக்க முன்வந்தால், கொள்முதல் விலைக்கு மேல் குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 10 வீதம் ஊக்கத் தொகை அளிக்கப்படும்.

மேலும், வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கிராமப்புறங்களில் (1) வேலைவாய்ப்பை ஏற்படுத்துவது, (2) மக்களின் வாங்கும் சக்தியை (Purchasing power) அதிகரிப்பது, ஆகிய 2 நோக்கங்களுடன், கீழ்க்கண்ட தலைப்புகளில் துயர்துடைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

(1) கிராமக் குடிநீர்த் திட்டம்
(2) சிறிய, சிறப்பு நீர்ப்பாசனத் திட்டங்கள்.
(3) சாலை போடுதல்.
(4) நீர்ப்பாசனத் திட்டங்கள்.
(5) ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகச் செய்யப்படும் ஏனைய கிராமப்பணிகள்.

இத்தலைப்புகளின் கீழ் வறட்சித் துயர் துடைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு 50 கோடி ரூபாய் செலவிடுவது என்று தமிழக அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

நடப்பு ஆண்டிலும் (1975 ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு மாதங்கள்), வரும் ஆண்டிலும் (1975 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து), வறட்சித் துயர் துடைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக 25 கோடி ரூபாயைத் தமிழ்நாடு அரசு ஒதுக்கியுள்ளது.

மேலும் தேவைப்படுகின்ற 25 கோடி ரூபாயை வறட்சித் துயர்துடைப்பு நிதியாகத் தமிழகத்திற்குத் தந்து உதவும்படி, மைய அரசைக் கேட்டுள்ளோம்.

துயர்துடைப்புப் பணிகளை மேற்கொள்ள முதற்கட்டமாக 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதில் 2 கோடி ரூபாயை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு முன்பே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. மேலுமுள்ள 3 கோடி ரூபாயை மேற்கூறிய 5 தலைப்புகளில் கண்ட திட்டங்களுக்காக, வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்குப் பதிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

## முதல்வர் கலைஞர்

வறட்சித் துயர் துடைப்புப் பணிகளைக் கவனிக்கும் ஆணையாளராக வருவாய்த்துறை வாரிய உறுப்பினர் திரு. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ். அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும், வறட்சித் துயர் துடைப்புப் பணிகளில் நேரடி கவனம் செலுத்த வேண்டுமென்று எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!''** என்ற இலட்சியத்துடன் செயலாற்றி வரும் தமிழ்நாடு அரசு, தன் சக்திக்குட்பட்ட வகையில் எல்லாவகையிலும், வறட்சி நிலைமையை உறுதியாகச் சமாளிக்க-வறட்சித்துயர் துடைப்புப் பணிகளை விரைவாக மேற்கொண்டிட முயன்று வருகிறது. எனவே, தமிழ்நாடு அரசின் முயற்சிகளுக்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று பொதுவாகக் கிராமப்புற மக்களையும், சிறப்பாக உழவர் பெருமக்களையும் கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்தடுத்து வந்த வறட்சிக்கும் புயலுக்கும் எதிராகப் போராடி வெற்றிகண்டவர்கள் நீங்கள்! இந்திய உழவர் பெருமக்களில், முன்னேடியாக விளங்குகின்றவர்கள் நீங்கள்! நீங்கள் நினைத்தால், இருக்கின்ற வசதியையும், கிடைக்கின்ற தண்ணீரையும் கொண்டு, மூன்று அல்லது நான்கு மாதத்திலேயே உணவுப் பற்றுக்குறையைப் போக்கிவிடுவீர்கள் என்பதை நான் மட்டுமல்ல, இந்த நாடே, ஏன் நானிலமே அறியும்!

எனவே, **''தமிழக உழவர் பெருமக்கள், தமிழகத்தின் பசிப்பிணி மருத்துவர்கள்!''** என்ற பாரம்பரியச் சிறப்புப் பெயரை நிலைநாட்டிட, நிலநீர் எடுத்து, உயர்விளைச்சல் தரும் குறுகிய காலப் பயிர்களைத் 'தமிழரசு' இதழ் கூறியுள்ள வகையில் சாகுபடி செய்திட முன்வரவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துக் கொள்கின்றேன்.

**''ஒரு மணி தானியம் விளைந்த இடத்தில் இருமணி தானியம் விளைவிப்பேன்! ஒரு கதிர் விளைந்த இடத்தில் பல கதிர் விளைவிப்பேன்! ஒரு போகம் விளைவித்த இடத்தில் இருபோகம் விளைவிப்பேன்! இருபோகம் விளைவித்த இடத்தில் முப்போகமும், முப்போகம் விளைவித்த இடத்தில் நான்கு போகமும் விளைவிப்பேன்!''** என்று நீங்கள் ஒவ்வொருவரும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும் என உழவர் திருநாளாம் இப்பொங்கல் நாளிலே உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

பசுமைப் புரட்சியின் பயனாய், உணவு உற்பத்தியில் அதுவும் குறிப்பாக அரிசி உற்பத்தியில், அனைத்து இந்தியாவிலும் தமிழகம் முன்னேடியாக உள்ளது! தமிழக உழவர்கள் யாருக்கும் பின்தங்கியவர்கள் அல்லர் என்பதை இந்த நாடே உணர்ந்துள்ளது. ஆயினும் தமிழக உழவர் பெருமக்கள் இன்னும் சட்டை அணியாது இருப்பதால், பிறநாட்டினர் தமிழக உழவர்கள் பிற்போக்கான நிலையிலேயே உள்ளதாகக் கருதுகின்றனர். இந்நிலை, தமிழ்நாட்டிற்கு ஒரு குறையாக உள்ளது! இக்குறையைப் போக்க இனிமேலாவது எல்லா உழவர் பெருமக்களும் தங்களுக்குத் தகுந்த சட்டையை அணிந்து, பிறநாட்டினர் மதிக்கும் வண்ணம் வாழவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்நன்னாளிலே, பசுமைப் புரட்சியில் பங்கு கொண்டு பணியாற்றும் உங்களுக்கு, உழவர் பெருமக்களின் அரசாகிய இன்றைய தமிழ்நாடு அரசு 'ஆக்கமும், ஊக்கமும் அளிக்கத் தவறாது' என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



நடப்பு ஆண்டின் பின் பருவத்தில் (ரபி பருவம்), தண்ணீர் வசதி உள்ள இடங்களில் 'ஐ.ஆர்.8', 'ஐ.ஆர்.20, 'கருணா', 'கண்ணகி', 'காஞ்சி', 'காவேரி', 'கரிகாலன்', 'பவானி' 'வைகை','ஜெயா', 'ரத்னா', 'அன்னபூர்ணா', ஆகிய உயர் விளைச்சல் தரும் நெல் இரகங்களை ஐந்து லட்சம் ஏக்கரில் பயிரிடவும் சி.ஓ.எச்.1', 'சி.ஓ.எச். 2' போன்ற உயர்விளைச்சல் தரும் வீரிய ஒட்டுச் சோள ரகங்களையும், 'எச்.பி. 1' 'எச்.பி. 3', 'எச்.பி. 5' போன்ற வீரிய ஒட்டுக் கம்பு ரகங்களையும், 'கோ. 7', 'கோ. 10', 'பி.ஆர்.202', 'சாரதா' ஆகிய உயர்விளைச்சல் தரும் கேழ்வரகு ரகங்களையும், 'தக்காணம்', 'கங்கா-5' போன்ற உயர்விளைச்சல் தரும் மக்காச்சோள ரகங்களையும் ஏறத்தாழ 6 இலட்சம் ஏக்கரில் பயிரிடவும், பருப்பு வகைப் பயிர்களின் பரப்பினை விரிவுபடுத்தவும் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறை திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தினை வெற்றிகரமாக நடத்திட உங்கள் முழு ஒத்துழைப்பையும் நல்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

''அழ மாட்டாக் குறையாக அன்றொரு நாள்
அரிசிக்கு வரிசை நின்ற
நிலைமாற்றிப் போட்டவர்கள் நீங்களன் றோ?
அன்று நம் கிடங்கு நிலையோ அந்தோ பரிதாபம்!
அதற்கெதிராய் இன்று ஐம்பத்தைந்து
இலட்சம் டன்
அரிசி மட்டும் உற்பத்தி!
ஆதவர்க்கு முன்எழுந்து உழைக்கின்ற
உழவர்குலத் தவர்க்கு
ஏதும் நேரா வண்ணம் காக்கின்ற அரசு இது!''

எனவே, ''உங்கள் குறைகளைத் தீர்த்து, உங்கள் வாழ்வை வளப்படுத்திட இன்றைய அரசு தயங்காது!'' என்று உறுதி அளிப்புடன், இப்பொங்கல் நன்னாளில்,

''முக்கனியின் சாறெடுத்து முல்லைமலர்த் தேன்கூட்டி
முந்திரியும் திராட்சையும் சர்க்கரையும் சேர்த்துக்
காய்ச்சிய பாகாக இனிக்கும் நல்வாழ்வை
ஒப்பின்றி உழைக்கின்ற உழவரெல்லாம் பெறுக!''

என்று வாழ்த்துகின்றேன். வணக்கம்.

# உழைப்போம்! உயர்வோம்!

**அ. வேங்கடராமன்,**
**இயக்குநர்,**
**வேளாண்மைத் துறை.**


தமிழ்ச்சமுதாயத்திற்கு இது ஒரு சோதனைக் காலம். வரலாறு காணாத வறட்சியின் பிடியில் சிக்கியுள்ளோம். சோதனையைக் கண்டு மனந்தளர்ந்திடாமல், அதை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு, அறிவாலும் செயல் திறமையாலும், வறட்சியிலும் வளத்தைக் கண்டிட உழைத்து உயர்ந்திடுவோம்.

காலத்தில் பெய்ய வேண்டிய மழை பொய்த்த காரணத்தால் ஏரிகளையும், குளங்களையும் நம்பி வாழும் பகுதிகளிலும், வானம் பார்த்த பூமிகளிலும் என்றும் கிடைக்கும் பயிர்விளைச்சலில் பாதிகூட இந்த ஆண்டு நமக்கு கிடைக்காமல் போகலாம்! வற்றாத வளந் தந்திடும் ஆற்றுப் பகுதிகளிலும் இயற்கையின் சீற்றத்தால், தலைமடைப் பகுதிகளில் கிடைக்கும் விளைச்சலுக்கும், கடைமடைப் பகுதிகளில் கிடைக்கும் விளைச்சலுக்கும்- என்றும் இருப்பதைவிட-இன்று அதிக வித்தியாசம் இருக்கும். இந்நிலையில் துண்டு விழும் நமது உணவுத் தேவையை சரிக்கட்ட நமது அறிவையும், ஆற்றலையும் பயன்படுத்தி கோடையில் எவ்வளவு அதிக உணவு உற்பத்தி செய்ய முடியுமோ அத்தனையும் செய்ய வேண்டியது நமது தலையாய கடன்.

கடந்த நான்கு, ஐந்து ஆண்டுகளாக தமிழக அரசு, கிணறுகள் வெட்டுவதற்கும், அவற்றிற்கு பம்பு செட்டுகள் வழங்குவதற்கும், மின்விசை அளிப்பதற்கும் பல திட்டங்களின் மூலமாக தீவிரமாக முயன்று வந்துள்ளது. அதன் பயனாக இன்று தமிழகத்தில் ஏறத்தாழ ஏழு இலட்சம் மின்சார பம்பு செட்டுகளும், 85,000 டீசல் பம்பு செட்டுகளும் இயங்கி வருகின்றன. இவற்றின் உதவியால் கோடையில் நெல், சிறு தானியங்கள், கரும்பு, கடலை, பருத்தி போன்ற பயிர்களை நமது விவசாயப் பெருங்குடி மக்கள் சாகுபடி செய்து வருகிறார்கள். இந்த ஆண்டில் தமிழகத்தின் உணவு நிலையை மனதில் கொண்டு, இருக்கும் நீரை வைத்துக் கொண்டு, நிலத்தின் தன்மைக்கேற்ப நெல் அல்லது சிறுதானியங்களை அதிகப் பரப்பில் பயிர் செய்திடல் வேண்டும்.

தாராளமாக நிலநீர் ஊற்று இருக்கும் இடங்களில் நெல் பயிர் செய்வது நல்லது. நில ஊற்று சிறிது குறைவாக இருந்தால் இருக்கும் நீரை வைத்துக்கொண்டு மக்காச் சோளம், கேழ்வரகு, சோளம், கம்பு போன்ற பயிர்களை அதிகப் பரப்பில் பயிர் செய்யலாம். நெல் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு வேண்டிய நீரை வைத்துக் கொண்டு, இரண்டரை ஏக்கர் மக்காச் சோளம் அல்லது கேழ்வரகு பயிர் செய்யலாம். சோளமோ, கம்போ பயிர் செய்வதானால் அந்த அளவு நீரில் மூன்று ஏக்கர் சாகுபடி செய்யலாம். ஒட்டு ரக வீரிய சிறுதானிய இரகங்கள், நெல்லைப் போலவே ஏக்கருக்கு சராசரி ஒன்றரையிலிருந்து இரண்டு டன் மகசூல் தரவல்லவை. எனவே, இந்தக் கோடையில்-பணந்தரும் பயிர்களை விடுத்து-நாட்டு மக்களுக்கு நலந் தரும் தானியப் பயிர்களை விளைவித்திடுவோம்.

நீர் நிலைக்கும், மண் வகைக்கும் ஏற்றவாறு பயிரைத் தெரிந்தெடுத்த பின், அடுத்து செய்ய வேண்டியது குறுகிய காலத்தில் அதிக மகசூல் தரவல்ல, அதிக நீர் தேவைப்படாத உயர்வள இரகங்களை பொறுக்கியெடுப்பதே. ஆராய்ச்சியின் பயனாக இன்று நம்மிடம் குறுகிய காலத்தில் இரண்டு டன் மகசூல் தரவல்ல கருணா, கண்ணகி, ரத்னா, காஞ்சி, காவேரி, திரிவேணி, ஐ.ஆர். 20, பவானி ஆகிய நெல் இரகங்கள் உள்ளன. சி.எஸ்.எச். 1, சி.எஸ்.எச். 5 சோளம், எச்.பி. 3, எச்.பி. 5 கம்பு, சாரதா, கோ. 7 கேழ்வரகு, கங்கா மக்காச் சோளம் போன்ற குறுகிய கால அதிக விளைச்சல் தரவல்ல இரகங்களும் நம்மிடம் உள்ளன. கோடையில் உள்ளூர் இரகங்களை விடுத்து இவற்றில் ஒன்றை தெரிந்தெடுத்து பயிர் செய்திடுவோம்.

நெல் என்றால் வரப்பை உயர்த்தி, அதிக நீரைத் தேக்கி நிறுத்தி, வேளாண்மை செய்ய வேண்டிய பயிர் என்ற எண்ணம் பரவலாக இருந்த காலம் ஒன்று உண்டு. ஆனால் இன்று நீரைக் குறைத்துக் கட்டி, அதிக மகசூல் பெற்றிடலாம் என்ற எண்ணம் மக்களிடையே பரவலாக துளிர்விட ஆரம்பித்துள்ளது. விஞ்ஞானத்தின் அடிப்படையில் பிறந்த இந்த எண்ணம் மேலும் பரவிட, இச்சோதனைக் காலம் மிகவும் உதவும். நெல் பயிருக்கு எப்பொழுதுமே இரண்டு அங்குலத்திற்கு மேல் தண்ணீர் தேவையில்லை. அதிலும் இளம் பயிருக்கும், தண்டு உருண்டு, பூ வெளி வரும் சமயங்களிலும் தடையின்றி இந்த அளவு நீர் வேண்டும். ஏனைய சமயங்களில் குறைவாக தண்ணீர் இருந்தாலும் மகசூல் குறையாது. இவ்வாறு நீரின் அளவை பயிர் வளர்ச்சிக்குத் தகுந்தவாறு கூட்டியும் குறைத்தும் வந்தால் நெல் பயிரில் அதிக சிம்புகள் வெடிக்கும், கதிர் விடும் சிம்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்; மணிகளின் எண்ணிக்கையும் பெருகும்; அவற்றின் எடையும் கணிசமாக இருக்கும். நாம் இட்ட உரத்தின் பயனைப் பெற்றிடுவோம்; பாடுபட்டு உழைத்ததின் பலனையும் அடைந்திடுவோம். எனவே, கோடையில் நெற்பயிருக்கு நீர் பாய்ச்சுவதில் தனிக் கவனம் செலுத்திடுவோம்.

களர் பூமிகளிலும், உவர் நீரிலும் குன்றிடாமல் வளர்ந்து நல்ல மகசூல் தந்திடுவது கேழ்வரகு. நல்ல தண்ணீரில் 90 நாளில் அதிக தானியமும், தட்டும் தந்திடுவது மக்காச் சோளம். சிறந்த நீரில் சிறந்த மகசூல் தந்திடுவது சோளமும், கம்பும். இப்பயிர்களைப் பயிர் செய்யும்பொழுது ''நெருக்கி நட்டு நெல்லைப் பெருக்கு'' என்ற பழமொழியை மனதில் கொண்டு, ஒவ்வொரு சதுர மீட்டரிலும் எத்தனை பயிர்கள் இருக்க வேண்டுமோ அத்தனை இருந்திட முயன்று, நாற்றுகள் பழுதில்லாமல் பயிர் செய்திடல் வேண்டும். காலத்தே களை எடுத்தால், உரத்தின் சேதாரத்தையும், நீர் வீணாவதையும் குறைத்திடலாம். எனவே, ஒவ்வொரு செய் நேர்த்தியிலும் கண்ணும் கருத்துமாக இருந்திடுவோம்.

செயற்கை உரங்களின் விலை என்றும் கண்டிடாத உச்ச நிலையில் இன்று உள்ளது. கோடையில் செயற்கை உரங்களின் பயனை-கால நிலைகளின் காரணமாக-அதிகம் பெற்றிடலாம். இடும் உரங்களின் முழுப் பயனையும்பெற்றிட, உரங்களின் அளவைவிட, இடும் முறையும், தருணமுமே மிக முக்கியமானதாகும். நெல் பயிருக்கு நடுவதற்கு முன் கடைசிச் சாலிலும், தண்டு உருளும் சமயமும் உரமிடுவது சிறந்தது. மேல் உரம் இடும் பொழுது தண்ணீரை வடித்து விட்டு, நிலத்தில் விழுமாறு உரத்தைச் சிதறிய பின்பு, 24 மணி நேரங் கழித்து தண்ணீர் பாய்ச்சினால் அதிகப் பலன் கிடைக்கும். இதைப் போலவே சிறுதானியங்களுக்கு பயிர் மூட்டிலிருந்து இரண்டு அங்குலம் தள்ளி உரத்தைப் போட்டு, மண்ணிட்டு மூடி, நீர் பாய்ச்சுவது உகந்தது. ''பொன்'' எனவிற்கும் உரத்தை ''பொன்னாக்க'' சீரிய முறையில் உரமிட்டிடுவோம்.

கோடையில் பயிருக்கு பல எதிரிகள்! பூச்சி, நோய்களின் தொல்லைகளும், எலிகளின் தீங்கும் கோடையில் அதிகம். இவற்றைத் தடுத்திட பலவகை மருந்துகள் நம்மிடம் உள்ளன. குருத்துப் பூச்சி போன்றவற்றை வந்தபின் தடுக்க இயலாது. எனவே, இவற்றை வருமுன் மருந்தடித்து காத்திடல் வேண்டும். ஏனைய பூச்சிகளின் தொல்லைகள் எந்த அளவுக்கு இருக்கின்றன என்பதை கூர்ந்து கவனித்து காலத்தே பயிர்ப் பாதுகாப்பு செய்திடுவோம்.

தஞ்சை மாவட்டத்தில் சுமார் 10,000 குழாய் கிணறுகளை அமைத்துள்ளோம். இவற்றை சாதாரணமாகக் குறுவை நாற்றங்காலுக்கும், தண்ணீர் தட்டில் மாட்டிக் கொள்ளும் தாளடிப் பயிருக்குமே இதுவரை பயன்படுத்தி வந்துள்ளோம். எலித் தொந்தரவின் காரணமாகவும், கோடையில் மகசூல் குறையலாம் என்ற எண்ணத்தாலும் இதுவரை அதிக அளவில் கோடையில் தஞ்சையில் நெல் பயிர் செய்வதில்லை. இன்றைய உணவு நிலையையும், எலி வெட்டைத் தடுத்திட ஏற்ற மருந்துகளும், இரண்டு டன் மகசூல் தரவல்ல கோடைக்கேற்ற இரகங்களும் நம்மிடம் இன்று உள்ளன என்பதனையும் மனதில் கொண்டு, தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு கோடைப் பட்டத்தில் குறைந்தது 35,000 ஏக்கராவில் நெல் பயிர் செய்திட முயன்றிடுவோம்.

கோடைச் சாகுபடியில் ஈடுபடும் குடியானப் பெரு மக்களுக்கு ஊக்கந்தந்திட, ஆக்கமிகு ஐந்து சலுகைகளை அள்ளி தந்திருக்கிறது தமிழக அரசு. அவையாவன:—

1. ஒவ்வொரு நாளும் இரவில் தரும் மின்சாரத்துடன், பகலிலும் ஆறுமணி நேரத்திற்கு குறையாமல் மின்சக்தி;

2. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கோடைச் சாகுபடிக்குக் கடன் உதவி;

3. கோடை நெல்லுக்கு வேண்டிய அளவு—தட்டில்லாமல்—இரசாயன உரம்;

4. பயிர்ப் பாதுகாப்புக்கு வேண்டிய பூச்சி மருந்துகள்;

5. புதிதாகக் கோடையில் நெல் பயிரிடுவோருக்கு 'லெவி' யிலிருந்து விதிவிலக்கு.

இச்சலுகைகளைப்பயன்படுத்தி அறிவையும், ஆற்றலையும் மூலதனமாக்கி, நமக்கு வந்துள்ள சோதனையைச் சவாலாக ஏற்று உற்சாகத்துடன் உழைத்திடுவோம்; கோடையில் பயிர் வளர்த்திடுவோம், நம் மக்கள் துயர் துடைத்திடுவோம்; உயர்ந்திடுவோம்!

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், பெரும்பரப்பில் பயிரிடப்படும் சிறுதானியங்களில் முதலிடம் வகிப்பது சோளமே! பெரும்பாலான உழவர் பெருமக்கள் தங்கள் வயிற்றுக்கும், வாழ்வுக்கும், கால்நடைகளுக்கும் சோளத்தையே நம்பி இருப்பார்கள். ஆனால் இந்த ஆண்டில் எதிர்பாராத விதமாகப் பருவமழை பொய்த்து விட்டதால், இலட்சக்கணக்கான ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டிருந்த சோளம், பூக்காமலேயே கருகிவிட்டது என்று வருவாய்த்துறை வாரிய உறுப்பினர்கள் மதிப்பிட்டுள்ளனர். இதனால் குறிப்பாக புன்செய் நில உழவர் பெருமக்கள், தங்கள் உணவுக்கு என்ன செய்வதென்ற கவலையுடன், கால்நடைகளை எவ்வாறு காப்பாற்றுவது என்ற பெருங்கவலையுடன் உள்ளார்கள்.

இந்த இக்கட்டான நிலைமையை விரைவாகச் சமாளிக்க வேண்டுமென்றால், உடனடியாக நீர்ப்பாசன வசதி உள்ள இடங்களில் எல்லாம் உயர்ந்த அளவு தானிய மகசூலும், கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்துவதற்கு ஏற்ற தட்டை மகசூலும் தரவல்ல உயர் விளைச்சல் தரும் சோள ரகங்களைப் பயிரிடுவதே சிறந்தவழி என்பதில் தவறில்லை! எனவே, இறைவைச் சோளத்தில் அதிக மகசூல் பெற பின்கண்ட 8 நுட்பங்களை உழவர் பெருமக்களின் நலன்கருதி 'தமிழரசு' இதழின் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றோம்.




### ஏற்ற ரகங்கள்

உயர்ந்த அளவு தானிய மகசூலும், தட்டை மகசூலும் தரவல்ல 'சி.ஓ.எச். 1' (100 நாட்கள்) 'சி..ஓ. எச். 2' (90 நாட்கள்), '604' (105 நாட்கள்) ஆகிய ரகங்களைப் பயிரிட முன்வரவேண்டும் என்று நீர்ப்பாசன வசதியுள்ள எல்லா உழவர் பெருமக்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

### பருவம்

தகுந்த பருவத்தில் இறைவைச் சோளத்தை விதைத்தால்தான், உயர்ந்த மகசூல் பெறமுடியும். பொதுவாக கோடைப்பட்டத்தில் இறைவையாகச் சோளம் பயிரிட, 'தைப் பட்டம்' (ஜனவரி-பிப்ரவரி), 'சித்திரைப் பட்டம்' (ஏப்ரல்) ஆகிய 2 பட்டங்களில் சோளம் விதைப்பதே சிறந்தது.

### பயிர்களின் எண்ணிக்கை

இறைவைச் சோளத்தில் அதிக மகசூல் பெற ஏக்கருக்கு 58,000 பயிர்கள் இருப்பது மிகவும் இன்றியமையாததாகும். இந்த அளவில் பயிர்கள் இருக்க தரமான விதைகளைத் தகுந்த அளவில் விதைக்க வேண்டும். இறைவைச்சோளம் பயிரிட ஏக்கருக்கு 4 கிலோ விதைகளை விதைக்க வேண்டும் விதைகளை வரிசைக்கு வரிசை 1.5 அடி இடைவெளியும், விதைக்கு விதை 6 அங்குல இடைவெளியும் விட்டு விதைத்தால்தான், ஏக்கருக்கு 58,000 பயிர்கள் இருக்கும்.

குருத்துப் பூச்சிகளின் தாக்குதலாலும் பயிர்களின் எண்ணிக்கை குறைந்து விடும். காலந்தாழ்த்தி விதைத்தால், குருத்துப் பூச்சிகளின் தாக்குதல் கடுமையாக இருக்கும். எனவே, குருத்துப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த, முன்கூட்டியே விதையுடன் மருந்து கலந்து விதைக்க வேண்டும் அல்லது விதைக்கும் பொழுது குருணை மருந்துகளைப் படைச்சாலில் இட்டு விதைக்க வேண்டும்.

### இடைவெளி

இறைவைச் சோளத்தில் அதிக மகசூல் பெற, பொதுவாக வரிசைக்கு வரிசை 1.5 அடி இடைவெளியும், பயிருக்குப் பயிர் 6 அங்குல இடைவெளியும் விடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. இவ்வாறு வரிசைக்கு வரிசை 1.5 அடி இடைவெளி விட்டு விதைப்பதற்குப் பதில், இணை (ஜோடி) வரிசை முறையில் (Paired-row system) விதைப்பதே சிறந்தது என, கோவை மாவட்டத்தில் நடைபெற்ற சோதனைகளில்இருந்து தெரியவருகிறது. இம்முறையில், ஓர் இணை (ஜோடி) வரிசைக்கு இடையில் 1 அடி இடைவெளி விட்டும், அடுத்த இணைவரிசையை 2 அடி இடைவெளிவிட்டும் படத்தில் கண்டவாறு விதைக்கப்படுகிறது. |← 1' →|← 2' →|← 1' →|

இவ்வாறு பயிரிடுவதால் ஏக்கருக்குச் சராசரியாக 2.68 குவிண்டால் அதிக தானிய மகசூல் கிடைக்கிறது. ஆனால் தட்டை மகசூல் குறைந்துவிடுகிறது. எனவே, தானிய மகசூல் அதிகம் பெற விரும்புகின்ற உழவர்கள் மட்டும், இம்முறையைப் பரிசோதனையாக மேற்கொள்வது நல்லது.

### இரசாயன உரமிடல்

இறைவைச் சோளத்தில் அதிக மகசூல் பெற இரசாயன உரங்களைத் தகுந்த அளவில் முறைப்படி இடுவதும் இன்றியமையாததாகும். ஏக்கருக்கு 18 கிலோ தழைச்சத்து, 18 கிலோ மணிச்சத்து, 18 கிலோ சாம்பல் சத்து கொடுக்கும் இரசாயன உரங்களை அடியுரமாக இடவேண்டும். அடி உரத்தை கடைசி உழவில் இட்டு, பாத்திகள் அமைப்பதைக் காட்டிலும், விதைப்பதற்கு முன்பாகப் படைச்சாலில் அடி உரத்தை இடுவதே சிறந்தது.

ஏக்கருக்கு 18 கிலோ தழைச்சத்து அளிக்கக்கூடிய இரசாயன உரத்தை விதைத்த 4-வது வாரத்தில்-பயிர்க் கலைப்பும், முதல்களைஎடுப்பும் முடிந்த பிறகு-மேலுரமாக இடவேண்டும். மேலுரத்தைப் பரவலாகத் தூவி விடுவதைவிட, பயிர் வரிசைக்கு 4 அங்குலம் தள்ளி ஆழம் குறைவான சால், ஏற்படுத்தி, அதில் இரசாயன உரத்தை இடவேண்டும். மணிகள் நிறைந்த பெரிய கதிர்

களைப் பெற இவ்வாறு உரமிடுதல் மிகவும் இன்றியமையாததாகும்.

### நீர்ப்பாசனம்

இறைவைச் சோளத்தில் அதிக மகசூல் பெற, போதிய தண்ணீர் வசதி வேண்டும். சோளம், வறட்சியை ஓரளவிற்குத் தாங்கிக் கொள்ளும் எனினும், பூ பூத்ததிலிருந்து கதிர்களில் மணி உருவாகும் காலம் வரை (பால் பிடிக்கும் காலம்), தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டால் மகசூல் குறைந்துவிடும்.

அதுபோலவே, சோளம் இளம் பயிராக இருக்கும் பொழுது அதிக அளவு தண்ணீர் பாய்ச்சி, தண்ணீர்தேங்கி நின்றால், சோளப்பயிரின் வளர்ச்சி குன்றி, மகசூல் குறைந்துவிடும்.

ஆகவே, மண்ணில் உள்ள ஈரத்திற்கும், பயிரின் நிலைமைக்கும் ஏற்ப 7 முதல் 10 நாட்கள் இடைவெளியில் சோளத்திற்கு நீர் பாய்ச்சுதல் அவசியமாகும்.

### பயிர்ப் பாதுகாப்பு

இறைவைச் சோளத்தில் அதிக மகசூல் பெற பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் காலத்தில் மேற்கொள்ள வேண்டும். பருவத்தில் முன்கூட்டியே விதைத்தால், பூச்சிகளின் தாக்குதல் குறைவாக உள்ளது என்பது தெரிய வருகிறது. எனவே, பருவத்தில் முன்கூட்டியே விதைப்பதுடன், குறிப்பாக பூ பூக்கும் தருணத்திற்லும், மணிகள் உருவாகும் தருணத்திலும் பூச்சிகள் விழுந்துள்ளனவா எனக் கவனமாகப் பார்த்து, மருந்து தெளிக்க வேண்டும்.

### ஊடுபயிர்

இறைவைச் சோளத்தில் அதிக மகசூல் பெறுவதுடன் தகுந்த ஊடுபயிர் செய்வதன் மூலம் அதிக இலாபம் பெற வாய்ப்பு உள்ளது. கோவையில் 'கோ. 8' என்னும் ஒட்டு அவரையை சோளத்தில் ஊடுபயிராகப் பயிரிட்டால் அவரை மகசூல் மூலம் ஏக்கருக்குச் சராசரியாக ரூபாய் 368.80 அதிக இலாபம் பெற முடியும் என்பது புலனாகியுள்ளது. இவ்வாறு ஊடுபயிர் செய்வதால், சோளத்தின் மகசூலில் குறைவு ஏற்படவில்லை என்றும் தெரியவருகிறது. எனவே, இறைவைச் சோளம் பயிரிடும் உழவர் பெருமக்களை, இறைவைச் சோளத்துடன் 'கோ. 8' ஒட்டு அவரையை ஊடுபயிராகப் பயிரிட்டுப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

மேற்கூறிய 8 நுட்பங்களையும் மனதில் கொண்டு, பின் கண்ட ஒருமித்த செய்நேர்த்தி முறைகளையும் மேற்கொண்டு, இறைவைச் சோள மகசூலைப் பெருக்கிப் பயனடையுமாறு, தமிழக உழவர் பெருமக்களை வேண்டிக் கேட்டுக் கொள்கின்றோம்.

## ஒருமித்த செய்நேர்த்தி முறைகள்

**ஏற்ற ரகம்:** 'சி.ஓ.எச். 1', 'சி.ஓ.எச். 2', '604.'

**விதை அளவு:** ஏக்கருக்கு 4 கிலோ.

**விதையுடன் மருந்து கலத்தல்:** ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் அக்ரசான் வீதம் கலக்கவும். குருத்துப் பூச்சியைத் தடுக்க ஒரு கிலோ விதைக்கு 100 கிராம் 'கார்போ ஃயூரான்' மருந்து வீதம் கலக்குதலும் அவசியமாகும்.

**நிலம் தயாரித்தல்:** ஏக்கருக்கு 20 வண்டி தொழு எருவிட்டு, நிலத்தை நன்கு உழுது புழுதியாக்கவும். பிறகு தண்ணீர் பாய்ச்சுவதற்கு வசதியாக பாத்திகள் அமைக்கவும்.

**அடியுரம் இடுதல்:** ஏக்கருக்கு 18 கிலோ தழைச்சத்து, 18 கிலோ மணிச்சத்து, 18 கிலோ சாம்பல்சத்து அளிக்கும் இரசாயன உரங்களை விதைச் சாலில், விதைக்கும் முன்பு இடவும். இந்த அளவுச் சத்துக்களை அளிக்க ஏக்கருக்கு 106 கிலோ 'விஜய்' 17: 17: 17 காம்ப்ளெக்ஸ் உரத்தை இடலாம்.

**இடைவெளி:** வரிசைக்கு வரிசை 1.5 அடி. பயிருக்குப் பயிர் 6 அங்குலம்.

**பயிர்களின் எண்ணிக்கை:** ஏக்கருக்கு 58,000 பயிர்கள்.

**விதைத்தல்:** அடியுரமிடப்பட்ட வரிசைகளின் மேலே விதைகளை இரண்டிரண்டாக ஊன்ற வேண்டும். விதை ஊன்றிய உடன் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

**பின்செய்நேர்த்தி:** விதைத்த 3-வது வாரத்தில் கொத்தி விட்டுக் களை எடுக்கவும்.

**மேல் உரம் இடுதல்:** விதைத்த 25 முதல் 30 நாட்களில் பயிர் வரிசைகளின் அருகில் 4 அங்குல தூரத்தில் ஆழமில்லாத சால் எடுத்து, மேலுரமிட்டு மண்ணால் மூடி தண்ணீர் பாய்ச்சவும். ஏக்கருக்கு 90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 40 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும்.

### பயிர்ப் பாதுகாப்பு

**குருத்துப்புழு:** இவைகளைக் கட்டுப்படுத்த 1 கிலோ விதைக்கு 100 கிராம் 'கார்பேஃயூரான்' மருந்து வீதம் கலந்து விதைக்க வேண்டும்.

விதைப்பதற்கு முன்பாக அல்லது விதைச் சாலில் ஒரு மீட்டர் தூரத்திற்கு 1.5 கிராம் 10 சத 'போரேட்' குருணை அல்லது 3 கிராம் 5 சத 'டை சல்போடான்' குருணை அல்லது 3 கிராம் 3 சத 'கார்பேஃயூரான்' குருணை வீதம் இட வேண்டும்.

**தண்டு துளைப்பான்:** ஏக்கருக்கு 3.2 கிலோ முதல் 4 கிலோ 'செவிடால்' குருணைகளை விதைத்த 30-வது நாளும் 45-வது நாளும் ஆக இருமுறை இலை இடுக்குகளில் இட வேண்டும்.

**மிட்ஜ், கதிர்ப்புழு:** ஏக்கருக்கு 5 கிலோ 'பி.எச்.சி' 10 சதத்தூளையும், 5 கிலோ 'டி.டி.டீ.' 5 சதத் தூளையும் கலந்து பூ பூக்கத் துவங்கியவுடன் ஒரு முறையும், அதன் பின் 7-வது நாளில் மறுமுறையும் ஆக 2 முறை தூவ வேண்டும்.

**இலைப்புள்ளி நோய்:** ஏக்கருக்கு 12 கிலோ கந்தகத்தூள் வீதம் விதைத்த 4-வது வாரத்தில் துவங்கி, 3 வாரத்திற்கு ஒரு முறை வீதம், 3 முறைத் தூவ வேண்டும். இவ்வாறு தூவுவதால், உண்ணிகளும் கட்டுப்படுத்தப்படும்.

**வேண்டுகோள்:** மேற்கூறிய ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு இறைவைச் சோளம் பயிரிட்டு ஏக்கருக்கு 2,300 முதல் 2,500 கிலோ வரை தானிய மகசூலும், 3,500 முதல் 10,000 கிலோ வரை தட்டை மகசூலும் பெறுமாறு, தமிழக உழவர் பெருமக்களை வேண்டிக் கேட்டுக் கொள்கின்றோம்.

—ஆர்.எம்.

# குன்றென மகசூல் குவித்திட நவரைப் பருவத்தில் நெல் பயிரிடுவீர்!

குன்றென நெல் மகசூல் குவித்திட, நவரைப் பருவமே (ஜனவரி முதல் ஏப்ரல் வரை) மிக மிகச் சிறந்தது என்பது ஆராய்ச்சி, அனுபவம் ஆகிய இரண்டின் அடிப்படையாகவும் தெரியவருகிறது. மப்பும், மந்தாரமுமான வானமும், குறைவான சூரிய ஒளியும் கொண்ட முன்பருவத்தை (Khariff season) விட, தெளிவான வானமும், நிறைந்த சூரிய ஒளியும் கொண்ட பின்பருவத்திலேயே (Rabi season) உயர் விளைச்சல் ரகங்கள் உயர்ந்த அளவு மகசூலைத் தருகின்றன. இதற்குக் காரணம் மூன்று. அவை:

(1) நவரைப் பருவ நெற்பயிரின் கடைசி 45 நாட்களில் துல்லியமான (பிரகாசமான) சூரிய ஒளி நிறையக் கிடைப்பதால், ஒளிச்சேர்க்கை நன்கு நடைபெற்று, நெல்லின் பூங்கொத்துகளில் (Panicles) உள்ள பூ மொட்டுகள் Spikelets) அனைத்திலும் மாவுப் பொருள்கள் நிரம்பி (பால் பிடித்து), தானிய மணிகள் நன்கு திரண்டு முதிர்ச்சி அடைகின்றன.

(2) நவரைப் பருவத்தில் மழை இல்லாத காரணத்தால் பாசன நீரைக் கட்டுப்படுத்த முடிகிறது. இதனால் நெற்பயிரின் ஆரம்பகால வளர்ச்சி, தூர் கிளைப்பு ஆகிய இரண்டும் துரிதமாகவும், துடிப்பாகவும் நடைபெற்று, மகசூலை உயர்த்துவதற்கு முதற்காரணமாக உள்ள பயன்தரு பூங்கொத்துகள் ஏராளமாகத் தோன்றுகின்றன.

(3) நவரைப் பருவத்தில் வானம், மப்பும், மந்தாரமும் இன்றி தெளிவாக இருப்பதாலும், காற்றில் ஈரம் குறைவாக இருப்பதாலும், நவரைப் பருவ நெற்பயிர்களை பூச்சிகளும், நோய்களும் அதிகம் தாக்குவதில்லை.

இம் மூன்று காரணங்களாலேயே, நவரைப் பருவத்தில் 'அதிசயநெல்' எனப்படும் 'ஐ.ஆர். 8' ரக நெல் ஏக்கருக்கு 3 முதல் 3.28 மெட்ரிக் டன் வரை (எக்டேருக்கு 7.5 முதல் 8.2 மெட்ரிக் டன் வரை) மகசூல் கொடுத்துள்ளது. சில முன்னோடி உழவர் பெருமக்கள் நவரைப் பருவத்தில் 'ஐ. ஆர். 8' பயிரிட்டு ஏக்கருக்கு 4 மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான மகசூல் பெற்றுள்ளனர். எனவே, நெல் உற்பத்தியைப் பெருக்கிட நவரைப் பருவத்தில் நல்ல வாய்ப்புகள் உள்ளன என்பது தெளிவாகிறது.

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் 67 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடியாகிறது. அதில் 4.56 இலட்சம் ஏக்கரில் மட்டும் நவரைப் பருவத்தில் சாகுபடியாகிறது.

தமிழ்நாட்டிலுள்ள 6 வேளாண்மை மண்டலங்களிலும், வழக்கமாகப் பின்கண்ட பரப்பளவில் நவரைப் பருவத்தில் நெல் பயிரிடப்படுகிறது.

| மண்டலத்தின் பெயர் | | நவரை நெல் பரப்பளவு (ஏக்கர்) |
|---|---|---|
| சென்னை | ... | 2,12,279 |
| திருச்சி | ... | 1,00,936 |
| கோவை | ... | 97,732 |
| மதுரை | ... | 37,783 |
| தஞ்சாவூர் | ... | 6,672 |
| திருநெல்வேலி | ... | 638 |
| மொத்தம் | ... | 4,56,040 |

இப்பரப்பளவு முழுவதிலும் முறையாக உயர்விளைச்சல் தரும் நெல் ரகங்களைப் பயிரிட்டால், குறைந்தது 9.12 இலட்சம் மெட்ரிக் டன் (ஏக்கருக்குச் சராசரியாக 2 மெட்ரிக் டன் வீதம்) நெல் விளைவிக்க முடியும். இந்த அளவு நெல் விளைவித்தால், இந்த ஆண்டின் நவரைப் பருவ முடிவில் (ஏப்ரல் அல்லது மே மாதத்தில்) குறைந்தது 6 இலட்சம் டன் அரிசி தமிழ்நாட்டில் உற்பத்தியாகி விடும்.

எனவே, தண்ணீர் வசதியுள்ள இடங்களில் நவரைப்பருவத்தில் உயர்விளைச்சல் தரும் நெல் ரகங்களைப் பயிரிட்டு பயன்மிகப் பெற்று, வளமோடு வாழுமாறு தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக்கொள்வதுடன், நவரைப் பருவத்தில் நெல் உற்பத்தி செய்யவிருக்கும் தமிழக உழவர் பெருமக்களுக்கு 'உயர்ந்த நெல் மகசூல் பெறும் நுட்பங்கள்' 'நெல் உற்பத்தியைப் பெருக்கும் முறைகள்' ஆகிய இரண்டையும் ''தமிழரசு'' இதழின் காணிக்கையாக, ஈண்டு படைத்துள்ளோம்.

## உயர்ந்த நெல் மகசூல் பெறும் நுட்பங்கள்

நெல் சாகுபடியில், மிகமிக உயர்ந்த அளவு மகசூல் பெறுவதற்குப் பின்கண்டவை காரணங்களாக உள்ளன.

*(1)* குறிப்பிட்ட பரப்பில் தோன்றும் பூங்கொத்துக்களின் (Panicles) எண்ணிக்கை.

*(2)* ஒவ்வொரு பூங்கொத்திலும் உள்ள பூமொட்டுக்களின் (Spikelets) எண்ணிக்கை.

*(3)* முதிர்ச்சி அடையும் மணிகளின் சதவீதம்.

*(4)* தனி ஒரு நெல்லின் சராசரி ஏடை (1,000 நெல்லின் எடை).

ஒரு சதுரமீட்டர் பரப்பளவில் 400 பூங்கொத்துகள் தோன்றி, அவை ஒவ்வொன்றிலும் சராசரியாக 100 நெல் மணிகள் முதிர்ச்சி அடைந்து, 1,000 நெல் மணிகளின் எடை 20 முதல் 22 கிராம் எடை என்ற அளவில் இருந்தால், ஒரு ஏக்கரில் இருந்து சராசரியாக 3.25 மெட்ரிக் டன் முதல் 3.5 டன் மெட்ரிக் டன் வரை மகசூல் பெறமுடியும் என்பது ஆராய்ச்சிகளின் மூலம் தெரிய



வருகிறது. ஆனால், 1972-73-ஆம் ஆண்டின் புள்ளிவிவரப்படி, தமிழ்நாட்டின் சராசரி ஏக்கர் நெல் உற்பத்தி 800 கிலோ (எக்டேருக்கு 1,999 கிலோ) என்ற அளவிலேயே உள்ளது. எனவே, சராசரி ஏக்கர் உற்பத்தியைப் பெருக்க, மேற்கூறிய நான்கையும் அதிகப்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும். அவ்வாறு அதிகப்படுத்தப் பின்கண்ட 4 முறைகளையும் மேற் கொள்ள வேண்டும்.

1. ஒரு சதுரமீட்டர் பரப்பில் தோன்றும் பூங்கொத்துக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த, போதிய அளவு இரசாயன உரத்தை அடியுரமாக இடுவதுடன், பயிரின் ஆரம்ப காலத்திலேயே போதிய அளவில் மேலுரமிட வேண்டும்.

2. பூங்கொத்தில் பூமொட்டுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த, பூங்கொத்து உருவாகும் தருணத்தில், தழைச் சத்தை அல்லது தழைச்சத்து, மணிச்சத்து ஆகிய இரண்டையும் சேர்த்து மேலுரமாக இட வேண்டும்.

3. பூங்கொத்தில் ஏராளமான பூ மொட்டுகள் நசித்துக் காணப்படுவதைத் தவிர்க்க, பூங்கொத்து வெளியே தோன்றுவதற்கு 15 நாட்கள் முன்பாக மேலுரமிட வேண்டும்.

4. முதிர்ச்சி அடைந்த மணிகளின் சதவீதம் குறைவாக இருப்பதற்கு, பூங்கொத்து உருவாகுதல் முதல் பூங்கொத்து வெளியே தோன்றுதல் வரையான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தவறான சாகுபடி நிருவாகமே காரணமாகும். இதைத்தவிர்க்க, பூங்கொத்து உருவாகுதல் முதல் பூங்கொத்து வெளியே தோன்றுதல் வரையான காலத்தில் போதிய பாசன வசதி அளிக்க வேண்டும். தேவையானல் பூ நிறைந்த சமயத்தில், மேலுரமும் இடவேண்டும்.

உயர்ந்த மகசூலுக்கு வழிகோலும் மேற்கூறிய 4 அடிப்படைகளுள், ஒரு சதுரமீட்டரில் தோன்றும் பூங்கொத்துகளின் எண்ணிக்கையே, குறிப்பிட்ட ரகத்தில் மகசூல் வேறுபாட்டிற்கு மூலகாரணமாக உள்ளது. எனவே, உயர்ந்த மகசூல் பெறுவதற்கு மூல காரணமாக உள்ள பூங்கொத்துக்களின் எண்ணிக்கை, பூமொட்டுகளின் எண்ணிக்கை, முற்றும் மணிகளின் சதவீதம், மணிகளின் எடை ஆகிய நான்கையும் அதிகப்படுத்த பின்கண்ட 6 முறைகளையும் ஒருங்கிணைத்து, நெல் சாகுபடி செய்ய வேண்டும்.

## நெல் உற்பத்தியைப் பெருக்க 6 முறைகள்

**1. நவரைப் பருவத்திற்கு ஏற்ற நெல் ரகங்களில், பொருத்த மானதைத் தேர்ந்தெடுத்துப் பயிரிடுதல்.**

ஆராய்ச்சி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் பின்கண்ட ரகங்களை நவரைப் பருவத்தில் பயிரிடுமாறு பரிந்துரைக்கின்றோம்.

| ரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | பயிரிடுவதற்கு ஏற்ற மாவட்டங்கள் |
|---|---|---|
| 1. ஐ. ஆர். 8 | 135 | செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, திருச்சி, தஞ்சாவூர் மதுரை, இராமநாதபுரம், சேலம், கோவை, தருமபுரி. |
| 2. பவானி | 135 | கோவை, இராமநாதபுரம், தருமபுரி, மதுரை, சேலம், தென்னார்க்காடு, வட ஆர்க்காடு. |
| 3. வைகை | 115 | ,, ,, |
| 4. ஜெயா | 125 | செங்கற்பட்டு, வட ஆர்க்காடு. |
| 5. ஐ. ஆர். 20 | 125 | செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், சேலம், கோவை, தருமபுரி. |
| 6. ரத்னா | 120 | செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, திருச்சி |
| 7. காஞ்சி | 107 | ,, |
| 8. காவேரி | 105 | ,, |
| 9. அன்னபூர்ணா | 105 | எல்லா மாவட்டங்களுக்கும் (நீலகிரி தவிர) |
| 10. கண்ணகி | 103 | ,, ,, |
| 11. கரிகாலன் | 110 | தஞ்சாவூர் |
| 12. ஆடுதுறை-27 | 105 | செங்கற்பட்டு, வடஆர்க்காடு, தென்னார்க்காடு, திருச்சி, சேலம், கோவை, தருமபுரி. |
| 13. கருணா | 105 | ,, ,, |
| 14. டி.கே.எம். 6 | 115 | ,, ,, |
| 15. கோ. 29 | 110 | ,, ,, |
| 16. டி. கே. எம். 7 | 108 | செங்கற்பட்டு, வட ஆர்க்காடு. |

மேலும், அனுசரணை ஆராய்ச்சி நிலையில் உள்ள, 85 முதல் 90 நாட்கள் வயதுடைய ஆடுதுறை-30(வளர்ப்பு-7711), 100 முதல் 105 நாட்கள் வயதுடைய ஆடுதுறை-31 (வளர்ப்பு - 8946), 115 நாட்கள் வயதுடைய வளர்ப்பு -1251 ஆகியவை நவரைப்பருவத்திற்கு ஏற்றவையாகும்.

மேற்கூறிய விவரங்களில் இருந்து, உங்களுக்குப் பொருத்தமான ரகத்தைத் தேர்ந்தெடுத்துப் பயிரிடுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

**2. பயிர்களின் எண்ணிக்கையைப் போதிய அளவில் இருக்கச் செய்தல்.**

குறிப்பிட்ட பரப்பில், போதிய அளவு எண்ணிக்கையில் பயிர்களை இருக்கச் செய்ய, பின்கண்டவாறு நாற்று விடுதல், நடவுவயல் தயாரித்தல், நடவு செய்தல் ஆகியவைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

**அ. நாற்று தயாரித்தல்.**

1. ஜனவரி 1 முதல் 15-ஆம் தேதிக்குள் நாற்றுவிட்டால் நவரைப் பருவ நெல்லில் உயர்ந்த மகசூல் பெறலாம்.

2. இதுவரை மேற்கொள்ளப் பெற்ற பரிசோதனைகளில் இருந்து சேற்று நாற்றங்கால் (Wet nursery) அமைப்பதே சிறந்தது எனத் தெரிய வருகிறது. ஒரு ஏக்கர் நடவு செய்ய, 12 சென்ட் பரப்பில் நாற்றங்கால் அமைக்க வேண்டும்.

3. நாற்றங்காலுக்கு ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது கலவை எரு வீதம் இடவேண்டும்.

4. நாற்றங்காலுக்கு ஏக்கருக்கு 250 கிலோ 'சூப்பர் பாஸ்பேட்' வீதம் இடுவது சிறந்தது. இவ்வாறு செய்தால், குளிரின் காரணமாக நாற்றுகளின் வளர்ச்சி தடைபடுவதைத் தவிர்க்கலாம்.

5. ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு 2 கிலோ விதை வீதம் விதைப்பது சிறந்தது.

6. ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'பிளிட் 406' மருந்து அல்லது 'அக்ரசான்' மருந்து வீதம் கலக்க வேண்டும்.

7. நாற்றுவிட்ட ஒரு சில நாட்கள் வரை, நாற்றங்காலில் தண்ணீர் அதிகம் தேங்கி நிற்பதைத் தவிர்க்க வேண்டும்

8. ஒருசில சென்டிமீட்டர் உயரம் வரை நாற்று வளர்ந்த பிறகு, நாற்றங்காலில் குறைந்த அளவு தண்ணீர் நிற்கச் செய்ய வேண்டும்.

9. நாற்று நன்கு வளராமல் இருந்தால், நாற்று பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பாக, ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு அரைகிலோ அமோனியம் சல்பேட் வீதம் தூவ வேண்டும்.

VOLTAS

# தாராளமான சக்தி ஏராளமான விளைச்சல்

# வோட்டா

## எலெக்ட்ரிக் பம்ப்ஸெட்டின் தனிச்சிறப்பு

உங்கள் வயலுக்கென்றே விசேட முறையில் உருவாக்கப்பட்டது வோட்டா எலெக்ட்ரிக் பம்ப் ஸெட். உங்கள் நிலத்திற்கு வேண்டிய நீர்த் தேவைகளை அறிந்து இயங்குவது. வேண்டிய அளவு நீர் பெற வழி செய்கிறது. அதுவும் வேண்டியபொழுது, வேண்டிய இடத்தில். கடுமையான வேலைத்திறனுடன் நீண்ட கால உழைப்பைத்தரும் வகையில் உருவாக்கப்பட்டது. நம்பகமானது, உறுதியானது, திடமானது. முழுதும் மூடப்பட்ட ஃபேன் கூல்ட் மின்சார மோட்டார் ட்ரைவுடன் (TEFC) சேர்ந்து பெறக் கூடியது. வறண்ட நிலத்தையும் தொடர்ந்த நீர்ப்பாசனத்தின் மூலம் வளம்படுத்துகிறது. நிமிடத்திற்கு 451 முதல் 3825 லிட்டர் நீர் இறைக்கும் திறன் கொண்டது. உபயோகத்திற்கு வெகு சிக்கனமானது.

**வோட்டா மோனோப்ளாக் பம்ப்ஸெட்களும் கிடைக்கின்றன**

வோல்டாஸ் மற்றும் நாடெங்குமுள்ள அவர்களுடைய விற்பனையாளர்கள் விற்பனைக்குப் பின் அளிக்கும் ஸர்விஸ் வசதி இணைந்தது.

ஏகபோக வினியோகஸ்தர்கள் :
**வோல்டாஸ் லிமிடெட்,**
அக்ரோ இண்டஸ்ட்ரியல் ப்ராடக்ட்ஸ் டிவிஷன், பம்பாய் 400 033.
கல்கத்தா . சென்னை . புது டில்லி . பெங்களூர் . லக்னோ . பாட்னா
அகமதாபாத் . செகந்தராபாத் . கொச்சி . போபால் . ஜெய்ப்பூர்
ஜெம்ஷெட்பூர்.



HT-VT. 8034 A

**வோல்டாஸ்—செழுமையான விளைச்சலைப் பெருமளவில் பெற உழவர்களுக்கு உதவுகிறது.**

10. நாற்றுவிட்ட 10-வது நாளிலும், 20-வது நாளிலும் ஒரு ஏக்கர் நாற்றங்காலுக்கு 200 மில்லி லிட்டர் 'பாரத்தியான்' மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

**ஆ. நடவு வயல் தயாரித்தல்.**

1. நடவு வயலை, நடுவதற்கு 15 நாட்கள் முன்பாகவே போதிய அளவில் உழுது சேருக்க வேண்டும்.

2. நிலத்தின் அடியில் தண்ணீர் வடிவதையும் (Percolation), களைகள் முளைப்பதையும் குறைத்திடுவதற்கு மீண்டும் மீண்டும் உழவேண்டும்.

3. நடவு வயலுக்கு ஏக்கருக்கு 10 வண்டி தொழுஎரு அல்லது கலவை எரு அல்லது 5 வண்டி தழைஎரு வீதம், நடுவதற்கு 10 முதல் 15 நாள் முன்பாக இடவேண்டும்.

4. அடி உரமாக இரசாயன உரத்தை இடுவதற்கு முன்பாகவே, நிலத்தைச் சமப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு செய்வது, ஒரே மாதிரியாகப் பயிர்கள் வளரவும், பாசனநீரை முறையாகக் கட்டுப்படுத்தவும் உதவிடும். நடுவதற்கு முன்பாக நிலத்தைச் சமப்படுத்துவதற்குச் செய்யும் செலவை, சமப்படுத்துவதனுல் கிடைக்கும் அதிக மகசூலில் இருந்து பெறமுடியும்.

5. கடைசி உழவு செய்வதற்கு முன்பாக அடியுரத்தை இட வேண்டும். ஆனுல் அடியுரமிடுவது, நடுவதற்கு முன் 1 முதல் 3 நாட்களுக்கு மேற்படக்கூடாது.

6. அடியுரமிட்ட நாளிலிருந்து நடவுசெய்யும் நாள் வரை, வயலில் தண்ணீர் நிற்க வேண்டும்.

**இ. நடவு செய்தல்.**

1. அதிக மகசூல் பெற, நாற்றுக்களை 4 முதல் 5 இலையாக உள்ளபொழுது (விதைத்த 20 முதல் 25 நாளில்) நட்டுவிட வேண்டும். (வளர்ப்பு 7711-ன் நாற்றுகளை 18 முதல் 20 நாட்களில் நட்டுவிடுதல் சிறந்தது)

2. ஒரு பங்கு சூப்பர் பாஸ்பேட், ஒருபங்கு மண், இரு பங்கு தண்ணீர் ஆகிய மூன்றும் கலந்த கலவையில் நாற்றுகளின் வேர்ப்பகுதியை நனைத்து நடவு செய்ய வேண்டும்.

3. தூர் அதிகமாகக் கிளைக்க குறுகிய கால வயதுடையதும், குட்டையானதுமான ரகங்களை வயலில் 1.5 முதல் 2 சென்டி மீட்டர் ஆழத்தில் மேலோட்டமாக நடவேண்டும்.

4. நடும்பொழுது ஒவ்வொரு தூரிலும் 3 பயிர் இருக்குமாறு நடவேண்டும்.

5. உயர்ந்த மகசூல் பெறவும், எளிதில் களையெடுக்கவும் வரிசைக்கு வரிசை 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளியும், வரிசையில் தூருக்குத் தூர் 10 சென்டிமீட்டர் (4 அங்குலம்) இடைவெளியும் விட்டு நடுவதே சிறந்தது.

6. மேலுரமிடுதல், மருந்து தெளித்தல் அல்லது தூவுதல் போன்ற பணிகளைச் செய்வதற்கு வசதியாக நடவு வயலில், 25 அடி இடைவெளியில், நடைபாதைக்காக 1 அடி அகல இடைவெளிவிட்டு நடவு செய்தல் நல்லது.

7. நடப்பட்ட பயிர்கள் இறப்பதைத் தடுக்க, நடவு செய்த வயலுக்கு நடவுசெய்த 3 முதல் 5 நாட்களுக்குள் இலேசாகத் தண்ணீர்ப் பாய்ச்சுதல் சிறந்தது.

**3. காலத்திலும், போதிய அளவிலும் நடவு வயலுக்கு இரசாயன உரமிடுதல்.**

இதுவரை மேற்கொள்ளப் பெற்ற ஆராய்ச்சி மற்றும் அனுசரணை ஆராய்ச்சி ஆகியவைகளின் முடிவுகளையும், இரசாயன உரப்பற்றுக்குறை நிலைமையையும் கருத்திற் கொண்டு பின்கண்டவாறு இரசாயன உரமிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

**அ. இரசாயன உரஅளவு (ஏக்கருக்கு).**

| | | தழைச் சத்து | மணிச் சத்து | சாம்பல் சத்து |
|---|---|---|---|---|
| | | (கிலோவில்) | | |
| 1. குட்டையான ரகங்கள் | | | | |
| (1) ஐ. ஆர். 8, ஜெயா | ... | 50 | 25 | 25 |
| (2) ஐ. ஆர். 20, ரத்னு, பவானி, காஞ்சி, காவேரி, கரிகாலன், கண்ணகி, வைகை, கருணு அன்னபூர்ணு, வளர்ப்பு 8946, வளர்ப்பு 1251 | ... | 40 | 20 | 20 |
| (3) வளர்ப்பு 7711 | ... | 30 | 15 | 15 |
| 2. நெட்டையான ரகங்கள் ஆடுதுறை-27, கோ. 29, டி.கே எம். 6, டி.கே. எம். 7 | ... | 30 | 15 | 15 |

தபால் நிலையத்தில்
பழைய சேவிங்ஸ் பாங்க்
கணக்கு ஏதாவது உண்டா ?
இருந்தால் அதை
புதுப்பியுங்கள்.

உங்களுடைய கணக்கை நீங்கள் ஆறு ஆண்டுகளாக உபயோகிக்காமல் இருந்திருந்தால் அது 'செயலற்ற' கணக்காக மாறியிருக்கும். இதனால், ஊக்கப் பரிசுத் திட்டப் படியான குலுக்கலில் பெரும் பரிசுகள் பெறுவதற்கான வாய்ப்பை நீங்கள் ஏற்கனவே ஒருமுறை தவற விட்டிருக்கிறீர்கள். ஆகவே, முந்துங்கள். அடுத்த குலுக்கலில் இடம்பெறத் தவறாதீர்கள். உங்களுடைய கணக்கைப் புதுப்பிக்குமாறு கணக்கு இருக்கும் தபால் நிலையத்தில் இப்போதே விண்ணப்பம் செய்யுங்கள். இதற்காக நீங்கள் ஒரு காசுகூட செலவழிக்க வேண்டியதில்லை.

ஒருவேளை வாரிசு உரிமைப்படி நீங்கள் ஒரு கணக்கை அடைந்து, அதை உபயோகிக்காமல் வைத்திருக்கலாம். ஆகவே, உங்களுடைய கோரிக்கை உரிமை பற்றி ஆலோசனை பெற அருகிலுள்ள தபால் நிலையத்தில் விசாரியுங்கள்.

# தபால் தந்தி இலாகா

---

## தமிழ் நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட், நெ. எக்ஸ் 406

நெ. 14, ரித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை-600007.

தொலைபேசி எண் : 30877
30878.
தபால் பெட்டி எண். 486.
தந்தி: ''ஹவுஸ்பாங்க்''

தலைவர் : திரு பழனிவேல் ராஜன், பி.எஸ்.ஸி., பி.எல்; எம் எல்.ஏ.
உபதலைவர் : திரு பி. கஸ்தூரி பிள்ளை
பொருளாளர் : திரு எஸ். பழனிசாமி, எம்.ஏ.,

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | ... | ரூ. 5 கோடி |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | ... | ரூ. 2.45 கோடி |
| பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை | ... | ரூ. 16.11 கோடி |

இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்கு புதிய வீடு கட்ட 20 வருட நீண்டகாலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன. இது சம்பந்தமான விபரத்திற்கு அருகிலுள்ள பிரதம வீடு அடமான அல்லது வீடு கட்டும் சங்கத்தை அணுகவும்.

ரூ. 500-க்குக் குறையாமலும் ஓர் ஆண்டிற்குக் குறையாமலும் தவணைவைப்புத் தொகைகள் பெற்றுக் கொள்ளப்படும். தவணைவைப்புத் தொகைகளுக்கு அரசாங்கம் உத்தரவாதம் அளித்துள்ளது.

| | | அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்ச கடன் அளவு. |
|---|---|---|
| புதிய வீடுகள் கட்டுவதற்கு | ... | ரூ. 30,000/- |
| கிராமப் புறங்களில் புதிய வீடு கட்ட | ... | ரூ. 10,000/- |
| பழைய வீடுகளை அபிவிருத்தி செய்யவும், புதுப்பிக்கவும் | ... | ரூ. 10,000/- |

**பூ.க. பத்மநாதன், பி.ஏ., எச்.டி.சி.,**
**இணைப்பதிவாளர்—செயலாளர்.**

**ஆ. இரசாயன உரமிடும் காலம்.**

அடியுரம்

பரிந்துரைக்கப்பட்ட அளவு தழைச்சத்தில் பாதியையும், மணிச்சத்து, சாம்பல் சத்துக்களின் முழு அளவையும் அடியுரமாக இடவேண்டும்.

மேல் உரம்

மீதியுள்ள பாதி தழைச் சத்தைப் பின்கண்டவாறு இடவேண்டும்.

(1) கெட்டியான களிமண் நிலங்களுக்கு ஒரே தடவையாக, தூர்கிளைக்கும் உச்சக் கட்டத்தில், மேலுரமிடவேண்டும்.

(2) நடுத்தர மண் நிலங்களுக்கு 2 தடவைகளில் மேலுரமிர வேண்டும். தூர் கிளைக்கும் உச்ச கட்டத்தில் முதல் முறையும், பூங்கொத்து உருவாகும் தருணத்தில் இரண்டாவது முறையும் மேலுரமிட வேண்டும்.

(3)இளகிய மண் நிலங்களுக்கு 3 தடவைகளில் மேலுரமிட வேண்டும். தூர் கிளைக்கும் உச்சக் கட்டத்தில் முதல் தடவையும், பூங்கொத்து உருவாகும் தருணத்தில் 2-வது தடவையும், பூங்கொத்து வெளியே தோன்றும் தருணங்தில் 3-வது தடவையும் மேலுரமிடவேண்டும்.

**4. களைகளைக் கட்டுப்படுத்தல்.**

நடவு வயலுக்கு இட்ட இரசாயன உரத்தை இழுத்துக் கொள்வதில் நெற்பயிர்களுடன் களைகள் போட்டியிடுகின்றன. மேலும், பூச்சிகள் மற்றும் நோய்கள் வாழ்வதற்கு உதவும் மாற்றுப் பயிராகவும் களைகள் இருக்கின்றன. எனவே காலத்தில் களையெடுக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

**5. தகுந்த நீர்ப்பாசன நிருவாகத்தை மேற்கொள்ளல்.**

முறையான பாசன நிருவாகத்தை மேற்கொண்டால் பின்கண்ட பயன்கள் ஏற்படுகின்றன.

(1) தூர்கள் கிளைக்கும்.

(2) இடப்பட்ட தழைச்சத்து சேதமாகாமல், முழு அளவில் பயிர்களுக்குக் கிடைக்கும்.

(3) களைகள் கட்டுப்படுத்தப்படும்.

(4) மொத்தம் தேவைப்படும் தண்ணீரின் அளவு குறையும்.

எனவே, பாசன நிருவாகத்தில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

நெல்லைப் பொறுத்தவரையில், உச்சக்கட்ட தூர் கிளைப்பு காலத்திலிருந்து, நெல் மணிகள் உருவாகும் காலம் வரை (பால் பிடிக்கும் தருணம்) தண்ணீர்த் தட்டுப்பாடே இருக்கக் கூடாது. அப்பொழுது தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாதிருந்தால்தான், எந்த ரகமும், மகசூல் தரும் தன்மையை முழு அளவில் வெளிப்படுத்தும்.

எனவே, பின்கண்ட பாசன நிருவாகத்தை மேற்கொள்வது சிறந்தது.

(1) நடவு செய்யும்பொழுது வயலில் 1 முதல் 2 சென்டிமீட்டர் ஆழ தண்ணீர் நிற்க வேண்டும். பிறகு வயலில் 2.5 சென்டிமீட்டர் (1 அங்குலம்) தண்ணீர் நிற்க வேண்டும். நடவு செய்த 15-வது நாள் தண்ணீரை வடிக்கலாம். ஆனால் வயலை வெடிக்க விடக்கூடாது.

(2) பயிர் பச்சைக்கட்ட ஆரம்பித்த பிறகு, வயலில் 2 அங்குல ஆழத்திற்குத் தண்ணீர் நிற்கச் செய்வது அவசியம்.

(3) மேலுரமிடுவதற்கு முதல் நாளே, வயலில் இருந்து தண்ணீரை வடித்து விட வேண்டும். மேலுரமிட்ட 24 மணி நேரத்தில் மீண்டும் தண்ணீர்ப் பாய்ச்ச வேண்டும்

(4) அறுவடை செய்வதற்கு ஒருவாரம் முன்பாக வயலில் உள்ள தண்ணீரை வடித்து விட வேண்டும்.

**6. பூச்சிகள், நோய்கள் ஆகியவற்றின் தாக்குதலில் இருந்து பயிர்களைக் காப்பாற்றுதல்.**

நோய் வந்த பின் தடுப்பதை விட, நோய்வரும் முன்பே தடுப்புச் செய்வதே சிறந்தது. துப்புரவான சாகுபடி, பருவத்தில் நடுதல், காலத்தில் களையெடுத்தல் ஆகியவை நல்ல திடமான பயிர்கள் அமையவும், மேலும் பூச்சிகள் மற்றும் நோய்களின் தாக்குதலில் இருந்து தப்பிக்கவும் உதவும். பூச்சிகள் அல்லது நோய்கள் தோன்றிய உடன், காலத்தில் மருந்தடித்தால், அவைகளை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தி விடலாம். காலங் கடந்து மருந்து தெளிப்பதையும், பொருத்தமற்ற மருந்தைத் தெளிப்பதையும், குறைவான அல்லது அதிகமான அடர்த்தியில் மருந்து தெளிப்பதையும் தவிர்க்கவேண்டும். வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கும் முறையில் பயிர்ப்பாதுகாப்பு முறைகளை மேற்கொள்வதே, உயர்ந்த மகசூலுக்கு வழிகோலும்.

**வேண்டுகோள்**

மேற்கூறிய 6 முறைகளையும் ஒருங்கிணைத்து, நவரைப் பருவத்தில் நெல் பயிரிட்டால் குறைந்தது ஏக்கருக்கு 2 மெட்ரிக் டன் மகசூலும், உயர்ந்த அளவாக ஏக்கருக்கு 4 மெட்ரிக் டன் வரை மகசூலும் பெற முடியுமாதலின், இந்த 6 முறைகளிலும் தீவிர கவனம் செலுத்தி நவரைப் பருவத்தில் நெல்பயிரிட்டு, பயன்மிகப் பெற்று, வளமோடு வாழும்படி தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

**-ஆர்.எம்.**

# சோதனைகள் நிறைந்த காலம்

வாங்க இயலாத அளவு விலைவாசிகள் உயர்ந்துவிட்டன. எதை வாங்க வேண்டுமென்றாலும், ஒரு தடவைக்கு இரண்டு தடவைகள் யோசிக்க வேண்டியிருக்கிறது. முக்கியத் தேவைகளான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றிற்கு வகை செய்ய வேண்டியிருக்கிறது. ஆயுள் இன்சூரன்சும் அவற்றைப் போலவே மிகவும் முக்கியமானது. உங்கள் மகனின் உயர்கல்வி, மகளின் திருமணம், குடும்பப் பாதுகாப்பு, உங்களது கவலையற்ற ஓய்வுக்காலம் ஆகியவற்றிற்கு வழிவகுக்க ஆயுள் இன்சூரன்சு உதவுகிறது. இடையில் துரதிர்ஷ்டவசமாக உங்களுக்கு ஏதாவது நேர்ந்து நீங்கள் இல்லாதுபோக நேரிட்டாலும்கூட உங்கள் குடும்பத்திற்குத் தகுந்த உதவி கிடைக்கும். விவரங்களுக்கு உங்கள் எல்.ஐ.சி. முகவரையோ அல்லது அருகிலுள்ள எல்.ஐ.சி. அலுவலகத்தையோ அணுகுங்கள்.

योगक्षेमं वहाम्यहम्

**ஆயுள் இன்சூரன்சு போல**
**ஆதரவு தருவது எதுவுமே இல்லை.**

EP-LIC-3-74

# இன்பமெல்லாம் பொங்கட்டும்!

கவியரசு முடியரசன்

வான்முகிலே! வளங்களெலாம் வழங்குந் தாயே!
வளர்கருணைக் கருமேனி வெள்ளை யாகி
ஏன்மழையே பொழியாது வஞ்சித் தாய்நீ ?
இருநிலத்துக் கலிபடர உளங்கொண் டாயோ?
ஆன்முதலாம் உயிரினங்கள் கதறு கின்ற
அகவல்எலாம் படவிலேயோ நினது காதில் ?
ஈன்வயிறு மக்களிடர் கண்டும் வாளா(து)
இருந்தாயேல் மருட்பாடு தோன்று மன்றோ ?

நெடிலடியால் நீநடக்க வேண்டு கில்லோம்
நிலஞ்சிரிக்க அளவடியால் நடந்தாற் போதும்;
அடிகுறையுஞ் சிந்தடியால், கால்கு றைந்த
குறளடியால் அடிபிறழ ஊர்ந்து வந்தால்
படிவறளும் படியாகும்; பருவத் தேஇப்
படிநடந்தால் எப்படியிவ் வுலகம் வாழும் ?
இடிதவழக் கொடிபடரும் மின்னல் பாய
ஏரடிகள் நடைபயில வருவாய் இன்றே !

அசையாத பொருளுக்கும் உலகில் உள்ள
அசைகின்ற பொருளுக்கும் பசையாய் நிற்பாய்;
இசையால்நின் சீர்முழுதும் எடுத்துச் சொல்ல
எழுத்தனைத்தும் சேர்த்தாலும் முடியா தம்மா!
நசையால் அடிதொட்டுத் தொடைகள் சூட்டி
நாளெல்லாம் தொழுகின்றோம்; அழுது நின்றோம்;
பசியாலே தளையுண்ட மக்க ளுக்குப்
பாலமிழ்தம் பொழிவதுநின் கடமை யன்றோ ?

ஏருழவன் பாட்டுக்குப் பொழிப்பு மோனை
இணைமோனை யாகியணி கூட்டி நிற்பாய்!
பாருழல முரண்டொடையாய் மாறி விட்டாய்
பயன்முழுதுஞ் செந்தொடையாய் மாறிற் றம்மா!
மாரியென நின்பெயரைச் சொல்ல லன்றி
மாறியென ஒருநாளும் உரைத்த தில்லை;
காருனது மனத்தியையுத் தொடைபொ ருந்தக்
கருணைமழை பொழிந்தருள்வாய் உலகம் உய்ய!

மயங்கிசையுந் தாழிசையும் கேளா வண்ணம்
மறையோசை கேட்கட்டும்; செய்யுள் எல்லாம்
பயன்கெழுமி வளங்கொழிக்கத் துள்ளல் ஓசை
பரவட்டும்; வனப்புமிகும் இல்ல மெல்லாம்
வயங்கிழையார் வளையோசை பொங்கப் பொங்கல்
வழங்கட்டும்; புறநடையில் மாந்தர் செல்லா
தியங்கட்டும்; ஒழுகிசைவான் வழங்க எங்கும்
இன்பமெலாம் பொங்கட்டும் எங்கள் நாடே!

# சீரான பணிக்கு சிறந்ததைத் தேர்ந்தெடுப்பீர்

# டெக்ஸ்மோ



TEXMO

மோட்டார் பம்பு செட்டுகள்
மானோ பிளாக் செட்டுகள்

டெக்ஸ்மோ இண்டஸ்ட்ரீஸ்.
ஞானாம்பிகை மில்ஸ் போஸ்ட், கோயமுத்தூர் 641029
கிளைகள் : சென்னை • மதுரை • சேலம் • செகந்திராபாத் • திருச்சி • விஜயவாடா • பெங்களூர்.

VSK&CO.TI. 587.

# பொங்கலை நாம் வாழ்த்திடுவோம்

புலவர் பொன்னிவளவ



''தை! தை!'' எனக்கேட்டுத் தைத்த உடைஉடுத்தித்
தை! தை! எனச்சிறுவர் தாம்துள்ளி ஆடும்நாள்
தையிலே எந்தநாள் தையலே?'' என்றேன்; அத்
தைமகளோ ''தைத்திங்கள் தமிழ்த்திருநாள்!'' எனச்சொன்னாள்.

கண்ணுக்குக் கண்ணான கண்மணியே! உத்தமியே!
பண்ணுக்குச் சுவையூட்டும் பாங்கறிந்த பத்தினியே!
மண்ணுக்கு மாக்கோலம் மார்கழியில்! மலர்ந்தபல
பெண்ணுக்கு மணக்கோலம் பெருமைமிகும் தையில்!''என்றேன்.

''மங்கையரின் கழுத்தேந்தும் மங்கலநாண்! புதுப்பானை
பொங்கலிலே தன்கழுத்தில் புதுமஞ்சள் கொத்தேந்தும்!
தங்கநிற உமிக்கூடு தந்தமுத்தாம் பச்சரிசி
'பொங்கலோ பொங்கல்!'எனப் பூரித்துப் பொங்கியெழும்!

உதயசூ ரியனின்றேல் உருப்படுமோ எதுவுமிங்கே?
விதையேதும் முளைத்திடுமா? விளைந்திடுமா நெற்பயிர்கள்?
எதையும்எதிர் பாராமல் எப்போதும் உழைக்கின்ற
கதிரவனை வணங்கிடநாம் கண்டதிரு நாள்!''என்றாள்.

''நல்லஇனம் தமிழினமே நன்றியுள்ள இனம்!''என்றேன்.
''உள்ளபடி சொன்னீர்கள்; உண்மைஅத்தான்! உழவர்க்கும்
அல்லலுற்றுப் பாடுபட்ட அருமைமிகும் மாட்டுக்கும்
சொல்லவொணா நன்றியினைச் சொல்லும்நாள் 'பொங்கல்!''என்றாள்.

''வெடிவைக்கும் பழக்கமெல்லாம் வேண்டாத பழக்கமென
முடிவெடுத்து வரும்திருநாள்! முக்கனிபோல் முத்தமிழ்போல்
முடிமன்னர் மூவேந்தர், முச்சங்கம் இவற்றைப்போல்
குடிமக்கள் மூன்றுநாள் கொண்டாடும் பெரும்திருநாள்!

கொண்டையினில் பூச்சூடாக் கொண்டைஎனில் மண்அடுப்புக்
கொண்டை!அதில் போயமர்ந்து கொண்டிருந்த புதுப்பானை
கெண்டைவிழிப் பெண்டிர்க்குக் கீர்த்திதரத் தரும்பொங்கல்!
உண்டிடுவோம் வெண்பொங்கல், உயர்வெல்லப் பொங்கல்நாம்!

சீப்புகளில் தலைசீவச் சிறிதேனும் உதவாத
சீப்பென்றால் அதுவாழைச் சீப்பேதான்! செந்தமிழர்
தோப்புகளில் பழுத்துமஞ்சள் தோலாடை மேலாடை
வாய்ப்பாய் அணிந்துவரும் வாழைப் பழம்தின்போம்!

கட்டு,கட்டாய்க் கண்ணெதிரில் கட்டிக் கரும்புண்டு!
வெட்டிவெட்டித் தின்றிடுவோம்! வீட்டில் விளையாடி
வட்டமிடும் நம்சிறுவர் வலுவாகக் கைக்கரும்பால்
தட்டிடுவர்; அவர்களுக்குத் தாம்பாளம் தான்முரசு!

தைத்திருநாள்! இத்திருநாள் தமிழ்த்திருநாள் பொய்கலவா
மெய்த்திருநாள்! உழவர்க்கு மேன்மை தரும்திருநாள்!
எத்திசையும் வாழ்த்துகளை ஏந்தி வரும்திருநாள்!
புத்துணர்ச்சி தருமிந்தப் பொங்கலைநாம் வாழ்த்திடுவோம்!''

என்றுரைத்தேன்! அத்தைமகள் என்மனைவி ஆசையுடன்
தின்றிடுங்கள் எனத்தந்தாள் தித்திப்புப் பொங்கலினை!
தின்றிடும்முன் பார்க்கின்றேன் திராட்சைப் பழம்அதிலே
முன்நின்று சிரிக்கின்றது முந்திரிப் பருப்புநிலா!

நெய்மணக்கும்; ஏலக்காய் நிறைந்து மணக்கும்;அவள்
கைமணக்கும்; வீடெல்லாம் கமகமக்கும்; பொங்கல்தரும்
தைமணக்கும்; அதைப்புகழ்ந்தால் தமிழ்மணக்கும்; மணக்காதா?
பொய்யில்லா நல்லதமிழ்ப் பொங்கலைநாம் வாழ்த்திடுவோம்!

# போதுமான அளவு உரம் கிடைக்கவில்லையே என்ற கவலை வேண்டாம்.

# கிடைக்கின்ற அளவு உரத்தைக்கொண்டே நல்ல மகசூல் பெறலாம்.

## இதோ அதற்கான 11 வழிமுறைகள்:

### 1. உரமிடுவதில், பாசன நிலங்களுக்கு முதலிடம் அளியுங்கள்

மானாவாரியைவிட பாசன நிலங்களில் உரங்கள் அதிக பலனைத் தருகின்றன. அதிலும் எங்கு பாசன நீர் உபயோகத்தைத் தகுந்த முறையில் கட்டுப்படுத்த முடியுமோ அங்கு உரங்கள் மேலும் அதிக பலனைத் தருகின்றன. (உதாரணமாக, கால்வாய்ப் பாசனத்தைவிட கிணற்றுநீர்ப் பாசனத்தை நன்கு கட்டுப்படுத்தலாம். ஆதலால், கிணற்றுநீர்ப் பாசன நிலங்கள் அதிக மகசூலை கொடுக்கும்.) உப்பு அல்லது களர் இல்லாத மற்ற நிலங்களுக்கே உரமளியுங்கள்.

### 2. முக்கியமாக உயர் விளைச்சல் ரகங்களுக்கு உரமிடுங்கள்

ஏனென்றால் உரமிடுதலுக்கு உயர் விளைச்சல் ரகங்கள், சாதாரண ரகங்களைவிட அதிக மகசூலைக் கொடுக்கின்றன. இதனால், உங்கள் முதலீட்டிற்கு மொத்தத்தில் அதிக லாபம் கிடைக்கும்.

### 3. கூடியமட்டில் அதிக நிலப்பரப்பில் உபயோகியுங்கள்

சிபாரிசின்படி உரமிடுவதற்கு போதிய உரம் கிடைக்காத நிலையில், உரமிடும் விகிதத்தைக் குறைத்து, முடிந்தமட்டும் அதிக நிலத்திற்கு உரமிட்டால் மொத்தத்தில் அதிக பலனைப் பெறலாம். (உதாரணம்: உங்களுக்கு 5 ஏக்கர் பாசன நிலம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். இதற்கு சிபாரிசுப்படி 1000 கிலோ உரம் தேவைப்படுகிறது. ஆனால் 500 கிலோ மட்டுமே உங்களுக்குக் கிடைக்கிறது. இந்நிலையில், இந்த 500 கிலோவை சிபாரிசுப்படி 2½ ஏக்கருக்கு மட்டும் அளிப்பதைவிட உங்கள் 5 ஏக்கருக்குமே உபயோகித்தால் மொத்தத்தில் அதிக மகசூல் கிடைக்கும்.) இவ்வாறு கிடைக்கின்ற அளவை அதிக பரப்பில் உரமிடும்போது உரமிடும் அளவு,சிபாரிசு அளவில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறைவாக இருத்தலாகாது.

### 4. முக்கிய பயிர்களுக்கு முதலிடம் கொடுங்கள்

முதலாவதாக உணவு தானியங்கள், இரண்டாவதாக எண்ணெய் வித்துக்கள், மூன்றாவதாக பருத்தி, நான்காவதாக கரும்பு என்ற முறைப்படி உர அளவை ஒதுக்குங்கள்.

### 5. சமச்சீர் உரமிடுதல் மூலம் அதிக பலன் பெறுங்கள்

பயிருக்குத் தேவையான ஊட்டச்

சத்துக்களை, மண்ணிலிருந்தும் மற்றும் ரசாயன உரங்களிலிருந்தும் சேர்ந்து தேவையான அளவுகளில் கிடைக்கச் செய்தலே சமச்சீர் உரமிடுதல் என்பதாகும். இதற்கு முதலில் உங்கள் நிலத்தின் மண்ணை பரிசோதனை செய்து கொள்ளுங்கள். பின்பு சோதனை முடிவுகளைப் பொறுத்து தழை, மணி, சாம்பல் சத்துக்களை சரியான அளவில் பயிருக்கிடுங்கள். இதனால், உரமும் உங்கள் பணமும் மீதமாகும்; அதிக மகசூலும் கிடைக்கும்.

மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் நிறுவனம் அளிக்கும் 'தரித' மண் பரிசோதனைச் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

## 6. காலத்தில் முறைப்படி உரமிடுங்கள். நீரைத் திறம்பட பாய்ச்சுங்கள்

மணிச்சத்தையும் சாம்பல் சத்தையும் அடியுரமாக உபயோகியுங்கள். தழைச்சத்தில் ஒரு பங்கை அடியுரமாகவும் மற்றொரு பங்கை மேலுரமாகவும் இடுங்கள். என்.பி.கே. காம்ப்ளெக்ஸ் உரங்களை அடியுரமாகவோ அல்லது பயிர் நட்ட ஒரு மாதத்திலோ இடவேண்டும்.

மேலுரமாக இடும் யூரியாவை பயிரின் வகை, வயது மற்றும் மண்ணின் தரம் — இவற்றைப் பொறுத்து முடிந்தவரை பல தடவைகளில் பிரித்தளியுங்கள்.

பாசன நீரை வடித்த பின்பே யூரியாவை மேலுரமாக இட்டு மண்ணுடன் கலக்க வேண்டும். உரமிட்ட 2 அல்லது 3 நாட்களுக்குப் பின்பு நீர் பாய்ச்சுங்கள்.

## 7. களைகளை வேரோடு நீக்குங்கள்

பயிருக்கு அளிக்கப்படும் உரத்தில் கணிசமான பங்கை, களைகளே எடுத்துக்கொள்கின்றன. அதனால் எப்போதும், முக்கியமாக பயிர் வளர்ச்சியின் முதல் 40 நாட்களின் போது, நிலத்தில் களைகளே இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

## 8. பூச்சி, பூஞ்சாள நோய்களை அண்டவிடாதீர்கள்

உங்கள் பகுதியில் வழக்கமாக பயிர்களைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை எதிர்த்து முன்கூட்டியே பயிர் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளுங்கள். மற்ற பூச்சி, பூஞ்சாள நோய்கள் பயிர்களில் கண்டவுடனே தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளுங்கள். இதனால் அளிக்கும் உரத்திலிருந்து அதிக பயன் பெறுவீர்கள்.

## 9. பருப்பு வகைகளை சாகுபடி செய்யுங்கள்; உரத் தேவையைக் குறையுங்கள்

உங்கள் பயிர் சுழற்சியில் நிலக்கடலை, பட்டாணி, உளுந்து, பாசிப்பயறு அல்லது பசுந்தழை இவற்றில் ஏதாவதொன்றை பயிரிடுங்கள். இப்பயிர்கள் அடுத்து வரும் பயிருக்கு கணிசமான அளவு தழைச்சத்தை கிடைக்கச் செய்கின்றன.

மேலும், 'பாக்டீரியல் கல்சர்' கிடைத்தால், பருப்பு வகை விதைகளை அதனுடன் கலந்து பின்பு விதையுங்கள். இதனால் அப்பயிர் நன்கு வளர்ந்து அதிக மகசூல் தரும்.

## 10. பருவத்தைப் பொறுத்து உரத்தை ஒதுக்குங்கள்

கோடை சாகுபடிப் பயிருக்கு, மழைக்காலப் பயிருக்கு அளிப்பதைவிட, அதிக அளவு உரத்தை அளியுங்கள். உதாரணமாக, கோடை நெற்பயிருக்கு, மழைக்கால நெல்லுக்கு அளிப்பதைவிட, அதிக அளவு உரமிடுங்கள்.

## 11. ரசாயன உரத்தைத் தவிர இயற்கை எருவையும் உபயோகியுங்கள்.

உங்கள் பண்ணையில் கிடைக்கும் வைக்கோல், கழிவுப் பொருட்கள், இலைகள், சருகுகள், சாணம் இவற்றை வீணாக்காமல் சேகரித்து 'கம்போஸ்ட்' தயாரியுங்கள்.

முடிந்தால், மாட்டு சாணத்திலிருந்து எரிவாயு தயாரிக்கும் சாதனம் ஒன்றை உங்கள் வீட்டில் நிறுவுங்கள். அது, சமையல் மற்றும் வீட்டு விளக்குகளுக்கு வேண்டிய எரிபொருளையும், பயிர்களுக்கு வேண்டிய எருவையும் கொடுக்கும்.

**மேலும் விவரங்களுக்கு, இன்றே உங்கள் அருகாமையிலுள்ள மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் நிறுவனத்தாரின் பீல்டு ஆபீசரை சந்தியுங்கள்; அல்லது, வேளாண்மைத்துறை அலுவலர்களை அணுகுங்கள்.**

*விவசாயிகள் நலனை முன்னிட்டு வெளியிட்டோர்:*

**விஜய் 17-17-17, விஜய் 14-28-14, விஜய் யூரியா உரங்கள் தயாரிப்பாளர்களான**

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்**

மணலி, சென்னை 600 068

**உழவர் துணைவன்**

VIJAY

MADRAS FERTILIZERS

**பொங்கும் செல்வம், விஜய்**

# நெஞ்சோடு நீயிருப்பாய்



மார்கழியின் உச்சியிலே மலரும் தையே!
மாதமெனும் ஊர்வலத்தில் முதல்வி நீயே!
ஓரெழுத்து ஒருமொழிநீ! 'தைதை' என்னும்
உச்சரிப்புத் தாளம்நீ! ஏவற் சொல்நீ!
கார்காலம் கழிந்துவரும் தேனே! எங்கள்
கைக்குழந்தை பொங்கலுண்ண வருகின் றுயே!
வேர்க்கன்னல், புதுவாழை தருவாய் ஒவ்வோர்
வீட்டுக்கும் நீவருவாய்! தைநீ வாநீ!

கொண்டாட வரும்நாளே! நான்கு நாட்கள்
கொண்டாடும் திருநாள்நீ! பொங்கல் என்றால்
வண்டாடும், மலராடும்; சோலைத் தென்றல்
வந்தாடும்! பந்தாடும் சிறுவர் கூட்டம்
சுண்டாடும் மயிலென்பேன் உன்னை! உன்னைக்
காணமல் ஆண்டெல்லாம் துயரம் கூடும்!
திண்டாடும் மனமெல்லாம்; பொங்க லேநீ
திருநாட்டில் வந்திட்டால் கவலை ஓடும்!

கப்பலொடும் இவ்வாண்டு வந்த தையே!
கலைஞரொடு புகழ்மாலை சூட்டிக் கொள்வாய்!
அப்பமொடு சீனியொடு தமிழர் உண்ண
அரிசிவிலை குறைந்துவரும் நாளில் வந்தாய்!
முப்பதுநாள் பெருமைக்கே உரிய தையே!
முதியவர்க்கும் இளமைவரும் உனது நாளில்!
ஒப்பற்ற தமிழ்நாட்டின் திருவி ழாநீ!
உழவர்களின் இலட்சியத்துக் கனவு நீயே!

பொய்யோடு வாழ்பவரை உ'தை'நீ தையே!
பொறுமையினில் துடிப்பவரைப் பு'தை'நீ என்றும்
மெய்யோடு உறவாடு! போதை மாற்று!
மேதையொடும் உரையாடு! ஏழை மக்கள்
பையோடு, பணமோடு வாழப் பண்ணு!
படிப்போடு மாணவர்கள் இருக்கச் செய்நீ!
நெய்யோடு வரும்தையே! நாளும் எங்கள்
நெஞ்சோடு நினைவோடு நீயி ருப்பாய்!

**புலவர் இளஞ்செழியன்**

# பூமியின் பிறந்தநாள்

எங்கள் தமிழர் எடுக்கும் விழாவிது
பொங்கலா? இல்லை! பூமியின் பிறந்தநாள்!

மகன்களின் வியர்வையை மடிமேல் எழுதி
மகரந்த மானது மண்ணின் புழுதி!

வியர்வைத் துளிகள் விழுந்த பிறகுதான்
வயலில் நெல்மணி மக'சூல்' கொண்டது!

இந்தமண் தரையில் ஏர்முனைக் கிறுக்கலே
முந்திப் பிறந்த முழுமுதற் கவிதை!

அதைஎழு தியவன் அவன்தான்; புவிக்கு
விதைநெல் லாகி விளைபவன் அவன்தான்!

பூக்சொரி கின்ற பூமிப் பந்தில்
மூச்சுக் காற்றையே முற்றும் அடைத்தவன்!

பசியைத் தனக்கெனப் பகிர்ந்து கொண்டவன்!
திசைகளைச் சரியாய்த் திருப்பி வைத்தவன்!

ஆர்வத் தறிகளை அயரா தியக்கிப்
பார்மக ளுக்குப் பச்சை ஆடைகள்

கொடையாய் நெய்து கொடுத்த வனுக்குக்
கடைசியில் மிச்சம் கைக்குட் டைகளா?

உலகைச் சுமக்கும் உழவனை இந்த
உலகம் சுமக்கும் ஒருநாள் இன்றுதான்!

மழையில் நனைந்தால் மணிக்குடை பிடிக்கலாம்!
அழுகையில் நனைந்தால் யார்குடை பிடிப்பது?

இரவிலும் பறக்கும் ஈரப் பறவைகள்
இறகுகள் உலர்த்தும் இனிய நாளிது!

இன்று மட்டுமே இன்ப விடுமுறை
என்று விதித்தது எங்கள் தலைமுறை!

மெல்லவே நிலத்தில் மின்னிச் சிரிக்கும்
நெல்முத் துக்கள் நிலத்தில் குளித்தவை!

புத்தமு தளக்கும் பொங்கற் பானையின்
முத்துப் பூநுரை, முனகல் ஒலிகளால்

அந்த உழவனின் ஆனந் தத்தைச்
சொந்த மொழிதனில் சொல்விழை கின்றது!

சமைத்துப் படைக்கும் சர்க்கரைப் பந்தியில்
அமுத சுரபியும் அமரக் கூடும்!

திரும்பும் திசையெல்லாம் தேன்தெறிக் கட்டும்!
கரும்பும் மஞ்சளும் கைகுலுக் கட்டும்!

எங்கள் தமிழர் எடுக்கம் விழாவிது
பொங்கலா? இல்லை! பூமியின் பிறந்தநாள்!



''மகனே!'' யென் றெழுப்பிவிட்டாள்; உறக்கம் நீங்கி
மல்லாந்து சிறுநேரம் படுத்தி றாந்தேன்.
''முகம்மலர்வாய்! வாட்டமென்ன?'' என்றாள் அந்த
மூதாட்டி; எனைநோக்கி முறுவ லித்தாள்!
''சுகமாக வேளாண்மை செய்து வாழ்ந்தேன்;
சுவையான இல்லறத்தில் மூழ்கி நின்றேன்;
மிகவாக வேதனைகள், சோத னைகள்
மேவினவே, இவ்வாண்டின் வரட்சி யாலே!''

“சோம்பேறி வேதாந்தம் உனக்கெ தற்கு?
சுறுசுறுப்புக் கொண்டிடுவாய்! இந்நூற் றாண்டில்
தாம்பொய்யா திருந்துவந்த வானம் இன்று
தம்தொழிலை மறுத்ததனால் நேர்ந்த தீமை!
நாம்பிறந்த கடன்செய்வோம் எனவே நித்தம்
நலமாக மழைபொழிந்த கார்மே கங்கள்
'போம்அய்யா! யாம்கரைந்து நீராய்ப் பெய்தும்
புகழுண்டா? நன்றியுண்டா உம்பால்?' என்றே

நன்றிமறந் திட்டஉன்னைத் தட்டிக் கேட்க
நயமாக எடுத்ததிந்த நடவ டிக்கை;
அன்றிவேறு கிடையாது; நெஞ்சிற் கொள்வாய்!
அடுத்ததென்ன? வரட்சியினைத் துடைத்தெ டுத்தல்—
இன்றிருந்து புதியதொரு முயற்சி செய்வாய்!
எங்கிருந்தோ வரும்ஆற்று நீரைப் பாய்ச்சும்
சென்றதலை முறைகண்ட முறையை மாற்றிச்
சீர்வழியில் புகுந்திடுவாய் காலம் போற்றி!

''ஏரிகுளம் தூரெடுப்பாய்; கரையு யர்த்தி
இருமருங்கும் சரிசெய்து, வாய்க்கால் வெட்டி,
ஊரிலுள்ள நீர்நிலைகள் ஆழத் தோண்டி;
உள்ளோடும் நிலத்தடிநீர் மேலே சேர்க்கும்
காரியங்கள் மேற்கொள்வாய்; குழாயி றக்கிக்
கவனமாகக் கிணறெடுப்பாய்; கவலை தீரும்!
யாரிவனென் றுலகத்தார் வியந்து ரைக்க
ஏற்றமுடன் செயல்புரிவாய்; பஞ்சம் கொல்வாய்!''

''ஆம்! இதனைச் சொல்கின்றாய்! அம்மா, நீயார்?
அடியேனின் மீதுனக்குப் பாசம் ஏனோ?
சாம்வரையில் இதைமறவேன்! வானம் பார்த்துச்
சலிப்படைந்து மானத்தைத் துறவேன், என்றும்!
பூமியன்னை தன்மக்கள் மடிவதற்குப்
பொறுப்பாக மாட்டாளென் றறிவேன்!'' என்றேன்.
''சாமியினி நீபிழைத்தாய்; நான்தான் அன்னாள்!
சரிசரிநான் வருகின்றேன்!'' என்றாள்; சென்றாள்!

**எங்கள் பணி விவசாய வளர்ச்சிக்கே**

வேளாண்மை தழைக்கவும் விவசாயி வாழ்க்கை செழிக்கவும் 45 ஆண்டுகளாக நற்பணி ஆற்றிவருவது தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி.

* * *

*தமிழகமெங்கும் ஆல்போல் படர்ந்துள்ள 223 பிரதம நிலவள வங்கிகள் மூலம், பல்வேறு வேளாண்மைப் பணிகளுக்குக் கடனுதவி புரிந்து வருகிறது. விவசாய மேம்பாட்டுக் காரியங்களுக்கு நீண்டகால கடனுதவி வழங்கும் கூட்டுறவு நிறுவனம்.*

* * *

வேளாண்மை - எங்கள் சேவைக்குரிய ஒரே துறை. உற்பத்திப் பெருக்கத்துக்கு உதவி - எங்கள் தொண்டு. விவசாயி நல்வாழ்வு - எங்கள் இலட்சியம்.

# தமிழ்நாடு கூட்டுறவு
# மாநில நிலவள வங்கி

**32, லஸ் சர்ச் சாலை, சென்னை-4.**

பி.எஸ். முத்துச்செல்வன், எம்.எல்.ஏ.,
துணைத் தலைவர்.

மு. சண்முகம், எம்.எல்.ஏ.,
தலைவர்.

வி. பி. மல்ஹோத்ரா,
நிர்வாக இயக்குநர்.

# மாட்டுச் செல்வம்

மாடு என்ருல் மதிப்புள்ள செல்வமென
ஏடு கூறுவதை எல்லாரும் நன்கறிவோம்.
கால்கள் நான்கோடு கொம்பு இரண்டுமாய்
வாலென ஒன்றும் வரிச்செலும்பு காட்டிடும்
வற்றிய உடலொடு வாடியே உள்ளயாவும்
நற்றமிழ் கூறிய நன்மாடு ஆகாதே !
'வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல்' பசு எருமை
நீங்க இருப்பதெல்லாம் நிறைவான செல்வமன்று.
அள்ளியிட்ட தீனிதின்று ஆழாக்குப் பால்தரும்
பொல்லாத மாடுகளைப் போற்றிப் பயனென்ன ?
நித்தமே பாலளவு நாலிரண்டு லிட்டருக்கும்
மெத்தத் தருகின்ற மாடொன்றே மாடாகும் !
கோமாதா என்றிட்ட கண்கண்ட தெய்வமென்றும்
காமதேனு வென்ற கடவுளது வென்றும்,
பசுவினைப் போற்றியே பக்திப் பெருக்கினுல்
பூசையே செய்கிருேம், புண்ணியம் என்னவோ ?
தேவையான தீனியைத் தந்திடாது மாட்டினை
தேவதையாய்ப் போற்றித் துதிப்பதும் நன்ருமோ ?
மெள்ளவே நம்முடைய மாட்டின் தரத்தினை
நல்லபடி உயர்த்திட நாமெல்லாம் சிந்திப்போம் !
நாட்டுக் காளைக்கு நம்முடைய மாட்டினைப்
போட்டுத் தரத்தினைப் போக்கிடச் செய்யாது,
மேலையினக் காளைக்குச் செய்கை முறையதனில்
மேலான இனவிருத்தி மேற்கொண்டே செய்திட்டால்
நாளைவரும் கன்றெல்லாம் நல்ல மாடாகும்!
சோலையெனப் பூககும் சுகந்தம் மனிதர்க்கு
தரம்பெற்ற மாட்டுக்குத் தேவையான தீனியிட்டு
ஏற்ற பராமரிப்பை அன்புடனே தந்து,
சரியான நேரத்தில், சாகடிக்கும் நோய்க்குக்
குறியாகத் தடுப்பூசி போட்டதைக் காத்திட்டால்,
நன்னிலம் செழிக்க நிறைந்த மழையதனை
விண்ணின்று தந்திடும் வள்ளலாம் மேகம்போல்,
வெள்ளை அமுதமாம் வற்ருத பாலினை
அள்ளித் தருமே அன்னையாம் மாட்டினம் !
தேவையற்ற புற்பூண்டைத் தின்று தினமுமே
சுவையான பாலைச் சுரந்திடும் அந்தப்
பசுவினம் இன்றிப் பசுமையே இல்லை.
பசியினைப் போக்கப் பசுவினைக் காப்பீர் !
வறுமைக் கொடுமை விரட்டிடச் செய்ய
எருமை வளர்த்திட்டு ஏற்றமே பெற்றிடுவீர் !
உண்மை உணர்ந்திடுவீர் ! ஊக்கமது கொண்டிடுவீர் !
நன்மை தருகின்ற நல்லின மாட்டினை
அன்போடு காத்திட்டு ஆதரவு தந்திட்டால்
மண்ணுலகு வாழும் செழித்து !

—டாக்டர். பி. போத்தி, பி.வி.எஸ்ஸி.
கால்நடை உதவி மருத்துவர்.



## விவசாயிகளின் கவனத்திற்கு...

மாறிவரும் விஞ்ஞானத்திற்கேற்ப விவசாயத்தில் ஓர் புதுமை! பல்லாண்டுக் காலமாக உழுது பயிரிடுவதன் மூலம் நிலம், இழந்த நுண்ணிய தாதுச் சத்துப் பொருள்களை பயிர்களுக்கேற்ப சரிவிகித கலப்புணவாக அளிக்கிறது.

கோவை மாவட்ட
தீவிர விவசாயி
திரு. ஏ. எம் இராசா, M.A., M.L.A.
33% அதிக மகசூல் நெற் பயிரில் மை:.புட்(P) பயன்படுத்திப் பெற்றிருக்கிறார்.

### மைஃபுட்

பயிர்களுக்கு ஊட்டச் சத்துக்களையும் பயிர்களைத் தாக்கும் நோய், சில புழு பூச்சிகளின் தாக்குதலை எதிர்த்து நிற்கும் சக்தியை அளிக்கிறது மை:.புட்.

நெல்லூர், சூலூர் பேட்டை
திரு. வி. பாண்டுரங்க ராவ்
45% அதிக மகசூல் கடலையில் மை:.புட் (G.S.) பயன்படுத்திப் பெற்றிருக்கிறார்.

வியாபாரத் தொடர்புகளுக்கு :

தயாரிப்பாளர்கள்:—

சதர்ன் அக்ரோ கெமிகல்ஸ் பி. லிட்.
பிளாட் நெம்பர். 3202
அண்ணா நகர்—சென்னை-600040.



## உங்கள் நிலம் வளம்பெற புதுவகை 'உரம்' வழங்குகிறது பாங்க் ஆ:.ப் பரோடா

### குடியானவ நண்பர்களுக்கு விவசாயக் கடனுதவி

பணம்...அதுவே உன்னதமான உரம்!

உங்கள் நிலம் செழித்து அமோக விளைச்சலை அள்ளித்தர, நல்ல விதைகள், நவீன பண்ணைக் கருவிகள், மேம்பாடு பெற்ற பாசன முறைகள் மற்றும் சிறந்த உரம் தேவை.

பாங்க் ஆப் பரோடாவுக்கு வந்து, விவசாயக் கடனுதவி பற்றி விசாரியுங்கள். மிகவும் சல்லியான நிபந்தனையின் பேரில் நாங்கள் கடனுத்வி வழங்குகிறோம்.




நீங்கள் என்றென்றும் வளமையுடன் வாழ

**பாங்க் ஆஃப் பரோடா**

இந்தியாவிலும் வெளிநாடுகளில் யு. கே. கிழக்கு ஆப்பிரிக்கா, மொரீசு, பிஜித் தீவுகள், மற்றும் கயானாவிலும் 650க்கும் மேற்பட்ட கிளைகள் உள்ளன.

Shilpi BOB 8A/72 tam

**மரவள்ளியில் ஊடுபயிராக பெரிய வெங்காயம் பயிரிடுவீர் !**

மரவள்ளியின் பயிர்க்காலம் 8 முதல் 10 மாதங்களாகும். ஆகையினால் குறுகிய காலப் பயிர்களை ஊடுபயிராக சாகுபடி செய்யக்கூடிய வாய்ப்புகள் பற்றி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. குறுகிய காலப் பயிர்களை மரவள்ளியில் ஊடுபயிராகச் சாகுபடி செய்து கூடுதல் இலாபம் பெறலாம் என்று ஆராய்ச்சி மூலம் கண்டறியப்பட்டுள்ளது. வெண்டை, சிறியவெங்காயம், பெரிய வெங்காயம், பாசிப்பயறு, தட்டப்பயறு, குத்து அவரை (கோ. 8 அவரை), சூரியகாந்தி மற்றும் மணிலா போன்ற குறுகிய காலப் பயிர்கள் மரவள்ளியில் ஊடுபயிராக சாகுபடி செய்யப்பட்டன. இவைகளில் பெரிய வெங்காயம், மரவள்ளியில் ஊடுபயிராகச் சாகுபடி செய்ய ஏற்றது என்று தெரிந்தது. இதனால் மரவள்ளியின் மகசூல் ஏக்கருக்கு 9.8 டன் கிடைக்கும். அதாவது, மரவள்ளியைத் தனியாகப் பயிரிட்டால் கிடைக்கும் மகசூலுக்கு (9.9 டன்கள்) ஒரு சதவீதம் மட்டுமே குறைந்துள்ளது. அத்துடன் ஏக்கருக்கு 806 கிலோ பெரிய வெங்காயம் மகசூலும் கிடைக்கிறது. ஆகையினால் மரவள்ளியைத் தனியாகப் பயிர் செய்வதை விட பெரிய வெங்காயத்தை ஊடுபயிராக பயிர் செய்தால் ஏக்கருக்கு ரூபாய் 414 கூடுதல் இலாபம் கிடைக்கிறது. மற்ற குறுகிய காலப் பயிர்களை ஊடுபயிராகச் சாகுபடி செய்வதால் மரவள்ளியின் மகசூல் பாதிக்கப்படுவதுடன் நிகர இலாபமும் குறைகிறது.

எனவே மரவள்ளியின் மகசூல் பாதிக்கப்படாமல் இருக்க பெரிய வெங்காயத்தை மரவள்ளியில் ஊடுபயிராகச் சாகுபடி செய்து கூடுதல் வருவாய் பெறுமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

---

தகவல்: தோட்டக்கலைத்துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்,
கோவை. 3.

வெளியீடு: தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்,
கோவை.3.

# மரவள்ளிக் கிழங்கு வடகம் தயாரிக்கும் முறை




தமிழ்நாட்டில் வடகங்களும் அப்பளங்களும் சாதாரணமாக எல்லா வீடுகளிலும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. வடகங்கள் செய்வதற்குப் பெரும்பாலும் பச்சரிசி அல்லது ஜவ்வரிசியை உபயோகப்படுத்துகின்றோம். நமது மாநிலத்தில் மரவள்ளிக்கிழங்கு அதிக அளவில் பயிராகி வருவதை நாம் அறிவோம். மரவள்ளிக் கிழங்கின் விலை அரிசியின் விலையைவிடக் குறைந்தும் மாவுச்சத்துக்கள் மிகுந்தும் காணப்படுகின்றன. அரிசிப் பற்றாக்குறை மிகுந்த இந்நேரத்தில் அரிசியை உபயோகித்துத் தயார் செய்யும் உணவுப் பொருட்களுக்குப் பதிலாக, மரவள்ளிக்கிழங்கு, சிறுதானியங்கள் ஆகியவற்றை உபயோகித்துத் தயாரிக்கப்பட்ட உணவுகளை உண்பது சிறந்தது. எனவே மரவள்ளிக் கிழங்கை உபயோகித்து வடகம் தயாரிக்கும் முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**மரவள்ளிக் கிழங்கு மாவு தயாரிக்கும் முறை :**

மரவள்ளிக்கிழங்கின் மேல் தோலை உறித்து எடுக்கவும். தண்ணீரில் நன்கு கழுவிய பின் கிழங்குகளைச் சிறு துண்டங்களாக நறுக்கவும். நறுக்கிய துண்டங்களை வெய்யிலில் காய வைத்து மில்லில் கொடுத்து மாவாக அரைத்தபின் சலித்து எடுத்துக் கொள்ளவும். வியாபார நோக்குடன் அதிக அளவில் தயாரிக்க வேண்டுமானால் கிழங்குத் துண்டங்களை 'கில்பர்ன்' டிரையரில் 65 சென்டிகிரேட் வெப்ப நிலையில் 8 மணி நேரம் உலரவிட்டுப் பின் மில்லில் கொடுத்து மாவாக்கிக் கொள்ளலாம்.

**வடகம் தயாரிக்கும் முறை :**

**தேவையான பொருட்கள் :**

மரவள்ளிக்கிழங்கு மாவு—100 கிராம்

தண்ணீர்—3/4 லிட்டர்

உப்பு—ருசிக்குத் தேவையான அளவு

பெருங்காயம்—5 கிராம்

மிளகாய்ப்பொடி—5 கிராம்.

சீரகம்—5 கிராம்.

வெள்ளை எள்—5 கிராம்

சலித்த மாவை ஒரு பாத்திரத்தில் எடுத்துக்கொண்டு, சிறிது தண்ணீர் விட்டு, கட்டி விழாமல் நன்கு கரைத்துக் கொள்ளவும். மிகுந்த நீரைக் கொதிக்க வைத்து, அதில் கரைத்த மாவைச் சிறிது சிறிதாகச் சேர்த்துக்கொண்டு, கட்டி விழாமல் நன்கு கலக்கிக் கொண்டே கொதிக்க விடவும் வேண்டிய அளவு பதம் வந்தவுடன் சீரகம், எள், மிளகாய்த் தூள், உப்பு, பொடி செய்த பெருங்காயம் ஆகியவற்றைப் போட்டு நன்றாகக் கலக்கவும்.

'பாலித்தின்' பேப்பரை விரித்து அதன்மேல் வெந்த மாவுக்கலவையைத் தேயிலைக் கரண்டியால் எடுத்துச் சிறு சிறு வட்டங்களாக விட்டு வெய்யிலில் காயவிடவும். (வியாபார நோக்குடன் அதிக அளவில் தயாரிக்க வேண்டுமானால், 'கில்பான் டிரையரில்' காய விடலாம். நன்கு காய்ந்த பின் அவற்றை மெதுவாக எடுத்து, 'பாலித்தீன்' பைகளில் போட்டு சீல் செய்து கொண்டு வேண்டும்போது அவற்றை எடுத்து எண்ணெய்யில் போட்டுப் பொரித்து உபயோகப் படுத்திக் கொள்ளலாம்.

தினைமாவு அல்லது மற்ற சிறுதானிய மாவுகளையும், மரவள்ளிக்கிழங்கு மாவுடன் சம அளவில் உபயோகித்து மேற்கூறியவாறு வடகங்கள் செய்யலாம்.

தகவல்: டி.கே. சீனிவாச கோபால்
திருமதி அ. சுசீலா திருமாறன்
உணவியல் துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம்,
கோவை.3.

வெளியீடு: தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம்,
கோவை-3.

# கரும்பில் அதிக இலாபம் கண்டிட — பத்து வழிகள்

தமிழகத்தில் கரும்பு மகசூல் போட்டியில் வெற்றி பெறும் உழவர் பெருமக்கள், ஏக்கருக்கு 100 முதல் 120 மெட்ரிக் டன் வரை கரும்பு விளைவித்து தங்கப் பதக்கமும், பரிசும் பெற்றுள்ளார்கள்! எனவே, தமிழகத்தில் கரும்பு உற்பத்தியைப் பெருக்க மிகுந்த வாய்ப்பும், வசதியும் உள்ளது என்பது தெளிவாகிறது. ஆனால், பெரும்பாலான உழவர் பெருமக்கள் தற்பொழுது சராசரியாக ஏக்கருக்கு 25 முதல் 30 மெட்ரிக் டன் அளவிற்கே கரும்பு உற்பத்தி செய்து வருகிறார்கள்.

சராசரி ஏக்கர் உற்பத்தி குறைவாக உள்ளதனாலேயே- இரசாயன உரவிலை அதிகமாக உள்ள இந்த நேரத்தில்-கரும்பில் கிடைக்கும் இலாபம் குறைவாக உள்ளது! கரும்பின் உற்பத்தித் திறனைப் பெருக்கினால்தான், கரும்பில் மிகுந்த இலாபம் காணமுடியும்! எனவே, கரும்புசாகுபடி செய்யும் உழவர் பெருமக்களின் நலன் கருதி, கரும்பின் உற்பத்தியைப் பெருக்கி மிகுந்த இலாபம் அடைவதற்குரிய பத்து வழி முறைகளை ஈண்டு விளக்கியுள்ளோம்.

## பருவம்

''பருவத்தே பயிர் செய்'' என்ற பழமொழிக்கேற்ப பருவத்தில் கரும்பு செய்வதே, கரும்பில் நிறைந்த மகசூல் பெறுவதற்குரிய முதல்வழியாகும்!

தமிழ்நாட்டில் கரும்பு சாகுபடிக்கு முக்கியமாக 2 பட்டங்கள் (பருவங்கள்) ஏற்றதாக உள்ளன.

முக்கிய பட்டம் : டிசம்பர்—ஜனவரி முதல் ஏப்ரல்—மே வரை.

தனிப்பட்டம் : ஜூலை முதல் செப்டம்பர் வரை.

முக்கியப் பட்டத்தை முன் பட்டம், இடைப்பட்டம், பின் பட்டம் என்று 3 பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. அவை பின் கண்டவாறு அமைந்துள்ளன.

முன்பட்டம் : டிசம்பர்—ஜனவரி.

இடைப்பட்டம்—பிப்ரவரி—மார்ச்சு.

பின் பட்டம்: ஏப்ரல்—மே.

மேற்கூறப்பட்ட பட்டங்களில் கரும்பு நடுவதே சிறந்தது.

## இரகங்கள்

பருவத்திற்கு ஏற்ற இரகங்களைப் பயிரிடுவதே கரும்பில் அதிக மகசூல் பெறுவதற்குரிய இரண்டாவது வழியாகும்! எனவே, பின்கண்டவாறு பருவத்திற்கு ஏற்ற கரும்பு இரகங்களை நடவு செய்ய வேண்டும்.

முன்பட்டம்—கோ. 449, கோ. 658, கோ. 997.

இடைப்பட்டம்—கோ.449, கோ. 740, கோ. 419, கோ. 6304, கோ. 658.

பின்பட்டம்—கோ. 419, கோ. 853, கோ. 449, கோ. 740.

தனிப்பட்டம்—கோ. 658, கோ. 853, கோ. 449, கோ. 740, கோ. 853..

மேற்கூறிய இரகங்களில் கோ. 419, கோ. 740, கோ. 658, கோ. 449, கோ. 853 ஆகிய இரகங்கள் வெல்லம் தயாரிப்பதற்கு மிகவும் ஏற்றவையாகும். கோ. 419, கோ. 449, கோ. 658, கோ. 853, கோ. 6304. ஆகிய இரகங்கள் சர்க்கரை ஆலைப்பகுதிகளுக்கு ஏற்றவைகளாகும். மேலும் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள கோ. 6806, கோ. 62174 ஆகிய இரகங்கள் உழவர் பெருமக்களின் நிலங்களில் பரிசோதனையாகப் பயிரிட்டுப் பார்க்கப்பட்டு வருகின்றன.

## நிலம் தயாரித்தல்

கரும்பில் அதிக மகசூல் பெறுவதற்கு நன்கு நிலத்தைத் தயாரிப்பது மூன்றாவது வழியாகும்.

கரும்பு சாகுபடி செய்யவிருக்கும் நிலத்தை 4 முதல் 6 தடவை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது புழுதியாக ஆக்க வேண்டும். டிராக்டரால் உழுதால், 2 முறை உழுதால் போதுமானது. பிறகு ஒரு மீட்டர் தூரத்திற்கு ஒரு பார் அல்லது கிடங்கு வீதமும் ஒவ்வொரு பாரும் அல்லது கிடங்கும் நில மட்டத்திலிருந்து 20 சென்டிமீட்டர் (8 அங்குலம்) ஆழம் உள்ளதாகவும் அமைக்க வேண்டும். பார் அமைக்க பார் கலப்பை அல்லது 'விக்டரி' கலப்பையைப் பயன்படுத்தலாம். நிலத்தைச் சுற்றிலும் வரப்பின் ஓரத்தில் 45 முதல் 50 சென்டிமீட்டர் (18 அங்குலம் முதல் 20 அங்குலம்) ஆழம் உள்ள வடிகால் வாய்க்கால்கள் அமைக்க வேண்டும். வடிகால் வசதி குறைந்த நிலங்களில் வடிகால் வாய்க்கால்களை நிலத்தில் 10 மீட்டர் தூரத்திற்கு ஒன்று வீதம் அமைப்பதும் நல்லது. தகுந்த இடைவெளியில் தனியாகப் பாசன வாய்க்கால்களை அமைப்பதும் சிறந்தது.

## அடிஉரம் இடுதல்

அடி உரம் இடுவது கரும்பு மகசூலை அதிகரிப்பதற்குள்ள நான்காவது வழியாகும்.

கடைசி உழவில் ஏக்கருக்கு 10 வண்டி (5 டன்) தொழு



எரு அல்லது கலவை எரு வீதம் இட வேண்டும். அல்லது ஏக்கருக்கு 20 வண்டி (10 டன்) 'பிரஷ் மட்' எனப்படும் ஆலை அழுக்கையும் அடியுரமாக இடலாம்.

பார்கள் அல்லது கிடங்கில் ஏக்கருக்கு 25 கிலோ மணிச்சத்து அளிக்க 156 கிலோ 'சூப்பர்பாஸ்பேட்' இட்டு மண்ணுடன் கலக்கச் செய்யவும்.

## விதைக்கரணைகள்

தரமான விதைக்கரணைகளை போதிய அளவில் நடுவதே கரும்பில் அதிக மகசூலைப் பெறுவதற்குரிய ஐந்தாவது வழியாகும்.

கரும்பு நடுவதற்கான விதைக் கரணைகளை 6 முதல் 8 மாத வயதுடைய நாற்றங்கால் கரும்புகளிலிருந்து வெட்டி எடுப்பதே சிறந்தது. நாற்றங்கால் கரும்புகளிலிருந்து தயாரிக்கப்படும் விதைக்கரணைகளே வீரியமாக வளரும். ஒரு ஏக்கர் நடுவதற்கு 10 முதல் 12 சென்ட் கரும்பு நாற்றங்கால் தேவைப்படும். நாற்றங்கால் கரும்பிலிருந்து விதைக்கரணைகள் தயாரிக்க முடியாவிட்டால், பூ பூக்காத 12 மாத வயதுடைய கரும்புகளின் நுனிப் பாகங்களை (கரும்பின் மொத்த நீளத்தில், மேலே உள்ள 3-ல் 1 பகுதியை) மட்டும் வெட்டி எடுத்து விதைக் கரணைகள் தயாரிக்கலாம். தற்பொழுது பலர் கரும்பின் அடிப் பாகத்திலிருந்தும் கரணைகளை வெட்டி நடவு செய்கிறார்கள் இது மிகவும் தவறு. இவ்வாறு செய்வதால் முளைப்பும் குறைகிறது; நோய், பூச்சிகளின் தாக்குதலுக்கும் இலக்காகிறது. எனவே, மேற்கூறியவாறு கரும்பின் நுனிப்பாகத்திலிருந்து கரணைகள் தயாரிப்பதே சிறந்தது.

ஒரு ஏக்கரில் 15,000 மூன்று பருவுள்ள விதைக்கரணைகளை அல்லது 22,500 இரு பருவுள்ள கரணைகளை நட வேண்டும்.

## கரணைகளை நடுதல்

விதைக் கரணைகளை முறையோடு நடுதல், கரும்பில் அதிக

மகசூல் பெறுவதற்குரிய ஆறு வது வழியாகும்.

பார்களின் அல்லது கிடங்கு களின் அடிப்பாகத்தை களைக் கொத்தினுல் கொத்தி விட்டு புழுதியாக்க வேண்டும். பிறகு பார்களின் அல்லது கிடங்கு களின் இடையில் தண்ணீர்விட வேண்டும். பார்களின் இடை யில் தண்ணீர் வற்றி, மண் நன் ருக ஊறிய பிறகு விதைக் கரணைகளை நட வேண்டும்.

விதைக்கரணைகளை நடுவ தற்கு முன்பு, கரணைகளின் வெட்டப்பட்ட நுனிகளை 'அரிட்டான்' அல்லது 'அக லால்' மருந்து கலந்த நீரில் நனைத்து எடுக்க வேண்டும். 112 கிராம் 'அரிட்டான்' அல் லது 224 கிராம் 'அகலால்' மருந்தை 45 லிட்டர் (10 காலன்) தண்ணீரில் கலந்து கொண்டு, அக்கரைசலில் விதைக்கரணைகளின் வெட்டுப் பட்ட நுனிகளை நனைத்து எடுத்து, பிறகு நட வேண்டும்.

கரையான் தாக்குதல் உள்ள நிலங்களில் ஏக்கருக்கு 15 கிலோ வீதம் 'பி.எச்.சி.' 10 சதத் தூளையோ அல்லது 'ஹெப்டோகுளோர்' தூளை யோ பார்களில் அல்லது கிடங்குகளில்—கரணைகளை நடு வதற்கு முன்பு — தூவி விட வேண்டும்.

பார்கள் அல்லது கிடங்கு களின் நடுவில் கரணைகளை வரி சையாகவோ அல்லது ஒன்றன் பின் ஒன்ருக ஏற்றி வைத்தோ நடவு செய்ய வேண்டும். நடும் பொழுது கரணைகளின் மேல் அரை அங்குல அளவுக்கு மண் மூடும்படி நடவு செய்ய வேண் டும்.

கரணைகளை நடும்பொழுது, கரணையின் பருக்கள் பக்கவாட் டில் இருக்கும்படி வைத்து நடுவது மிகவும் முக்கியமான தாகும்.

வெளிப்பக்கப் பார்களில் அதிகக் கரணைகளை இரு வரி சைகளாக நடவு செய்வது சிறந்தது. இவ்வாறு நடவு செய்தால், ஒரு மாதத்திற்குப் பிறகு இடைத்தரிசு ஏற்பட் டுள்ள இடங்களில் அதாவது கரணைகள் முளைக்காத இடங் களில் நடுவதற்குப் பயன்படும். அதிகமாக உள்ள முளைத்த கரணைகளைப் பிடுங்கி எடுத்து, முளைக்காத இடங்களில் நட லாம்.

**நீர்ப்பாசனம்**

நிரந்தரமான நீர்ப்பாசன வசதி அளிப்பதே கரும்பில் அதிக மகசூல் பெறுவதற்குரிய ஏழாவது வழியாகும்.

நிரந்தரமான நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் மட் டுமே கரும்பு பயிரிடுதல் சிறந் தது. கரணைகளை நட்ட 7-வது நாள் உயிர்த்தண்ணீர் விட வேண்டும்.

கரணை முளைக்கும் காலத்தில் அதாவது நட்டு 35 நாட்கள் வரை, 7 முதல் 10 நாட்கள் இடைவெளியில் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

தூர் கிளைக்கும் காலத்தில் அதாவது நட்ட 36 முதல் 100 நாட்கள் வரை, 10 நாட்கள் இடைவெளியில் தண்ணீர் விட வேண்டும்.

வளர்ச்சிப் பருவத்தில் அதா வது நடவு செய்த 101 முதல் 270 நாட்கள் வரை, 7 நாட்கள் இடைவெளியில் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

கரும்பு முதிர்ச்சி அடையும் பருவத்தில் அதாவது நடவு செய்த 270 நாட்களுக்கு மேல் 15 நாட்களுக்கு ஒருமுறை வீதம் நீண்ட இடைவெளியில் நீர் பாய்ச்சுதல் இலாபகர மானது.

பொதுவாக மழை ஈரம் போக, கரும்புக்கு 25 முதல் 30 முறை நீர் பாய்ச்ச வேண் டியிருக்கும்.

கரும்புக்கு தண்ணீர் வசதி எவ்வளவு முக்கியமோ அது போல் வடிகால் வசதியும் முக் கியமானது. கரணைகள் முளைக் கும் காலத்திலும், கரும்பு வள ரும் காலத்திலும் கரும்பு வய லில் தண்ணீர் தேங்கி நிற்கா மல் வடித்து விட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

**மேல் உரம் இடுதல்**

தேவையான அளவிலும், காலத்திலும் மேல் உரம் இடு வது கரும்பு மகசூலைப்பெருக்கு வதற்குரிய எட்டாவது வழியா கும்.

கரும்பு பயிரிடுவதற்கு முன் ஞல் பயிர்ச் சுழற்சியில் ஒரு பசுந்தாளுரப் பயிர் வருமாறு திட்டமிட்டுச் சாகுபடி செய் வது சிறந்தது. குறுகிய காலப் பயிரான சணப்பையை விதைத்து, பூக்கும் தருணத் தில் மடக்கி உழுது, பிறகு கரும்பு பயிரிடல் சிறந்தது. இது, இயலவில்லையெனில், கரும்பு நடவுசெய்த பின் சணப்பையை ஊடு பயிராகச் சாகுபடி செய்து, அவைகளைப் பிடுங்கிக் கரும்புக்கு உரமாக வைக்கலாம். கரும்பு நட்ட 35 முதல் 45 நாட்களுக்குள் ஏக்க ருக்கு 15 கிலோ சணப்பை விதையை கரும்பு பார்களுக்கு இடையில் விதைக்க வேண்டும். சணப்புப் பயிர் 45 நாள் வய துடையதாக இருக்கும்பொழுது அவைகளைப் பிடுங்கி கரும்புத் தூர்களில் வைத்து, 2-வது முறையாக மேலுரமும் இட்டு, மண் அணைத்துத் தண்ணீர் விடு தல் வேண்டும்.

கரும்புக்கு மேலுரமிட மாவட்டத்திற்கு ஏற்றாற்போல் பின்கண்ட அளவில் தழைச் சத்து அளிக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

| மாவட்டத்தின் பெயர் | ஏக்கருக்குப் பரிந்து ஊரைக்கப் படும் தழைச் சத்து (கிலோ) |
|---|---|
| தஞ்சாவூர் | 112 |
| திருச்சி | ,, |
| தென்னுர்க்காடு | ,, |
| கோவை, சேலம், தருமபுரி, வடஆர்க் காடு, செங்கற்பட்டு மாவட்டங்கள் | 90 |
| மதுரை, ராமநாத புரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் | 75 |

மேலும் ஏக்கருக்கு 45 கிலோ சாம்பல் சத்தையும் மேற்கூறிய தழைச்சத்துடன் சேர்த்து மேலுரமாக இட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

மேற்கூறிய அளவு தழைச் சத்தையும், சாம்பல் சத்தையும் இருதடவைகளில் மேலுரமாக இடவேண்டும். கரும்பு நட்ட 45-வது நாள் முதல் முறையும், 90-வது நாள் இரண்டாவது முறையும் ஆக மேலுரமிட வேண்டும்.

தஞ்சாவூர், திருச்சி, தென்னுர்க்காடு மாவட்டங்களில் ஒவ்வொரு முறையும் மேலுரமிடப் பின்கண்ட அளவு இரசாயன உரங்களைப் பயன்படுத்த வேண்டும்.

| | கிலோ |
|---|---|
| அமோனியம் சல்பேட் | 280 |
| அல்லது யூரியா | 124 |
| மியூரியேட் ஆப் பொட்டாஷ் | 41 |

கோவை, சேலம், தருமபுரி, வடஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் ஒவ்வொரு முறையும் மேலுரமிட பின் கண்ட அளவு இரசாயன உரங்களைப் பயன்படுத்த வேண்டும்.

| | கிலோ |
|---|---|
| அமோனியம் சல்பேட் | 240 |
| அல்லது யூரியா | 105 |
| மியூரியேட் ஆப் பொட்டாஷ் | 41 |

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியா குமரி மாவட்டங்களில் ஒவ்வொரு முறையும் மேலுரமிட பின்கண்ட அளவு இரசாயன உரங்களைப் பயன்படுத்த வேண்டும்.

| | கிலோ |
|---|---|
| அமோனியம் சல்பேட் | 190 |
| அல்லது யூரியா | 84 |
| மியூரியேட் ஆப் பொட்டாஷ் | 41 |

## தோகைகள் மூலம் உரமிடல்

கரும்புத் தோகைகளில் யூரியா உரக்கரைசலைத் தெளித்தால், ஏக்கருக்கு 44 கிலோ தழைச்சத்தை மீதப்படுத்த முடியும் என்பது கடலூரில் உள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில், 3 ஆண்டுக் காலம் தொடர்ந்து நடத்திய சோதனைகளிலிருந்து தெரியவருகிறது. இதனுல் இரசாயன உரமிடும் செலவு கணிசமாகக் குறைகிறது!

ஏக்கருக்கு 112 கிலோ தழைச்சத்தை இரு தடவைகளில் மண்ணில் இடுவதற்குப் பதிலாக, 45 கிலோ தழைச் சத்தை 45-வது நாளில் மண்ணில் இட்டும், 23 கிலோ தழைச்சத்தை 90-வது நாளும் 110-வது நாளும் ஆக இரு தடவைகளில் யூரியா கரைசல் மூலமாக தெளித்தும்-ஆக 68 கிலோ தழைச்சத்தை மட்டும் பயன்படுத்தினுல் போதுமானது என்பது அச்சோதனைகளின் மூலம் தெரிய வந்துள்ளது!

மண்ணில் 112 கிலோ தழைச் சத்து அளித்தால், எவ்வளவு மகசூலும்,சர்க்கரையும் கிடைக்குமோ அதே அளவு மகசூலும், சர்க்கரையும் 68 கிலோ தழைச் சத்தைப் பயன்படுத்தி தோகைகளின் மேல் யூரியா தெளிப்பதால் கிடைக்கிறது என்பது திட்டவட்டமாகத் தெரிய வந்துள்ளது.

இந்த முறையில் இரசாயன உரமிட 45-வது நாளில் 45 கிலோ தழைச்சத்தை அமோனியம் சல்பேட் அல்லது யூரியாவாக மண்ணில் இட வேண்டும். இரண்டாம் தடவை 45 கிலோ தழைச்சத்தை மண்ணில் இடுவதற்குப் பதிலாக, 23 கிலோ தழைச்சத்தை மட்டும் யூரியா கரைசலாகக் கரும்பின் தோகை மீது தெளிக்க வேண்டும்.

23 கிலோ தழைச்சத்து அளிக்க 50 கிலோ யூரியா தேவைப்படும். 50 கிலோ யூரியாவை இரண்டு சமமாகப் பிரித்துக் கொண்டு தண்ணீரில் கரைத்துக் கொண்டு கரும்பு நட்ட 90-வது நாள் ஒருமுறையும், 110-வது நாள் ஒருமுறையும் ஆக இருமுறை கரும்புத் தோகைகளின் மேல் தெளிக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் 25 கிலோ யூரியாவை, 1,000 லிட்டர் தண்ணீரில் கரைத்துக் கொண்டு தெளிப்பான் மூலம் கரும்புத் தோகைகளின் மேல் ஒரே சீராகத் தெளிக்க வேண்டும்.

இரண்டாவது தடவையாக மேலுரமிடுவதை 120 நாட்களுக்குள் வைத்துவிட வேண்டும். 120 நாட்களுக்குப் பிறகு மேலுரம் இடுதல் இலாபகரமானதல்ல! அளவுக்கு மேல் இரசாயன உரமிடுவதும், காலங்கடந்து மேல் உரமிடுவதும் சர்க்கரைச் சத்தைப் பாதிப்பதுடன், அறுவடை காலத்தை நீடிக்கச் செய்யும்!

## பின்செய் நேர்த்தி

பின்செய் நேர்த்தி முறைகளை முறையாக மேற்கொள்வது கரும்பு மகசூலைப் பெருக்குவதற்குள்ள ஒன்பதாவது வழியாகும்.

கரும்பு நட்ட மூன்று அல்லது நான்கு வாரங்களுக்குப் பிறகு களையெடுக்க வேண்டியது அவசியமாகும். முதல் களையெடுத்த பின்பு கரும்புகளுக்கிடையில் இலைச் சருகுகளைப் போட்டு மூடுதல் நல்ல பயனளிக்கும். நிலத்தின் நிலைமைக்கேற்ப கரும்பு வரிசைகளை ஒட்டி மீண்டும் ஒரு முறை களை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

இரண்டாவது முறை உரம் வைத்த பிறகு இலைச் சருகுகளைக் கரும்புக் குத்துகளுக்

# சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை.) எண். 151.

சேலம்-1. தொலைபேசி எண் 2402

கிளைகள் :—நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசீபுரம், ஓமனூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணபுரம், சிறப்பு அங்காடி, சேலம் கடை வீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம் ஆட்டையாம்பட்டி, செவ்வாய்பேட்டை, சேலம்-2, பெத்தநாய்க்கன்பாளையம், மேட்டூர், டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

**சொந்த நிதி ரூ. 323 லட்சம் நடைமுறை மூலதனம் 1690 லட்சம்**

**வட்டி விகித அட்டவணை 23-7-'74 தேதி முதல்**

| | | |
|---|---|---|
| கால் டெபாசிட்டுகள் : | ரூ. 5,000-க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்) | $3\frac{1}{4}$% |
| | ரூ. 10,000-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) | $3\frac{1}{2}$% |
| சீசன் டெபாசிட்டுகள் : | ரூ. 1,000-க்கும் அதற்கு மேலும் | |
| | 15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் | 3% |
| | 46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் | $3\frac{1}{2}$% |
| பிக்செட் டெபாசிட்டுகள் : | ரூ. 50-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு | |
| | 1. 91 நாட்களுக்கும் அதற்கு மேல் 6 மாதத்திற்குள் | $5\frac{1}{2}$% |
| | 2. 6 மாதத்திற்கும் அதற்கு மேல் 9 மாதத்திற்குள்... | 6% |
| | 3. 9 மாதத்திற்கும் அதற்கு மேல் 12 மாதத்திற்குள்... | 7% |
| | 4. 12 மாதத்திற்கும் அதற்கு மேல் 36 மாதத்திற்குள். | 8% |
| | 5. 36 மாதத்திற்கும் அதற்கு மேல் 60 மாதத்திற்குள். | 9% |
| | 6. ஐந்து வருடங்களுக்கு மேல் ... | 10% |

நடப்புக் கணக்கு $\frac{1}{2}$% சேமிப்பு கணக்கு 5%

ரூ. 5,000-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின் மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க!

**எஸ். ஆறுமுகம்,** எம்.எல்.ஏ.
தலைவர்



## விவசாயிகளின் உண்மைத் தோழன்

# ஐம்கோ

ஐம்கோவின சக்திவாய்ந்த கிருமிநாசினிகளை உபயோகியுங்கள்.
காம்பி ஈஸி. ● டோக்ஸாதியான் ● என்டோஸோல்
● என்டோஸோல்:.பான் 35 ஈஸி. ● டி.டி.டி. 50%
● மலாதியான் • கார்பரில் 10% மற்றும் 50%
● பராதியான் மற்றும் ஹார்மோஸெல் கூட.
(நன்கு திட்டமிட்ட வளர்சசிக்கும் பாதுகாப்பிற்கும்)
தர்தி-போஷக் (நுணணிய போஷகவஸ்துச்கள்)
உங்கள் பயிரை பாதுகாக்க.

AIMCO PRODUCTS
AIMCO

Tam

விவரங்களுக்கும், வினியோகஸ்தர் மற்றும் சில்லறை வியாபாரி ஆக விரும்புபவருககு :

**ஆல் இந்தியா மேடிகல் கார்பரேஷன்**

185, பிரின்ஸெஸ் ஸ்ட்ரீட், பம்பாய் 400 002.
தபால் பெட்டி எண் 2398; GRAMS:PARAVION.போன்:315390



குப் பக்கவாட்டில் வைக்க வேண்டும். பார்களை வெட்டி, கரும்புக் குத்துகளுக்கு மண் அணைக்க வேண்டும். கரும்பு இலைகளைச் சேர்த்துக் கட்டிவிடுவதன் மூலம் கரும்புகள் சாய்ந்து சேதமாவதை தடுக்க முடியும்.

**பயிர்ப் பாதுகாப்பு**

பூச்சிகள், நோய்கள் ஆகியவற்றின் தாக்குதலில் இருந்து கரும்பைக் காப்பாற்ற, பின்கண்ட பயிர்ப்பாதுகாப்பு முறைகளை மேற்கொள்வதே, கரும்பு மகசூலைப் பெருக்குவதற்குரிய பத்தாவது வழியாகும்!

**(அ) குருத்துப்பூச்சி**

1. 'காமா பி.எச்.சி.'20 சத மருந்தை ஏக்கருக்கு 2 லிட்டர் வீதமும், 'ஹெப்டோகுளோர்' 20 சத மருந்தை ஏக்கருக்கு 2 லிட்டர் வீதம் 900 லிட்டர் தண்ணீரில் கலந்து கரும்பு கரணைகளின்மீது தெளிப்பதன் மூலம் குருத்துப் பூச்சியையும், கறையானையும் கட்டுப்படுத்த முடியும்.

2. 0.1 'சத என்டரின்' (550 மி. லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து) தெளிப்பது அல்லது ஏக்கருக்கு 4.8 கிலோ வீதம் 'லிண்டேன்' 10 சத குருணைகளை இலைகள், தண்டுகளோடு இணைந்துள்ள பகுதிகளில் நடவு செய்து 3-வது வாரத்தில் தொடங்கி 21 நாட்களுக்கு ஒரு முறையாக, 3 முறை இடவேண்டும்.

இப்பூச்சிகளின் முட்டைகளை சேதப்படுத்தும் 'டிரைகோக்ரம்மா ஆஸ்ட்ராலிகம்' என்ற பூச்சியைக் கரும்பு பயிரிட்டுள்ள நிலத்தில் விட வேண்டும்.

**(ஆ) மேல் குருத்துப் பூச்சி**

1. இப்பூச்சிகளின் முட்டைகளைச் சேகரித்து அழிப்பது; மற்றும் தாக்குண்ட பயிர்களைக் கையால் களைந்துவிடுவது;

2. தழைச்சத்து மிக்க உரங்களை இடுவது:

3. நல்ல வடிகால் வசதி அமைப்பது.

4. இப்பூச்சிகளைக் கொல்லும் 'ஐசோடிமா ஜாவென்சிஸ்' என்ற பூச்சியைக் கரும்பு வயலில் விடுவது.

5. நடவு செய்து 150-வது நாளில், மற்றும் 180-வது நாளில் 0.1 சத 'என்ட்ரின்' (550 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிப்பது.

**(இ) இடைக்கணு குருத்துப் பூச்சி :**

அடிக்கடி காய்ந்த இலைகளை உரித்து விடவேண்டும். பூச்சியின் முட்டைகளைச் சேகரித்து அழித்துவிட வேண்டும். பூச்சி தாக்கிய பயிர்களையும் அழித்து விட வேண்டும்.

**(ஈ) செதில் பூச்சிகளும், மாவுப் பூச்சிகளும் :**

0.1 சத 'மாலதியான்' மருந்தை தெளிக்கவும். (200 மில்லி லிட்டர் மருந்துடன் 100 லிட்டர் தண்ணீர் கலக்கவும்)

**(உ) இலைப்பூச்சி :**

'மாலதியான்' 0.05 சத மருந்தை (100 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீர் கலந்து) தெளிக்கவும். அல்லது ஏக்கருக்கு 15 கிலோ முதல் 20 கிலோ வரை 'பி.எச்.சி'. 5 சத மருந்தைத் தூவவும்.

**(ஊ) கறையான்**

ஏக்கருக்கு 2 லிட்டர் 20 சத'காமா பி.எச்.சி.' மருந்தைத் தெளிக்கவும். அல்லது ஏக்கருக்கு 2 லிட்டர் 'ஹெப்டாகுளோர்' 20சத இ.சி. மருந்தை 900 லிட்டர் தண்ணீரில் கலந்து நடவின் பொழுது கரும்பு கரணைகளின் மீது தெளிக்கவும் அல்லது ஏக்கருக்கு 13 கிலோ ஹெப்டாகுளோர் 3 சத மருந்தை நடவின் பொழுது தூவவும்.

கரணைகளை, நடும் பொழுது அரிடான் அல்லது அகலால் மருந்துகளில் நனைந்து நடவு செய்வதால்-கரணை மூலம் பரவும் அன்னாசி நோய் கட்டுப்படுத்தப்படுவதோடு முளைப்புத் திறனும் அதிகரிக்கும். நல்ல ஆரோக்கியமான நோயற்ற கரும்புப் பயிரில் இருந்து கரணைகளை எடுத்து நடவு செய்வதன் மூலம் கரிப்பூட்டை நோயைக் கட்டுப்படுத்தலாம். கரிப்பூட்டை நோய் தாக்கினால் சாட்டைகளைக் கவனமுடன் கோணிப் பைகளில் சேகரித்து, ஒதுக்குப் புறமான இடத்திற்குச் எடுத்துச் சென்று எரித்து விட வேண்டும்.

**அறுவடை**

எல்லா வகைக் கரும்புகளிலும் பிப்ரவரி-மார்ச் மாதங்களில் சர்க்கரைச் சத்து மிகுதியாகக் காணப்படும். எனவே ஏப்ரல் மாதத்திற்கு முன்பு அறுவடை செய்துவிட வேண்டும். கட்டைக் கரும்பை, நடவு கரும்பைவிட ஒரு மாதத்திற்கு முன்பாக அறுவடை செய்து விடலாம். அறுவடையின் பொழுது கரும்புகளைத் தரை மட்டத்துக்கு வெட்டிவிட வேண்டும்.

**வேண்டுகோள்**

மேற்கூறிய பத்து வழிமுறைகளையும் கடைப்பிடித்துக் கரும்பு சாகுபடி செய்தால் ஒரு ஏக்கரில் குறைந்தது 40 மெட்ரிக்டன் கரும்பும் உயர்ந்த அளவாக 100 டன் கரும்பும் விளைவிக்க முடியும்! எனவே, மேற்கூறிய பத்து வழிமுறைகளையும் மேற்கொண்டு கரும்பு உற்பத்தியைப் பெருக்கி உங்கள் வருவாயையும், நாட்டின் பொருளாதாரத்தையும் பெருக்கிடுங்கள் என்று கரும்பு பயிரிடும் தமிழக உழவர் பெருமக்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

-ஆர். எம்.

# மகிழ்ச்சியாகவுள்ள எந்த உழவர் பெருமகனையாவது கேளுங்கள்!

அவருடைய செழுமை மற்றும் மகிழ்ச்சியின் ரகசியம் "பாரி" என்ற ஒரே வார்த்தையில் அடங்கியுள்ளது. பாரி நிறுவனத்தார் வழங்கும் பல்வேறு வகையான இரசாயன உரங்கள் நிலத்திற்குப் புதுவாழ்வு அளிக்கின்றன. பாரியின் தரமான ஒட்டு வீரிய விதைகள்-நவீன கருவிகளைக் கொண்டு பக்குவப்படுத்தப்பட்டு, அரசாங்கத்தால் சான்றிதழ் வழங்கப்பட்டவை-உழவர் பெருமகன், பெருமகசூல் பெற்றிட உதவுகிறது. பாரி நிறுவனத்தாரின் பயிர்ப்பாதுகாப்பு இரசாயன மருந்துகள், பயிர்களைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களுக்கு எதிராகச் சிறந்த பாதுகாப்பு அளிக்கின்றன. பாரி நிறுவனம், வேளாண்மைத் தொடர்புடைய இரசாயனங்களைச் சிறந்த முறையிலும், சிக்கனமாகவும் பயன்படுத்த விசைத் தெளிப்பான்களையும் வழங்குகிறது. பாரி நிறுவனத்தின் அறிவுரைப் பணி பல்லாண்டு அனுபவத்தின் அடிப்படையிலானவை-செழிப்பை நோக்கி உழவர் பெருமகன் செல்ல உதவுகிறது.

## செழிப்புக்கு உதவுவது பாரி!

**ஈ. ஐ. டி. பாரி லிமிடெட்,**
(இங்கிலாந்துடன் இணைக்கப்பட்டது
உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)
*இரசாயன உரத்துறை,*
*'டேர் ஹவுஸ்'*
*சென்னை-1.*




"காசு பணம் சேர்த்திட வீரிய ஒட்டுக்கம்பு பயிரிடு!'' என்று அனுபவமுள்ள உழவர் பெருமக்கள், மற்ற உழவர் பெருமக்களுக்குப் பரிந்துரைக்கின்றார்கள்! ஏனெனில், மூன்று மாத காலத்திற்குள், குறைந்த தண்ணீர் வசதியைக் கொண்டு குறைந்த செலவில், அதிக மகசூலும், அதிக இலாபமும் பெற வீரிய ஒட்டுக் கம்பு ரகங்கள் உதவுகின்றன.

முன்னோடி உழவர் பெருமக்களில் பலர் இறைவையில் 'எச் பி. 3' அல்லது எச்.பி. 5 ரகக் கம்பு பயிரிட்டு, ஏக்கருக்கு 2,000 முதல் 2,500 கிலோ வரை தானிய மகசூல் பெற்று, குவிண்டால் ரூபாய் 150 முதல் ரூபாய் 180 வீதம் விற்று, ஒரு ஏக்கரிலிருந்து 85 நாட்களில் ரூபாய் 3,000 முதல் ரூபாய் 4,500 வரை வருவாய் பெற்றுள்ளார்கள்! இந்தஅளவு வருவாய் பெற அவர்கள் ஏக்கருக்கு ரூபாய் 1,000 முதல் 1,200 வரை செலவிட்டுள்ளார்கள். எனவே, 85 நாட்களில் 'எச்.பி. 3' அல்லது 'எச்.பி. 5' ரகக் கம்பு மூலம் அவர்களுக்கு, ஏக்கருக்கு ரூபாய் 1,800 முதல் ரூபாய் 3,300 வரை நிகர இலாபம் கிடைத்துள்ளது.

எனவே, மாசிப் பட்டத்தில் வீரிய ஒட்டுக் கம்பு பயிரிடுவதற்குரிய முறைகளைக் கீழே விளக்கியுள்ளோம்.

### சாகுபடி முறைகள்

**ஏற்ற ரகங்கள் :** எச். பி. 3—75 முதல் 80 நாட்கள் வயதுடையது. எச். பி. 5—80 முதல் 85 நாட்கள் வயதுடையது.

126 டி 2ஏ × ஜே 1270 (பரிசோதனையில் உள்ளது) —80 முதல் 90 நாட்கள் வயதுடையது.

**விதைக்கும் பருவம் :** இறைவையாகப் பயிரிட மாசிப் பட்டம் (பிப்ரவரி—மார்ச்) மிகவும் ஏற்றது.

**விதை அளவு :** நாற்றுவிட்டு ஒரு ஏக்கரில் நடுவதற்கு 1 கிலோ சான்றிதழ் பெற்ற விதைகள் தேவை.

**விதையுடன் மருந்து கலக்குதல் :** முன்பே மருந்து கலக்கப்படாத விதை எனில், ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்', 2 கிராம் 'டீ.எம். டீ.டி.' மருந்து வீதம் கலக்க வேண்டும்.

**நாற்றங்கால் :** ஒரு ஏக்கர் நடுவதென்றால், 3 சென்ட் நிலத்தில் நாற்றங்கால் தயாரிக்க வேண்டும். 3 சென்ட் நாற்றங்காலுக்கு ஒரு வண்டி தொழு எருவிட்டு, நன்கு உழுது புழுதியாக்க வேண்டும். பிறகு நாற்றங்காலை மேடைப் பாத்திகளாக அமைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதால், நாற்றுகள் அழுகிச் சேதம் அடையா.

மேடைப் பாத்திகளின் மேல் குறுக்கு வாட்டத்தில் ஓர் அங்குல இடைவெளியில் சிறு குச்சியால் இலேசாகக் கோடுகள் இழுக்கவும். அக்கோடுகளில் விதைகளை வரிசையாக விதைப்பது சிறந்தது. சாதரண முறையிலும் விதைக்கலாம். விதைத்த பின்பு, கையால் இலேசாக மண்ணைக் கிளறி விதைகளை மூட வேண்டும். அல்லது விதைத்த பின்பு, பாத்திகளின் மேல் நன்ருகப் பொடியாக்கப்பட்ட மக்கிய தொழு எரு அல்லது கலவை எருவை இலேசாகத் தூவி விடுதல் சிறந்தது. பிறகு பாத்திகளின் மேல் நல்ல ஈரம் இருக்குமளவுக்குத் தண்ணீர் பாய்ச்சவும்.

விதைத்த 3-வது நாள் முனை நீர் விட வேண்டும். பிறகு தேவைக்கேற்ப 5 முதல் 7 நாட்களுக்கு ஒரு முறை நாற்றங்காலுக்குத் தண்ணீர் விட வேண்டும். விதைத்த 11-வது நாளில் அதாவது நாற்றுப்பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பாக 3 சென்ட் நாற்றங்காலுக்கு 5 கிலோ அமோனியம் சல்பேட் வீதம் தூவினுல் நாற்று நன்கு தடித்து வளரும். விதைத்த 18-வது நாள் நாற்றுக்களைப் பிடுங்கி நடுதல் சிறந்தது.

**நடவு வயல் தயாரித்தல் :** வயலை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது புழுதியாக்கவும். கடை உழவில் ஏக்கருக்கு 20 வண்டி தொழு எரு அல்லது கலவை எருவை இட்டு, நன்கு மண்ணுடன் கலக்குமாறு உழுது விட வேண்டும். பிறகு வயலில் நீர்ப்பாசன வசதிக்கு ஏற்ப, தகுந்த அளவில் பாத்திகள் அமைத்துக் கொள்ள வேண்டும். அல்லது வயலில் 1.5 அடி இடைவெளிக்கு ஒரு பார் வீதம் அமைத்துக்கொள்ளலாம். பாத்திகளில் நடுவதைவிட, பார்களில் நடுவதே சிறந்தது.

**அடி உரம் இடுதல் :** ஏக்கருக்கு 14 கிலோ தழைச்சத்து, 14 கிலோ மணிச் சத்து, 14 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளைத் தரும் இரசாயன உரங்களை அடியுரமாக இட வேண்டும். இந்த அளவுச் சத்துக்களை அளிக்க ஏக்கருக்கு 82.5 கிலோ 17 : 17 : 17 'விஜய்' காம்ப்ளெக்ஸ் உரத்தை அடியுரமாக இட வேண்டும்.

விதைகளை நாற்று விடாமல் நேரடியாக விதைப்பதாக இருந்தால், படைச்சாலிலேயே உரங்களை இட்டு மூடி விட வேண்டும்.

பாத்திகளில் நடுவதாக இருந்தால், அடியுரத்தைக் கடைசி உழவில் இட்டுவிட வேண்டும்.

பார்களில் நாற்றுக்களை நடுவதானல், பார்களின் ஒரு பக்கச் சரிவின் அடியில் குச்சியால் இலேசாகக் கோடு இழுத்து, அதில் இரசாயன உரத்தை இட்டு மண்ணல் மூடி விடவும்.

**நடுதல் :** நாற்றுவிட்ட 18-வது நாளில் நாற்றைப் பறித்து நட்டுவிட வேண்டும். நடுவதற்கு முன்பாகப் பார்களின் இடையில் அல்லது பாத்திகளில் தண்ணீர் பாய்ச்சவும். இரசாயன உரமிடப்பட்ட பாரின் சரிவில், இரசாயன உரமிடப்பட்ட வரிசைக்கு மேலே 3 அங்குல உயர வரிசையில், 6 அங்குல இடைவெளிக்கு ஒரு நாற்று வீதம் நட வேண்டும்; நாற்றுக்கள் மெலிந்திருந்தால்,

# தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கழகம்

**89, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை, சென்னை-600010**

தொலைபேசி : 666641, 666642, 666643, 661536

தந்தி : "COSUPMARK"

## மகத்தான விவசாய சேவை

1. உர வகைகள் நியாய விலையில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிராமங்களில் விநியோகிக்கப்படுகின்றன.

2. பாமணி உர ஆலை மூலம் 17 : 17 : 17 மற்றும் இதர கலப்பு உரங்கள் தயாரித்து விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

3. விவசாய தானியங்களையும் இதர விளைபொருள்களையும் விற்பனைச் சங்கங்கள் மூலம் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து விற்க ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

4. மன்னார்குடியில் டிராக்டர் பணிமனை மூலம் டிராக்டர்கள் குறைந்த செலவில் பழுது பார்க்கப்படவும், டிராக்டர் குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்குக் கிடைக்கவும் சேவை செய்து வருகிறது.

5. சென்னையில் குளிர்பதன சாதனக் கிடங்கில் ஆப்பிள், உருளைக்கிழங்கு பழ வகைகள் சேமித்து வைத்து விற்பனை செய்யவும் மற்றவர்களுக்கு சேமித்து வைக்க இடம் வாடகைக்குக் கொடுத்து வருகிறது. தவிர தினம் 10 டன் பனிக்கட்டி தயார் செய்து விநியோகிக்கிறது.

6. சூரியகாந்தி, நிலக்கடலை விதைகளிலிருந்து நவீன முறையில் எண்ணெய் எடுக்கும் ஆலைகள் முறையே விருத்தாசலம், திருவண்ணாமலை ஆகிய இடங் களில் அமைக்க உள்ளது.

மேலும் விபரங்களுக்கு மாவட்டத் தலைமையிடங்களிலுள்ள மண்டல அலுவல கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

பி. ஜி. முகம்மது சாலிஹா,
பொது மேலாளர்.

இரா. தர்மலிங்கம்,
தலைவர்.

இரண்டிரண்டு நாற்றுகளாக நட வேண்டும்.

பாத்திகளில் நாற்றுகளை நடுவதாயிருந்தால், வரிசைக்கு வரிசை 1.5 அடி இடைவெளியும், வரிசையில் பயிருக்குப் பயிர் 6 அங்குல இடைவெளியும் விட்டு, வரிசை வரிசையாக நட வேண்டும்.

**நீர்ப் பாசனம் :** நடவு செய்த 3-வது நாள் உயிர்த் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பிறகு 7 முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் விட வேண்டும். தூர் கிளைக்கும் காலத்திலும்—அதாவது நடவு செய்த 12 முதல் 27 நாள் வரையான காலத்தில் (விதைத்த 30 முதல் 45 நாள் வரையான காலம்)—பூ பூக்கும் காலத்திலும், கதிர்களில் மணிகள் உருவாகும் காலத்திலும் நிலத்தைக் காய விடாமல் தண்ணீர் பாய்ச்சுதல் மிகவும் இன்றியமையாதது.

வீரிய ஒட்டுக் கம்பு பயிரிட்டுள்ள வயலில் தண்ணீர் தேங்கி நிற்கக் கூடாது. அதே போல், மேல் மண் தொடர்ந்து காயாமல் அதிக ஈரப் பசையுடன் இருப்பதும் கூடாது.

**பின்செய் நேர்த்தி :** இரண்டிரண்டு நாற்றுகளாக வைத்து நட்டிருந்தால், நடவு செய்த 10 முதல் 15 நாட்களில் நல்ல திடமான பயிரை மட்டும் விட்டுவிட்டு, மெலிந்த பயிரைக் கலைத்துவிட வேண்டும். நடவு செய்த 21-வது நாள் களை எடுக்கவும்.

**மேல் உரம் இடுதல் :** நடவு செய்த 3-வது அல்லது 4-வது வாரத்தில் ஏக்கருக்கு 14 கிலோ தழைச் சத்து அளிக்க, 70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 31 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும். பயிர் வரிசைகளுக்கு இடையில் உரமிட்டு, மண்ணைக் கிளறிக் கலந்திடச் செய்து, தண்ணீர் விடவும்.

**பயிர்ப் பாதுகாப்பு :** வீரிய ஒட்டுக் கம்புச் சாகுபடியில் பயிர்ப் பாதுகாப்பு மிகவும் முக்கியமாகும். இதில் அதிகக் கவனம் செலுத்தாததனாலேயே சில உழவர்கள் வீரிய ஒட்டுக் கம்புச் சாகுபடியில் தோல்வி கண்டுள்ளார்கள். வீரிய ஒட்டுக் கம்பு ரகங்களைக் குருத்து ஈ, மிட்ஜ் ஈ, கதிர்ப் புழு முதலிய பூச்சிகளும், துரு நோய், தேனொழுகல் நோய், பசுங்கதிர் நோய் முதலிய நோய்களும் முக்கியமாகத் தாக்குகின்றன. அவைகளைக் கட்டுப்படுத்தி அதிக மகசூல் பெற, பின்கண்ட பயிர்ப்பாதுகாப்பு முறைகளை மிகவும் கவனமாக மேற்கொள்ள வேண்டும்.

**குருத்து ஈ :** இது வீரிய ஒட்டுக் கம்பின் இளம் பருவத்திலேயே—3 வார வயது வரை—தாக்குகிறது. இதன் தாக்குதலால், பயிரின் நடுக்குருத்து காய்ந்து விடுகிறது. குறிப்பாக கோவை மாவட்டத்தில் பின் பருவக் காலத்தில் ('ரபி' பட்டம்) இப் பூச்சிகளின் தாக்குதல் அதிகமாக உள்ளது. இப் பூச்சிகளால் இளம் கம்புப் பயிர்கள் தாக்கப்படாமல் இருக்க, விதைகளை விதைக்கும் பொழுதே, படைச்சாலில் ஒரு மீட்டர் தூரத்திற்கு 1.5 கிராம் 10 சத 'போரேட்' அல்லது 3 கிராம் 5 சத 'டைசல்போடான்' அல்லது 3 கிராம் 3 சத 'கார்போஃயூரான்' குருணைகளை இடவேண்டும். இத்தகைய குருணை மருந்துகள் கிடைக்கவில்லை எனில், நடவு செய்த 21-ஆம் நாள் 300 கிராம் 50 சத கரையும் 'கார்பரில்' தூளை 150 லிட்டர் தண்ணீரில் கரைத்துத் தெளிக்கவும் அல்லது 150 மில்லி லிட்டர் 'எண்டோசல்பான்' 35 சத இ.சி. மருந்தையும் (அல்லது 'எண்ட்ரின்') 100 மில்லி லிட்டர் 'டைமீதோட்' 30 சத இ.சி. மருந்தையும் (அல்லது 'மீதைல் டெமிடான்') 150 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**மிட்ஜ் ஈ, கதிர்ப்புழு :** இவைகளைக் கட்டுப்படுத்த பூ பூக்கத் துவங்கும்பொழுது ஒரு முறையும், ஒரு வாரம் கழித்து 2-வது முறையும் ஆக 2 முறை 600 கிராம் 50 சத கரையும் 'கார்பரில்' தூளை 300 லிட்டர் தண்ணீரில் கரைத்துத்தெளிக்க வேண்டும். அல்லது 300 மில்லி லிட்டர் 'எண்டோசல்பான்' 35 சத இ.சி. மருந்தைத் தெளிக்க வேண்டும்.

இவைகளைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 5 கிலோ பி.எச்.சி. 10 சதத் தூளையும், 5 கிலோ டி.டி.டீ. 5 சதத் தூளையும் கலந்து தூவலாம். அல்லது 10 கிலோ செவிடால் (கார்பரில் 1.5 சதத் தூள் + லிண்டேன் 1.5 சதத் தூள்) அல்லது 10 கிலோ 'எண்டோ சல்பான்' 4 சதத் தூளைத் தூவலாம்.

**துரு நோய் :** இந் நோய் இளம் பயிரிலேயே காணப்படுவதால், விதைத்த 22 நாட்களுக்குள் இந் நோயினால் தாக்கப்பட்ட பயிர்களை அகற்றிவிட்டு, மீதியுள்ள பயிர்களில் 400 கிராம் 'காப்பர் ஆக்சிகுளோரைடு' மருந்தையும் 400 கிராம் 'ஜினெப்' மருந்தையும் 300 லிட்டர் தண்ணீரில் கரைத்துத் தெளிக்கவும். இந் நோய் தாக்கிய பயிர்களை அவ்வப்போது கண்டு அறிந்து, அகற்றி விட வேண்டும்.

**தேனொழுகல் நோய் :** பிசுபிசுப்பான தேன் போன்ற திரவம், தாக்கப்பட்ட பூக்களில் இருந்து கசிந்து கொண்டிருக்கும். இந் நோயைத் தடுக்க 800 கிராம் 'டைத்தேன் எம் 45' என்ற மருந்தைத் தண்ணீரில் கரைத்து, நடவு செய்த 4-வது வாரம் முதல்—15 நாட்களுக்கு ஒரு முறை வீதம்—3 முறை தெளிக்க வேண்டும். இந் நோயைக் கட்டுப்படுத்த, ஒரு கிராம் 'ஆரோபங்கின்' (Aurofungin) மருந்தை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பது மிகவும் பயனுடையது என்றும் தெரிய வருகிறது. 400 கிராம் 'டியூடர்' மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பதும் பயனுடையதாக உள்ளது.

**பசுங்கதிர் நோய் :** இந் நோயைக் கட்டுப்படுத்த 400 கிராம் 'சைரம்' மருந்தைத் தண்ணீரில் கரைத்து, பூட்டை வாங்கும் தருணத்திலிருந்து —5 நாட்களுக்கு ஒருமுறை வீதம்—3 முறை தெளிக்க வேண்டும். எச்.பி. 3 ரகக் கம்பு இந் நோயை ஓரளவிற்குத் தாங்கிக் கொள்ள வல்லது. ஜே. 126டி2 × ஜே. 1270 என்ற புதிய ரகத்தை இந் நோய் தாக்காது. எனவே, இந்நோய் தாக்காத ரகங்களைப் பயிரிடுதல் சிறந்தது.

**அறுவடை :** கதிர்கள் நன்கு முற்றிய பிறகு அறுவடை செய்ய வேண்டும். மேற்கூறியவாறு, குறித்த காலத்தில் நடுதல், இரசாயன உரமிடுதல், தண்ணீர் பாய்ச்சுதல், பயிர்ப் பாதுகாப்பு செய்தல் ஆகியவைகளை முறைப்படி செய்தால் ஒரே தடவையில் அறுவடை செய்து விடலாம். அவ்வாறு செய்யாவிட்டால், இரு முறை அறுவடை செய்ய நேரும்.

## வேண்டுகோள்

மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு, ஏக்கருக்கு 2,000 கிலோ மகசூல் பெறவும், அதன் மூலம் ஏக்கருக்குக் குறைந்தது ரூபாய் 1,500 நிகர இலாபம் பெறவும் முயற்சி செய்யும்படி தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம். ✱✱

# சக்தி சர்க்கரை லிமிடெட்

சிறந்த தரமான வெள்ளைச் சர்க்கரை,

சக்தி ஒட்டு வீரியச் சோளம்,

மற்றும்

ஒட்டு வீரியக் கம்பு விதைகள்

ஆகியவைகளை உற்பத்தி செய்கிறது.

தொழிற்சாலை:

சக்தி நகர் (அஞ்சல்),
பவானி வட்டம்,
ஈரோடு ஆர்.எம்.எஸ்.

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:

"கிரீன் லேண்ட்ஸ்"
8/28, ரேஸ் கோர்ஸ் சாலை,
கோயம்புத்தூர் - 641018

# உயர் விளைச்சல் தரும் கேழ்வரகு பயிரிடுவது எப்படி?

ஒரு காலத்தில் ஏழை எளியவர்களால் மட்டுமே உணவாக உண்ணப்பட்டு வந்த கேழ்வரகு, இன்று மாடமாளிகைகளில் வாழும் செல்வந்தர்களாலும், உயர்நிலையில் உள்ளவர்களாலும் பல்வேறு வகைகளில் உணவாகப்பயன்படுத்தப்படும் நிலையை அடைந்துள்ளது! இதற்குக் காரணம், கேழ்வரகில் அரிசியைவிட அதிக ஊட்டச்சத்து உள்ளது என்பதைச் செல்வந்தர்களும், உயர் நிலையில் உள்ளவர்களும் உணர்ந்து கொண்டதேயாகும்! இதன் காரணமாகவும், அண்மையில் பருவமழை பொய்த்ததனுல் புன்செய் தானிய உற்பத்தி வெகுவாகக் குறைந்துவிட்டதன் காரணமாகவும், தற்பொழுது கேழ்வரகின் தேவை பெருகியுள்ளது. எனவே, உணவுப் பற்ருக்குறையும், ஊட்டச்சத்து பற்ருக்குறையும் நிலவும் இக்காலத்தில், நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் கேழ்வரகு பயிரிடுவது, நாட்டிற்குச் செய்யும் நல்ல சேவையாக அமையும் என்ருல் மிகையல்ல!

தற்பொழுது பொதுவாக நீர்ப்பாசன வசதி குறைவாக உள்ளது. பல இடங்களில் கிணறுகளின் மூலம் கிடைக்கும் நீரும் உவராக அல்லது உப்பாக உள்ளது. இந்த நிலைமைக்கு ஏற்ற பயிர் எது என்று சிந்தித்துப் பார்த்தால், கேழ்வரகு சிறந்தது என்பது தெரியவரும். ஏனெனில்,

(1) கேழ்வரகு 100 முதல் 110 நாட்களுக்குள் ஏக்கருக்கு 2,500 கிலோ தானிய மகசூல் தரவல்லது.

(2) கேழ்வரகு பயிரிட, நெல்லிற்குப் பாய்ச்சுவதுபோல் அதிக அளவில் தண்ணீர் பாய்ச்சத் தேவையில்லை. கேழ்வரகு பயிருக்குத் தண்ணீர் தேங்கி நிற்கக்கூடாது.

(3) களர் நிலத்தில்கூட கேழ்வரகு நன்கு வளர்ந்து, நல்ல பலன் தரக்கூடியது.

(4) கிணற்று நீர் உவராக அல்லது உப்பாக இருந்தாலும் அதைக் கொண்டு கேழ்வரகு பயிரிடலாம். (உவர் அல்லது உப்பு நீரில் மற்ற பயிர்கள் நல்ல பலன் தருவதில்லை.)

(5) எல்லா மாவட்டத்திலும் மார்கழி முதல் பங்குனி வரையான காலத்தில் (ஜனவரி முதல் ஏப்ரல்வரை) பயிரிட ஏற்றது.

எனவே, கேழ்வரகு பயிரிடுதல் ஒரு பயனுடைய செயல் என்பதில் ஐயமில்லை!

கேழ்வரகு, ஆண்டு முழுவதும் பயிராகக் கூடிய பயிர் எனினும், அதிக மகசூல் பெற கோடைப் பருவத்தில் கேழ்வரகு பயிரிடுவதே சிறந்தது! கேழ்வரகில் உயர்ந்த மகசூல் பெற முக்கியமாகப் பின்கண்ட 4 சாகுபடி முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

(1) உயர்விளைச்சல் தரும் கேழ்வரகு ரகங்களைப் பயிரிட வேண்டும்.

(2) ஏக்கருக்கு 1,74,000 பயிர்கள் இருக்குமளவுக்குக் கேழ்வரகுப் பயிர்களை 15 சென்டி மீட்டர்×15 சென்டி மீட்டர் (6 அங்குலம் × 6 அங்குலம்) இடைவெளியில் நட வேண்டும்.

(3) கேழ்வரகு நாற்றுகளை இரண்டுநாள் தாமதமாக நட்டால்கூட 10 முதல் 15 சத மகசூல் குறைந்துவிடும். வயது முதிர்ந்த நாற்றுகளை நட்டால் மற்ற சாகுபடி முறைகளை எல்லாம் முறையாக மேற்கொண்டாலும்-ஏக்கருக்கு 2 குவிண்டால் அளவு மகசூல் (மதிப்பு ரூபாய் 200) குறைந்துவிடும் என்பது ஆராய்ச்சிகளின் மூலம் தெரியவருகிறது. எனவே, கேழ்வரகு நாற்றுகளை 18 முதல் 22 நாட்கள் வயதில் நட்டுவிட வேண்டும்.

(4) குலைநோய்த் தாக்குதலால் கேழ்வரகின் மகசூல் பெருமளவில் பாதிக்கப்படுகிறது. போதிய இரசாயன உரமிட்டதால், நன்கு திடமாக வளர்ந்துள்ள கேழ்வரகுப் பயிர்களில், குலைநோய் தாக்குவதில்லை என்று தெரியவருகிறது. எனவே, குலைநோயைக் கட்டுப்படுத்தத் தகுந்த பயிர்ப்பாதுகாப்பு முறைகளை மேற்கொள்வதுடன், போதிய இரசாயன உரமிட்டும் கேழ்வரகு பயிரிட வேண்டும்.

**கேழ்வரகு சாகுபடி முறைகள்:**

**பருவம்:** மார்கழி முதல் பங்குனி வரை (ஜனவரி முதல் ஏப்ரல் வரை).

**ஏற்ற ரகம்:** கோ. 7, கோ. 10, பி.ஆர். 202, 'சாரதா' ஆகிய உயர்விளைச்சல் தரும் ரகங்களைப் பயிரிடுவதே சிறந்தது.

**வயது:** கோ. 7—100 நாட்கள். கோ. 10—90 முதல் 95 நாட்கள். பி.ஆர். 202—105 முதல் 110 நாட்கள். 'சாரதா' -105 நாட்கள்.

**விதை அளவு:** ஒரு ஏக்கர் நடவு செய்வதற்கு 1.5 முதல் 2 கிலோ விதையை 3 சென்ட் நாற்றங்காலில் விதைக்க வேண்டும்.

**மருந்து கலத்தல்** : ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்' அல்லது 'செரசான்' மருந்து வீதம் கலக்கவும்.

**நாற்று விடுதல்** : நாற்றங்காலை நன்கு புழுதியாக உழவும். கடைசி உழவில் 3 சென்ட் நாற்றங்காலுக்கு ஒரு வண்டி (500 கிலோ) தொழு எரு அல்லது கலவை எரு வீதம் இடவும். பிறகு நாற்றங்காலில் 4 அடி அகலமுள்ள

மேடைப் பாத்திகள் அமைக்கவும். பாத்திகளின் மேல் 0:5 கிலோ பி.எச்.சி. 10 சதத் தூளைத் தூவவும். பிறகு விதைகளை ஒரே சீராக விதைத்து, மண்ணைக் கிளறி மூடவும். அதன்பின் தண்ணீர் விடவும். விதைத்த 3-வது நாள் முளை நீர் விடவும். பிறகு வாரம் ஒருமுறை தண்ணீர் விடவும்.

விதைத்த 11 முதல் 15 நாட்களில் 3 செண்ட் நாற்றங்காலுக்கு 6 கிலோ அமோனியம் சல்பேட் இட்டால், நாற்றுகள் நன்கு தடிப்பாக வளரும்.

நாற்று பறிப்பதற்கு 3 நாட்களுக்கு முன்பாக, 3 செண்ட் நாற்றுக்கு, 5 மில்லி லிட்டர் பாரத்தியான் மருந்தையும், 25 கிராம் தாமிரப் பூசணக் கொல்லி மருந்தையும், 10 லிட்டர் தண்ணீரில் கரைத்துத் தெளிக்கவும்.

**நடவு வயல்:** ஏக்கருக்கு 20 வண்டி தொழுஎரு விட்டு, நிலத்தை நன்கு உழுது புழுதியாக்கவும். கடைசி உழவில் இரசாயன உரமிடவும். பிறகு நீர்பாய்ச்சுவதற்கு வசதியாக வயலில் பாத்திகள் அமைத்துக்கொள்ளவேண்டும்.

**அடியுரம்:** கடைசி உழவில், ஏக்கருக்கு 18 கிலோ தழைச் சத்து, 18 கிலோ மணிச்சத்து, 18 கிலோ சாம்பல் சத்து அளிக்க, 106 கிலோ 17:17:17 'விஜய்' காம்ப்ளெக்ஸ் உரமிடவும். அல்லது 40 கிலோ யூரியா, 112 கிலோ சூப்பர் பாஸ்பேட், 30 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவற்றை இடவும்.

**நடுதல்:** 18 முதல் 22 நாட்கள் வயதில் நாற்றுக்களை நட்டு விடவேண்டும் பாத்திகளில் தண்ணீர் விட்டபின், வரிசைக்கு வரிசை 6 அங்குல இடைவெளியும், வரிசையில் பயிருக்குப் பயிர் 6 அங்குல இடைவெளியும் விட்டு நட வேண்டும்.

**பாசானம்:** நடவு செய்த 4-வது நாள் உயிர் நீர் விடவும். பிறகு தேவைக்கு ஏற்ப வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்சவும். எக்காரணம் கொண்டும் தண்ணீர் தேங்கி நிற்கக் கூடாது.

**பின்செய் நேர்த்தி:** நடவு செய்த 3-வது வாரத்தில் ஒரு முறையும், 6-வது வாரத்தில் ஒரு முறையும் களை எடுக்கவும்.

**மேலுரம்:** நடவு செய்த 25 முதல் 35 நாட்களில் ஏக்கருக்கு 18 கிலோ தழைச்சத்து அளிக்க 90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 40 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

**பயிர்ப் பாதுகாப்பு:** 'வேர்ப் புழு' தாக்கினால் 1 கிலோ 'பி.எச்.சி. 50 சதம்' மருந்தை 65 லிட்டர் தண்ணீரில் கரைத்து, தாக்கப்பட்ட இடங்களில் ஊற்றி மண்ணை நனைக்கவும்.

கேழ்வரகு பயிரின் தோகைகளில் 'அசுவணி, பூச்சிகள் தாக்கினால், ஏக்கருக்கு 10 கிலோ 'பி.எச். சி. 10 சதம்' தூளைத் தூவவும்.

தண்டுப்புழுவைத் தடுக்க 100 மில்லி லிட்டர் 'என்ட்ரின்' மருந்தை 100 லிட்டர் தண்ணீரில்கலந்துதெளிக்கவும்.

கதிர் நாவாய்ப் பூச்சியை ஒழிக்க ஏக்கருக்கு 5 கிலோ 'பி.எச்.சி. 10 சதம்' தூளையும், 5 கிலோ 'டி.டி.டீ. 5 சதம்' தூளையும் கலந்து தூவவும். குலை நோயைத்தடுக்க, 'செரசான்-சுண்ணாம்புக்' கலவையை நடவு செய்த 3-வது வாரத்தில் இருந்து 15 நாட்களுக்கு ஒருமுறை வீதம் 3 முறை தூவ வேண்டும். ஏக்கருக்கு ஒவ்வொரு முறையும் 9 கிலோ செரசான்-சுண்ணாம்புக் கலவையைத் தூவ வேண்டும். அல்லது 300 மில்லி லிட்டர் 'ஹினோசான்' மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து மேற்கூறிய காலத்தில் தெளிக்கவும்.

குதிரைமேல் இருப்பவர் எந்த ஊர் ஜமீன்தாரும் அல்ல! ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர். 1892ல் எடுக்கப் பட்ட படம் இது.




இந்தப் படத்திலிருப்பவர்கள் காவலர்கள். இடதுபுறம் நிற்பவர் போலீஸ் இன்ஸ்பெக்டர். 1892ல் காவலர்களுக்கு இந்தச் சீருடை இருந்தது.

# பாதுகாப்பு வலுப்பெற!
# பன்மடங்கு களிப்புற!



தமிழர் வீரத்துக்கு எடுத்துக்காட்டாக
அமைந்துள்ள கட்டபொம்மன் கோட்டை

**பெற்றிடுவீர்!**
**பெற்றிடுவீர்!**
## பெற்றிடுவீர்!

முதல் பரிசு :
## ரூ. 1,00,000
(ஒவ்வொரு வரிசைக்கும்)

செலவு ஒரு ரூபாய்

வரவோ லட்ச ரூபாய்

**இன்றே வாங்குங்கள்**
## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும்.
மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

**72-வது குலுக்கல் நாள் :**
## 30-1-1975

**பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்**

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
இயக்குநர், சிறு சேமிப்புத் திட்டம் (பரிசுச் சீட்டு)
சென்னை-600002
விளம்பர வெளியீடு : இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு,
சென்னை-600009.

## "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

ஆம்! உழவுக்குப் பல ஆண்டு காலமாக சீரிய கலப்பு வீரிய ரக விதைகளை அரசு விநியோக நிலையங்கள் மூலமாகவும், நேரடியாகவும் தந்து உழவர் தம் குறை நீக்கி மகசூல் நிறை கொடுத்து, தமிழக உணவு உற்பத்திக்கு ஊக்கம் அளித்து வருகிறோம். மேலும், உயர் விளைச்சல் ரக காய்கறி மற்றும் தானிய வகை விதைகளையும், உற்பத்தி செய்து வருகிறோம். அமோக விளைச்சல் தரும் ''வரலக்ஷ்மி'' வீரிய ஒட்டுப் பருத்தி விதைகளும் எமது உற்பத்திகளில் ஒன்று.

• • •

மிகச் சிறந்த விதைகளையே நாடும் உழவர் குழாம் மாருதி விதைகளையே தேர்ந்தெடுக்கின்றனர்.

மாருதி விதைகள் தரமானவை. தூய்மையானவை. முளைப்புத் திறன் மிக்கவை.

# மாருதி இண்டஸ்ட்டிரி,

வீரியவிதை உற்பத்தியாளர்கள்,
கள்ளப்பாளையம், செட்டியார்பாளையம்,
**கோவை-641201.**

மாருதி விதை விநியோகஸ்தர்கள்:
காமதேனு விவசாய நிலையம்,
டவுன்கால் அருகில்,
கோயம்புத்தூர்-1.



# நிலையான பொருட்காட்சி நிறுவிடுவோம்

## முதல்வர் கலைஞர்

"பொருட் காட்சியைச் சென்ற ஆண்டு நடத்திய அதே இடத்தில் இந்த ஆண்டும் நடத்தி இருந்தால் செலவும் குறைந்திருக்கும். நீண்ட தொலைவிற்கு இந்தக் குறிப்பிட்ட இடத்திற்கு வந்து காணுகின்ற சிரமத்திலிருந்து பொது மக்களையும் விடுவித்திருக்க முடியும்.

சென்ற ஆண்டு நாம் பொருட்காட்சி நடத்திய இடம் மத்திய அரசினுடைய பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமான இடம்; எவ்வளவோ முறை தமிழக அரசின் சார்பாக அந்த இடம், இந்த ஆண்டும் பொருட்காட்சி நடத்தத் தேவை என்று எடுத்துச் சொல்லப்பட்டும், அந்த ஒரு சாதாரண விஷயத்தில்கூட தமிழக அரசின் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. அதிலே சிக்கல்கள் இருந்தாலும், அவைகளைச் சுலபமாகத் தீர்த்து, பொருட்காட்சி நடத்துவதற்கு வழங்கியிருக்க முடியும். வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதற்காக நம்முடைய வருத்தத்தைத் தெரிவிக்காமல் இருக்க முடியாது.

ஆசைத்தம்பி அவருடைய பெயருக்கேற்பப் பல ஆசைகளை இங்கே வெளியிட்டார். இந்த இடம் நிலையான பொருட்காட்சி நடத்துவதற்குரிய இடமாக மாற்றித் தரப்பட வேண்டும் என்கிற கோரிக்கையைத் தமிழக அரசுக்குத் தெரிவித்தார்.

இது இப்போது வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான இடமாகும். மத்திய அரசு, பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமான இடம் என்று கூறித் தப்பித்துக் கொண்டதைப்போல நானும் தப்பித்துக் கொள்ளப் போகிறேனு என்று யாரும் நினைக்க வேண்டாம். வீட்டுவசதி வாரியம் இந்த இடத்திலே என்னென்ன காரியங்களைச் செய்யத் திட்டமிட்டு இருக்கிறது என்பதை அந்தத் துறையோடு விவாதித்து, சிக்கல்கள் இருந்தால் அதைக் காரணமாகக் காட்டித் 'தர இயலாது' என்று சொல்லாமல் நிச்சயமாக ஒரு நிலையான பொருட்காட்சி நடத்துவதற்கு இந்த இடத்தை வழங்குவதற்குத் தமிழக அரசு முயலும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பல சரித்திரப் புகழ்மிக்க இடங்கள், புராதனச் சின்னங்கள், இவைகளை எல்லாம் இன்றைக்கு மத்திய அரசு தன்னுடைய பொறுப்பில் வைத்துக்

கொண்டிருப்பதால், சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தக்க அளவிற்கு, அந்த இடங்களை அழகுபடுத்தவோ, வரலாற்றுச் சின்னங்கள் என்று வெளிநாட்டுக்காரர்களுக்கு அறிமுகப்படுத்திடவோ முடியாமல் இருக்கிறது.

மாமல்லபுரத்தை எடுத்துக் கொண்டாலும், தஞ்சைக் கோவிலை எடுத்துக் கொண்டாலும், இன்றைக்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் கலனாகிக் கொண்டிருக்கிற கங்கைகொண்ட சோழபுரத்தை எடுத்துக் கொண்டாலும், இவைகள் எல்லாம் சரித்திரச் சின்னங்கள்; கங்கைகொண்ட சோழபுரம் தமிழ்நாட்டு மன்னர்களுடைய வீரத்தை உலகத்திற்கு முரசறைந்து காட்டிக்கொண்டிருக்கிற இடம், சோழ மன்னர்களுடைய கலை ஆர்வத்தை வெளிப்படுத்துகின்ற இடம்தான் தஞ்சைக் கோவிலாக அமைந்திருக்கிறது. பல்லவ மன்னர்களுடைய வரலாறுகளை விளக்குகின்ற இடமாக மாமல்லபுரம் அமைந்திருக்கிறது.

ஆசைத்தம்பி குறிப்பிட்டதைப் போல, பாழடைந்த காவிரிப்பூம்பட்டிணத்தில் ஒரு புதிய பூம்புகாரை உருவாக்கி இருக்கிறோம். பாஞ்சாலங்குறிச்சியில் ஒரு கோட்டையை நிர்மாணித்திருக்கிறோம். அதே போல வள்ளுவருக்கு ஒரு நினைவாலயத்தை எழுப்பத் திட்டமிட்டிருக்கிறோம்; அந்தப் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன. அந்த அடிப்படையில் பார்த்தால் நான் மேலே குறிப்பிட்ட இடங்கள் தமிழக அரசின் நேரடிப் பார்வையில் இருக்குமானால் எந்த அளவிற்கு அவைகள் எல்லாம் மேன்மைப்படுத்தப்பட்டிருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

மத்திய அரசு சொல்கிற சமாதானம், இவைகள் எல்லாம் தொன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதாகும். அதை உணராதவர்கள் அல்ல நாம். அழிந்து போன இடத்தில்தான் பூம்புகாரைக் கட்டி இருக்கிறோம். எதுவுமே இல்லாத இடத்தில்தான் கட்டபொம்மன் கோட்டையை எழுப்பியிருக்கிறோம். இருக்கின்ற இடத்தில் தஞ்சைக் கோவிலை இடித்துவிட்டு புதுக் கோயில் யாரும் கட்டப் போவதில்லை. இருப்பதை அழிந்துவிடாமல் காப்பாற்றத்தான் நாம் முனைவோம்.

இவை நம்முடைய நேரடிப் பார்வையில் இல்லாத காரணத்தால், இவைகளை வெளிநாட்டுக்காரர்கள் கண்டு மகிழத்தக்க வகையில் சுற்றுலா இடங்களாக நாம் அமைத்திருக்க முடியும்.

''என்னென்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள். நாங்கள் செய்கிறோம்'' என்று சொல்லுகிறார்கள். பல ஆண்டுக் காலமாகச் சொல்லி வருகிறோம். ஒலி-ஒளி அமைப்பு- இப்போது டெல்லி செங்கோட்டையில் இருப்பதைப்போல— மதுரையில் அமைப்பதாகச் சொன்னார்கள். நாம் ஆவலோடு எதிர்பார்த்தோம். மதுரையில் எல்லாக் கட்சிக்காரர்களும் அதை வரவேற்றார்கள்.

ஆனால் யாரோ இரண்டு பேர், பக்தர்கள் என்ற பெயரில், மதுரை ஆலயத்தில் இருக்கிற ஆயிரங்கால் மண்டபத்துக்கு மேல் இந்த ஒலி-ஒளி அமைக்கப்படுமானால் யாரும் காலணி அணிந்து கொண்டு செல்லக்கூடும். கீழே ஆண்டவன், மேலே மனிதர்கள் இருக்கலாமா என்று கேட்டார்கள். அந்த இரண்டு பேருடைய வேண்டுகோளால் அந்தத் திட்டமே மாற்றப்பட்டது; அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

பிறகு எங்கேதான் வைக்கப் போகிறீர்கள் என்று கேட்டோம். மாமல்லபுரம் தகுதியான இடம் என்றும் அங்கே வைக்கப் போகிறோம் என்றும் சொன்னார்கள். சரி என்று காத்திருந்தோம். இப்போது நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது — மாமல்லபுரத்திலும் அந்த ஒலி-ஒளி அமைப்பு இல்லை என்கிற செய்தி— நமக்குக் கிடைத்திருக்கிறது.

இவைகளை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், இப்படிப்பட்ட பொறுப்புகள் நம்மிடம் இருக்குமானால், இன்னும் சிறப்புறச் சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தக்க அளவிற்கு, அந்நியச் செலாவணியைப் பெறத் தமிழ்நாடும் பெரும்பங்கேற்றது என்று சொல்லத்தக்க அளவிற்குக் காரியங்களைச் செய்ய முடியும். ஆனால் அதற்கான அதிகாரம் நம்மிடம் இல்லை. பொறுப்புகளைக் கேட்டாலும் தருவதற்கு மத்தியில் இருப்பவர்கள் தயாராக இல்லை. இதையெல்லாம் நீங்கள் அனைவரும் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**5-1-1975 அன்று**
பொங்கல் சுற்றுலாப் பொருட்காட்சி
திறப்பு விழாவில்
முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.

# தொலைக் காட்சி எழுத்தாளர் கருத்தரங்கு

தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத்துறையால் சென்னை அடையாறு தொழில்நுட்ப ஆசிரியர்-பயிற்சி நிறுவனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தொலைக்காட்சி எழுத்தாளர்கள் கருத்தரங்கு 10-12-74 காலை 10 மணிக்குத் தொடங்கியது.

கருத்தரங்கில் கலந்து கொண்டபல்வேறுதுறையினைச் சார்ந்த எழுத்தாளர்களைத் தொழில்நுட்ப ஆசிரியர்பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் பேராசிரியர் ஏ.டி. ஜம்புலிங்கம் வரவேற்றார்; வருங்காலத்தில் மக்களுக்குத் தொலைக்காட்சி ஆற்றக்கூடிய பணிகளையும் பயன்களையும் விளக்கிக் கூறினார்.

தலைமையேற்ற செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. எம்.பரமசிவம் இந்தக் கருத்தரங்கத்தின் நோக்கங்களை எடுத்துக்கூறி தமிழ்நாடு அரசு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைச் சிறப்புடன் அமைக்க வகுத்துள்ள திட்டங்களை விளக்கினார்.

கருத்தரங்கு நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்த ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் சிறப்புச் செயலாளர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம் ''மக்களுடன் நெருக்கமான தொடர்பு கொள்ள தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பயன்படும்''. சென்னையில் அமையவிருக்கும் தொலைக்காட்சி நிலையத்தின் நிகழ்ச்சிகள் செம்மையுடன் அமைய இந்தக் கருத்தரங்கம் நன்கு பயன்படும்'' என்று கூறினார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை உதவி இயக்குநர் திரு. சி.என். கிருஷ்ணபாரதி நன்றி கூறினார்.



# போர்வீரர் மனைவியர்க்கு அரசு தரும் உதவிகள்

**த**மிழக முப்படை வீரர்கள் நலவாரியத் (Soldiers Sailiors Airmens) தின் குவிநிதி (Amalganated Fund) யிலிருந்து ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களுக்கும் அவர்களது குடும்பத்தவர்க்கும் ரூபாய் 2,500 (ஒவ்வொருவருக்கும்) ஒதுக்கப்பட்டுள்ளதோடு மரணமடைந்த வீரர்களின் மனைவியவர்களுக்கு ரூபாய் 1,000, 10 ஆண்டுகள் வரை கொடுக்கப்படவிருக்கிறது. முப்படை வீரர்கள் நலவாரியம் இளநிலை நிரந்தர வீரர்களு (3cos) டைய மனைவியர்க்கும் பிறநிலை வீரர்களின் மனைவியர்க்கும் தையற்கலை மற்றும் பயன்தரக்கூடிய பிற தொழில்களில் பயிற்சி பெற ஏற்பாடுகள் செய்துள்ளது.

இந்திய எண்ணெய் நிறுவனம் (Indian Oil Corporation) மரணமடைந்த வீரர்களின் மனைவியர் எண்ணெய் முகவம் (Kerosene Agency) எடுத்துத் தொழில் புரிய வட்டி இல்லாத (எளிதான தொகைகளில் திரும்பத் தரக்கூடிய) கடனுதவி ரூபாய் 45,000 வரை அளித்து வருகிறது. இதுவரை 49 முகவங் (Agency) கள் கொடுக்கப்பட்டுள்ளன. சிலருக்கு முப்படை வீரர்கள் வாரியத்தின் கடன்கள் மிகச் சிறிய வட்டி விகிதத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

காயமுற்று இராணுவத்திலிருந்து விடுவிக்கப்பட்ட (Discharged Personnel) வீரர்கள் ஒவ்வொருவருக்கும் முப்படை வீரர்கள் வாரியம் ஆண்டொன்றுக்கு ரூபாய் 500 அளித்து வருவதோடு மாநில மைய அரசுகளும் வழக்கமான சிறப்புதவிகளையும் சலுகைகளையும் கொடுத்து வருகின்றது.

மைய அரசு அளித்து வரும் ஓய்வூதியம் (Pension) கல்விச் சலுகைகள், பிற சலுகைகள் தவிர 1971 டிசம்பர் இந்திய பாகிஸ்தானியப் போரில் வீர மரணம் எய்திய போர் வீரர்களின் ஒவ்வொருவரது குடும்பத்திற்கும் மாநில அரசு ரூபாய் 5,000 சிறப்புதவிப் பணமாகவும், அக்குடும்பங்களில் கல்விபயிலும் நிலையிலிருப்பார்க்குக் கல்லூரிவரை இலவசக் கல்வியும் அளித்து வருகின்றது.

மாநில அரசு தமிழகத்தைச் சார்ந்த, போரில் மரணமடைந்த வீரர்களின் குடும்பத்தவர்க்கு 3 ஏக்கர் புஞ்சை நிலம் அல்லது 1.5 ஏக்கர் நஞ்சை நிலமும் அளித்து உதவி புரிந்துள்ளது.

தமிழகத்தைச் சார்ந்த 118 போர் வீரர்கள் (இவர்களில் எட்டு உயர்நிலை அலுவலர்கள்) டிசம்பர் போரில் கொல்லப்பட்டுள்ளனர்.

மைய அரசு இதுநாள் வரை கொடுக்கப்பட்டு வந்த ஓய்வூதியத் தொகையை உயர்த்தியுள்ளது. அதாவது இறக்குந்தறுவாயில் வீரர்கள் பெற்று வந்த அடிப்படைச் சம்பளத்தில் நான்கில் மூன்று பகுதியை வீரர்கள் இறக்காதிருந்தால் சாதாரணமாக எந்த ஆண்டில் ஓய்வு பெறுவார்களோ அந்த ஆண்டுவரை இறந்த வீரர்களின் குடும்பத்தவர்க்கு அளித்து வருகின்றது.

இவ்வகையினைச் சார்ந்த வீரர்கள் சிலர் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் அரசுத் துறைகள் பிறவற்றில் அலுவல் புரிந்திடவும் வாய்ப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.



சொந்தத் திருநாட்டைத் தீயோர் கரங்களினின்றும் காப்பாற்ற, இன்னுயிரைத் தந்து இலக்கியமானவர்களையும், களத்திற் காயமுற்று ஊனம் கொண்டவர்களையும் நாடும் மக்களும் மறந்துவிடாமல், அவர்களது குடும்பத்தவர், குழந்தைகள், மனைவியர் அவர்களது இழப்பினை உணராது வாழ்ந்திட வகை செய்து வருவது, செய்நன்றி மறவாச் சீரிய பண்பைக் காட்டுவதாகும். எவ்வகையிலும் தனிப்பட்ட அவர்களது இழப்பை ஈடுசெய்வது இயலாதாயினும் பெருமையோடு அவர்களது ஆன்மாக்களுக்கும் வீரத்திற்கும் செலுத்தப்படும் சிறு காணிக்கைகளாக இத்தகைய அரசு, பிற அமைப்புகளின் உதவிகள் இருக்கின்றதல்லவா?

''இன்னுயிரைந் தந்தோரே
இன்னல்பல கண்டோரே
புவியுள்ள நாள்வரையும்
இதயத்தே உமைத் தொழுவோம்''.

— அ. ம.